# காத்துக்கொண்டால் காத்துக்கொள்வேன்!



PR. ROMILTON

வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாழ்களை முறித்து அந்தகாரத்திலுள்ள பொக்கிஷங்களும் ஒளிப்பிடத்திலுள்ள புதையல்களுமான ஜெயங்கொண்ட சாட்சிகளைக் காண்பிக்கும்படியாய் பூமியின் இருண்ட அறைகளுக்குள் நம்மை இட்டுச் செல்கிறது இந்தக் குரல்..



# காத்துக்கொண்டால் காத்துக்கொள்வேன்!

PR. ROMILTON

# காத்துக்கொண்டால் காத்துக்கொள்வேன்!



போதகர் ரிச்சர்ட் உம்பிராண்ட் அவர்களின்
**THE OVERCOMERS** புத்தகத்தின்
சுருக்கப்பட்ட தமிழாக்கம்

*தமிழில்*

**PR. ROMILTON**



**புத்தகங்கள் கிடைக்குமிடம் :**


அடைபட்ட அக்கினி

246-B, POCKET-C, MAYUR VIHAR,
PHASE-2, DELHI-110 091.
MOB: 98106 46981 / 99901 03010

# உள்ளே


1. சைபீரியப் பனியையும் உருக்கிவிடும் வல்லமை அன்புக்கு மாத்திரமே உண்டு ---------------- 002

2. ஏய்! எனக்கு ஞானஸ்நானம் குடு.. இல்லன்னா சுட்ருவேன்! ---------- 005

3. விசுவாசத்தில் பெலவீனமானவர்களிடம் பொறுமை காண்பியுங்கள்---- 011

4. மரியாளுக்கு தூதன் நற்செய்தி சொன்ன நாள் போன்ற ஓர் நன்னாள் --- 015

5. சொந்த வாழ்க்கை என்று சொல்லிக் கொள்வதற்கு எங்களுக்கு ஒன்று இல்லை - அதை இழப்பதற்கு! ---------------- 018

6. பாப்ட்டிஸ்ட் விசுவாச வீரர்கள் ---------------------------- 022

7. ஆர்த்தடாக்ஸ் சபை இரத்தசாட்சிகள் -------------------------- 026

8. கொடும் பயங்கரங்களின் மத்தியிலும் உயர்ந்து நின்றவர்கள் ---------- 029

9. கண்ணாடியாய்க் காணப்படும் தேவதூதர்கள் - (பகுதி-1) ------------ 033

10. கண்ணாடியாய்க் காணப்படும் தேவதூதர்கள் - (பகுதி-2) ------------ 036

11. சபை சரித்திரத்தின் பிரபல பிச்சைக்காரர் ------------------------ 039

12. வெவ்வேறு தரங்களிலும், தளங்களிலும் மரித்த இரத்தசாட்சிகள் ------ 042

13. விசுவாசத்தினால் மாத்திரமே மேற்கொள்ள முடியும் ---------------- 046

14. சொல்லிமுடியாத சித்ரவதைகள் ---------------------------- 050

15. மனதை மயக்கும் போதை மருந்துகள் ------------------------ 054

16. கள்ளப் போதகர்களின் பொய்ப் புகழ்ச்சி ------------------------ 058

17. சமரசமும் குற்றவுணர்வும் -------------------------------- 061

18. மூன்று விருட்சங்களின் உவமானம் -------------------------- 064

19. பாடுகள், ஒரு வெற்றிகொள்ள முடியாத தடையல்ல ---------------- 068

20. தைரியம் நிறைந்த கன்னியாஸ்திரீகள் ------------------------ 072

21. அடுத்தவரின் குற்றத்தைத் தானே ஏற்றுக்கொண்டு பாடுபடுதல் ---------- 075

22. புனித வாழ்வைத் தெரிந்தெடுக்க ஒரு வாய்ப்பு ---------- 078

23. இயேசுவின் தோட்டத்தில் ஒரு சிறுமலர் ---------- 083

24. ஆகச்சிறந்த முன்னுதாரணமான சீனப் பெண்பிள்ளைகள் ---------- 086

25. கிறிஸ்துவோடு அடையாளம் காணப்படுதல் ---------- 089

26. சீன விசுவாச வீரர்கள் ---------- 092

27. இரத்தசாட்சிகளின் குடும்பங்களிலிருந்து வந்த கடிதங்கள் ---------- 098

28. எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு.. ---------- 103

29. ரிச்சர்ட் உம்பிராண்ட் பற்றி.. ---------- 107

30. சபீனா உம்பிராண்ட் பற்றி.. ---------- 111

# என்னுரை



**கம்யூனிசச் செம்படையின் இரும்புக்கரக் காலங்கள்..**

**ருமேனியாவின் இரும்புத்திரைச் சுவர்களுக்குப் பின்னே..**

**வெளி உலகால் மறக்கப்பட்ட மனிதர்கள்..**

**ஊழியர்கள்..கிறிஸ்தவர்கள்..**

**அங்கே..**

புறங்கைகள் விலங்கிடப்பட்டிருக்க, முழங்காலில் குனிந்த நிலையில், தரையில் வீசியெறியப்பட்டிருக்கும் ரொட்டிகளைப் பன்றிகளைப் போலத் தின்று, சுடச்சுட சூடான சூப்பை அதே நிலையில் குடிக்க நிரப்பந்திக்கப்பட்டு, கடைசித் துண்டு ரொட்டியைக்கூட நாவால் நக்கி நக்கி எடுத்து, தங்கள் பாத்திரங்களையும் தங்கள் வாயாலேயே சுத்தம் செய்ய வேண்டிய அந்த நிர்ப்பாக்கிய நிலையையும் தாண்டி ஜெயித்து ஜெயம் கொண்டு நின்ற ஒரு ஜனம் !

நாள் முழுவதும் கால் நீட்டிய நிலையில்,கைகள் முழங்காலைத் தொட, தலை மேல் நோக்கி, இங்குமங்கும் அசைய உத்தரவின்றி, இப்படியே தொடர்ந்து 16 மணி நேர வதைக்குப் பின் தூங்க அனுமதிக்கப்பட்டாலும், தலை மேல் நோக்கி, கால் நீட்டி, கைகள் முழங்காலைத் தொடும்படி நீட்டப்பட்ட நிலையிலேயே இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டும், அதையும் தாண்டி முற்றிலும் ஜெயம் கொண்டு நின்ற ஒரு ஜனம்..

16 கைதிகள் (ஊழியர்களும் விசுவாசிகளும்) ஒருவர் மேல் ஒருவர் படுக்க வைக்கப்பட்டு, சரீர அழுத்தம் தாங்காமல், எல்லாருக்கும் கீழே கிடத்தப்பட்டவரின் அடிவயிறு அழுத்தப்பட்டு, கழிவறையிலே நடக்க வேண்டியது சிறையறையிலேயே நடந்துவிட, அதையும், தன் உள்ளாடையையும் தன் வாயாலேயே சுத்தம் செய்ய பலவந்தப்படுத்தப்பட்டு, அந்த மனிதன் அதை மறுக்க, அவனது கை விரல்கள் கட்டைகளுக்கு இடையே செலுத்தப்பட்டு, நொறுக்கப்படுகின்றன.. அந்நிலையிலும் தன்னை வதைக்கிறவனுக்காக ஜெபித்து, அவனையும் கிறிஸ்துவுக்காக ஜெயித்து ஜெயம் கொண்ட ஒரு ஜனம் !

சிறை வளாகத்தில் ஒரு பெரிய கழிவறைத் தொட்டி.. மலமும் சிறுநீரும் கலந்து நிறைந்து மிதக்க, கழுத்து வரை அதிலே நிற்கும் அளவுக்கு மணிக்கணக்காக அதற்குள்ளேயே நிற்க வைக்கப்படும் ஒரு விசுவாசி.. தன்னிலை மறந்து, தன்னிலே அன்புகூறுகிற அவராலே அனைத்தையும் ஜெயம் கொண்டு நின்ற ஒரு ஜனம் !

'வாயைத் திற..!' துப்பாக்கியை வாய்க்குள் செலுத்தி..'இன்று இது தான் உனக்கு இராப்போஜனம்..' என்று சுட, குண்டு வாய் வழியே பின்பக்கமாய்ப் பாய்கிறது.. செத்து விழுந்தாலும், துணிந்து நின்று ஜெயம் கொண்ட ஒரு ஜனம் !

சிறையில் அடைக்கப்பட்ட கத்தோலிக்கக் கன்னியாஸ்திரீகள் மூலம் கூட அநேகக் கம்யூனிஸ்ட்டுகளின் குடும்பங்களில் தேவன் அற்புதங்களைச் செய்தது ஒரு பக்கமிருக்க, அதே கன்னியாஸ்திரீகள் கம்யூனிச பாசிசத்துக்குத் தலைவணங்க மறுத்து நின்றபோது, கொல்லும் சைபீரியக் குளிரின் கான்ஸன்ட்ரேஷன் கேம்ப்புகளில் அவர்களது மதிப்பிற்குரிய உடைகள் உரியப்பட்டு, நிற்க வைக்கப்பட்ட கொடூரத்திலும் தங்கள் நேசருக்காய் வைராக்கியமாய் நின்று சாதித்து, தங்களைக் கொடூரப்படுத்தியவர்களையும் தங்கள் சாட்சியினால் கிறிஸ்துவுக்காக ஜெயித்து ஜெயம் கொண்டு நின்ற ஒரு ஜனம் !

ஆணுறுப்பைக் கம்பால் அடிப்பதில் தேர்ச்சி பெற்றிருந்த ஒரு பெண் ஜெயிலர்.. வார்த்தைகளால் வர்ணிக்க இயலா வேதனையிலும், அப்படிப்பட்டவர்களின் மனதையும் கிறிஸ்துவுக்கென்று கொள்ளை கொண்டு வென்று நின்ற ஒரு ஜனம் ! கிறிஸ்துவுக்காக தேவ ஜனங்கள் அனுபவித்துக் கடந்து போன இவைகளெல்லாம் நமது இன்றைய இந்தியக் கிறிஸ்தவம் அறியாதவை ! அறிய விரும்பாதவை ! அறிந்தாலும் ஜீரணிக்க இயலாதவை ! ஆனால் அறிந்தே ஆக வேண்டியவை !!

இவைகள்..முகம் சுளிக்க வைப்பவை..!

எலும்புகளை சில்லிடச் செய்பவை..! 'எங்களுக்கு வேண்டாம்..' என்று வெறுக்க வைப்பவை..! கண்களை மட்டுமல்ல, புத்தகத்தையும் மூடி, தூக்கியெறியச் செய்பவை..! ஆனால் இப்பேர்ப்பட்ட கொடூர சூழலிலும்..

- *தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொண்டவர்கள் இவர்களே!*

- *தங்கள் நற்சாட்சியின் மூலம் தங்களை வதையாய் வதைத்தவர்களையும் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினவர்கள் இவர்களே!*

- *மரணம் நேரிடுகிறதாய் இருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும் சத்துருவை ஜெயித்து நின்றவர்கள் இவர்களே!*

- *மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் இவர்களே!*

- *தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுத்து வெண்ணங்கி தரித்தவர்களாய், தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்துக்கு முன்பாக நின்று அவரை சேவிப்பவர்கள் இவர்களே!*

*ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ..*

*ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ..*

*ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ..*

*..என்று தமது ஏழு சபைகளின் தூதர்களுக்கும் இவர்களைப் பற்றியல்லவோ ஒவ்வொன்றிலும் தெள்ளத் தெளிவாய் எழுதச் சொன்னார்!!*

*கிறிஸ்துவுக்காகப் பதினான்கு ஆண்டுகள் ருமேனிய சிறைச்சாலையின் சித்ரவதை நரகத்துக்குள் சென்று, பாதாளத்தை வென்றவரோடு சேர்ந்து தானும் ஜெயித்து வெளிவந்த போதகர் Richard Wurmbrand அவர்கள் 1999ல் எழுதிய கடைசிப் புத்தகம்* **'THE OVERCOMERS'**

ரிச்சர்ட் உம்பிராண்டின் படுவேதனையில் பரமவெற்றி ஒன்று மட்டுமே தமிழ் கிறிஸ்தவ உலகம் அறிந்தது. ஆனால் அவர் எழுதியுள்ள ஆங்கிலப் புத்தகங்கள் அநேகம் !

கண்ணீரிலும் இரத்தத்திலும் தோய்த்தெடுக்கப்பட்ட பக்கங்கள் ஒவ்வொன்றும் பக்கம் பக்கமாய்க் கதை சொல்லும் ஒரு கதை இது !

நம்மை வெட்கித் தலைகுனியச் செய்யும் நமது தாழ்ந்து போன ஆவிக்குரிய தரங்களைத் தூக்கி உயர்த்தி, நமது திசைமாறிப்போன விசுவாசத்தைத் திசை திருப்பி, 'எனக்காக உன் ஜீவனையும் கொடுப்பாயோ ?' என்று பேதுருவிடம் இயேசு கேட்ட அதே கேள்வியை நம்மிடம் அவர் கேட்கும் கேள்வியாய், நம்மை நாமே கேட்டுக்கொண்டு, நமக்காக ஜீவனைத் தந்த அவருக்காக சகலத்தையும் மறு அர்ப்பணம் செய்ய நம்மை அவருக்கு முன்பாகப் பணிந்து குனிந்து மண்டியிடச் செய்து, நமது ரூபங்களை மறுரூபமடையச் செய்யும் மறக்க முடியாத ஒரு புத்தகம் இது..!

இரும்புத்திரையும் மூங்கில்திரையும் போய், இன்று திரிசூலத்திரைக்குள் தேசமும் சபையும் செல்லப்போகும் நாட்களுக்கு இன்றைய சபையையும் சபையின் இளைய தலைமுறைகளையும் ஆயத்தப்படுத்த எடுக்கப்படும் முயற்சியின் ஒரு சிறு பகுதி இது.

வரலாறு திரும்பும் இந்நாட்களிலே இன்றைய இந்தியத் திருச்சபைக்கு இன்றியமையாத ஒரு புத்தகம் இது..!

'THE OVERCOMERS' என்ற ஆங்கிலப் பதிப்பின் மொழிபெயர்ப்பாக உங்கள் கைகளில்..

**'காத்துக்கொண்டால் காத்துக்கொள்வேன்..!'**

**- Pr. Romilton**

# அத்தியாயம் 01



**சைபீரியப் பனியையும் உருக்கிவிடும் வல்லமை அன்பு ஒன்றுக்கு மாத்திரமே உண்டு!**




**சைபீரியப் பனியையும் உருக்கிவிடும் வல்லமை**
**அன்பு ஒன்றுக்கு மாத்திரமே உண்டு !**

# பிஷப் விக்டர் பேலிக்

**வா**ழும் கலையின் ஞான முதிர்ச்சியின் உயரங்களை மிகச்சீக்கிரமாய் எட்டும் வழிகளில் ஒன்று கிறிஸ்துவின் மேல் வைக்கும் அளவற்ற அன்பே ஆகும். அப்படிப்பட்ட முதிர்ச்சியைப் பெற்றவரான உக்ரேனியக் கிறிஸ்தவரான பிஷப் விக்டர் பேலிக்கை நான் கிஷினேவில் சந்தித்தேன். அவர் கம்யூனிஸ்ட் சிறைகளில் இருபத்து நான்கு வருடங்கள் செலவிட்டிருந்தார். அதில் இருபது ஆண்டுகள் தனிமைச் சிறையில் கழித்திருந்த அவருக்கு அவரது குடும்பத்தினரிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் அந்த வருடங்களில் எந்தத் தகவலும் இல்லாதிருந்தது.

ஒவ்வொரு நாள் மாலையிலும் ஒரு வைக்கோல் படுக்கை அவரது அறையில் போடப்பட்டு அதிலே ஏழு மணி நேரம் மட்டுமே தூங்க அனுமதிக்கப்பட்டிருந்தார் அவர். அடுத்த நாள் காலை அந்தப் படுக்கை எடுத்துச் செல்லப்பட்டுவிடும். அதன் பின் அந்தச் சில்லிட்ட தரையில் கூட நிற்கவோ, உட்காரவோ படுக்கவோ அவருக்கு அனுமதியில்லை. அந்த நாளின் மீதி 17 மணி நேரமும் அவர் சர்க்கஸ் குதிரையைப் போல அந்த செல் அறையில் அங்குமிங்கும் இடைவிடாமல் நடந்துகொண்டே இருக்க வேண்டும்.

தன்னால் இயலாமல் அவர் நின்றுவிட்டாலோ, மயங்கி விழுந்துவிட்டாலோ, அவர் மீது வாளி வாளியாகத் தண்ணீர் வீசப்பட்டோ, அடிக்கப்பட்டோ மறுபடியும் அப்படியே செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டார் அவர். அந்தக் கொடூரத்தில் இருபது ஆண்டுகள் கழித்த அவர், பனி ஒரு போதும் உறையாத வட சைபீரியாவின் கொடுமையான லேபர் கேம்ப்பில் இன்னும் நான்கு வருடங்கள் கழிக்கும்படியாகத் தள்ளப்பட்டார்.

'தனிமைச் சிறையில் அந்தப் பசி பட்டினியின் மத்தியிலும் இத்தனை ஆண்டுகளின் இந்தக் கொடூரப் பாடுகளை எப்படி சகித்தீர்கள் ?' என்று நான் அவரைக் கேட்டேன். 'இயேசு என் இருதயத்தில் மூட்டியிருந்த அன்பின் அக்கினியினாலே சைபீரியப் பனியையும் கரைத்து விடுவேனே!' என்று, தானே இயற்றிப் பாடி வந்த ஒரு பாடலை அவர் என்னுடைய கேள்விக்கு பதிலாகப் பாடிக் காட்டினார். அல்லேலூயா! அதைப் பாடப்பாட அவரது முகம் பிரகாசித்தது. ஆதி சபையின் முதல் இரத்தசாட்சியான ஸ்தேவான் கொல்லப்பட்டபோது அவனது முகம் தேவதூதன் முகம் போலப் பிரகாசித்தது என்று வேதம் சொல்கிறது.

அப்படிப்பட்ட ஒரு மனிதனின் முன்னால் நிற்கத் தகுதியற்றவனாய் நான் எனக்குள் உணர்ந்தேன்.

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

# அத்தியாயம் 02



**ஏய் ! எனக்கு ஞானஸ்நானம் கொடு..
இல்லன்னா உன்ன சுட்ருவேன்..!!**




ஏய் ! எனக்கு ஞானஸ்நானம் கொடு..
இல்லன்னா உன்ன சுட்ருவேன்..!!

# Ann Mary

*'ஏய் ! எனக்கு ஞானஸ்நானம் கொடு.. இல்லன்னா உன்ன சுட்ருவேன்..!! '*

*Ann Mary..*

ஒரு வாலிப ஸ்லோவேக்கிய கிறிஸ்தவ மகள்..

கம்யூனிசச் சிறையில் வதையாய் சித்ரவதைப்படும்போது அவளது ஏக்க நோக்கமெல்லாம் தன்னைக் கொடுமையாய் இரணமாக்கிக் கொண்டிருந்த அந்த வதைப்பவன் மட்டும் நரகத்துக்குப் போய் விடக்கூடாது என்பதே !

எனவே அவனுக்குத் திரும்பத் திரும்ப கிறிஸ்துவின் அன்பையும் அழகையும், பரலோக ராஜ்யத்தின் மேன்மையையும் சொல்லிக் கொண்டே இருந்தாள் அவள். அதற்குப் பதிலாக அவன் அவளுக்குத் தந்ததெல்லாம் அவள் முகத்தில் தன் முஷ்டி முறுக்கிய குத்துக்களும் அதிகப்படியான சவுக்கடிகளுமே! ஆனால் அவற்றுக்கெல்லாம் அவளது பதிலோ, அவனை எப்படியாவது தேவனுக்காக ஆதாயமாக்கி விடுவதில்

கடைசியாக, அவளது முயற்சி பலன் தரத்தொடங்கியது.. தேவனது பரிசுத்த வார்த்தை அந்தக் கிரிமினலுக்குள் கிரியை செய்ய.. ஒரு முறை தனக்கு முன் கொண்டு வரப்பட்ட அவளைப் பார்த்துக் கேட்டான்.. 'உன் கடவுளைப் பற்றி இன்னும் சொல்லு..'

பொதுவாக சித்ரவதை செய்பவர்கள் கைதிகளை அடித்து அடித்தே களைத்துப் போய், இடையிடையே டீ குடிக்க உட்கார்ந்து விடுவது வழக்கம். அப்படிப்பட்ட இடைவேளைகளில் அவர்கள் சிகரெட் ஊதிக்கொண்டே தங்கள் கைதிகளைப் பேச விட்டு கேலி செய்வது அவர்களது பொழுதுபோக்கு. அப்படி ஒரு இடைவெளியில் அவனது உத்தரவின்படியே புஜஐஷ்ள பேச ஆரம்பித்தாள்...

'நீ வீணாகப் போட்டு என்ன அடிக்கிற.. நீ என்னை அடிக்கிறதுனால என் ஆண்டவர் மேல எனக்கிருக்கிற அன்பையோ, என்னை வதையாய் வதைக்கிற உன்னை நான் உளமாற நேசிக்கிற என் நேசத்தையோ உன்னால எடுத்துப் போடவே முடியாது..'

'ஏய் ஏய் ! பொதுவா பசங்க தங்கள் காதலை முதல்ல சொல்லட்டும்னு தான் பொண்ணுங்க காத்திருப்பாங்க.. நீ என்ன ? தேவையில்லாம அன்பு, நேசம், காதல்னு என்னென்னமோ உளர்ற..நாங்க ஒண்ணும் இங்க காதல் கத்தரிக்கா வியாபாரத்துல இல்ல..ஞாபகம் வச்சிக்க.. மரியாதையா இரகசிய சபைகளைப் பத்தின இரகசியங்களைச் சொல்லிரு..இல்லன்னா நான் அடிக்கிற அடியில உன் கடவுள் மேலயும், என் மேலயும், மத்தவங்க மேலயும் நீ வச்சிருக்கிற இந்த அன்பு, காதல் லாம் காஞ்சு காணாமப் போயிரும்..!

அவள் பேச ஆரம்பித்தாள்..

'நீ என்னை அடிக்கும் போது உன் கையைப் பார்க்கிறேன்..எவ்வளவு அழகான கரங்கள்! இந்தக் கைகளால் உன் மனைவியை நீ அன்போடு வருடிக் கொடுக்கும்போது அவளுக்கு ஏற்படும் சந்தோஷத்தை நினைக்கிறேன்.. ஆனால் அதே இந்தக் கைகளால் என்னைப் போன்றவர்களை நீ அடிப்பதால் என்ன நன்மை உண்டு ?'

'இந்தக் கைகளால் அடிவாங்கும் எங்களுக்கு மட்டுமல்ல..எங்கள் அலறுதலை அன்றாடம் கேட்டுக்கேட்டு உன் காதுகளும் செவிடாகிப் போகவில்லையோ ?

அடிக்கிற இந்த உன் கைகள் அன்பை வெளிப்படுத்தும் கரங்களாய் ஏன் மாறக்கூடாது ?'

'இன்னும் ஒரு காரியம் சொல்வேன் கேள் ! இது எந்த ஒரு வாலிபப் பெண்ணும் ஒரு இளைஞனிடம் சொல்ல மிகவும் யோசிக்கும் ஒன்று..அதுவும் நாங்கள் இங்கே கட்டப்பட்டிருக்கும் மிக மோசமான சூழ்நிலையில்..ஆனாலும் சொல்கிறேன்..

'உனக்குத் தெரியுமா உன் உதடுகள் எவ்வளவு வசீகரமானவை என்று ? உன் மனைவியை நீ முத்தமிடும்போது உண்மையிலே அவள் உன் அன்பில் மயங்கித்தான் போவாள் !'

'நான் ஒன்று கேட்கட்டுமா ? இவ்வளவு அழகான இந்த உதடுகளை, நீ கூச்சலிடுவதற்கும் அசுத்த வார்த்தைகளை அள்ளி வீசுவதற்கும் பயன்படுத்த வேண்டுமோ ? அன்பையும் நேசத்தையும் வெளிப்படுத்துவதற்காக அல்லவோ கடவுள் இந்த அழகிய உதடுகளை நமக்குத் தந்திருக்கிறார் ?'

அவள் சொன்னாள்..
'எனக்கும் ஒரு Boy Friend உண்டு..
அவ்ளோ அழகு.. அவன் என்னை நேசிக்கிறதுனால இல்ல..நேசமே அவன் தான்..எங்கிட்ட எதுவுமே எதிர்பார்க்காத அன்பு அது..என் Boy Friend கிடச்ச நாள்லருந்து என்னால அன்பு ஒண்ணு தான் செய்ய முடியுது..' 'யாரும் என்னை நேசிக்கிறாங்களோ வெறுக்கிறாங்களோ, அவன் எனக்கு கிடைச்சதிலருந்து, அன்புன்னா என்னன்னு நான் அவன் கிட்ட பாத்து கத்துகிட்ட நாள்ல இருந்து என்னால அன்பு மட்டும் தான் செய்ய முடியுது..'

'நீ நேசிக்கிறதெல்லாம் வெறுப்பு ஒண்ணைத் தான்..ஆனா அன்பை நேசித்துப் பாரேன் ! நீயே அன்பா மாறிடுவ !'

அவள் பேசி முடித்ததும் அவள் முகத்திலே அவனது அடி இடியாய் இறங்க, அந்த காங்க்ரீட் தரையில் நெற்றிப் பொட்டு அடித்து மயங்கி விழுந்தாள் அவள்.. அவள் தன் சுய நினைவுக்கு வந்த போது, அவன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான்.

ஏதோ ஆழமான ஒன்று அவனுக்குள் நிகழ்ந்திருந்தது…

பேச ஆரம்பித்தான்..

இவ்வளவு நேரம் உன் Boy Friend ஐப் பற்றி தான் யோசித்துக் கொண்டிருந்தேன்.. நீ சொல்றதுல ஏதோ அர்த்தம் இருக்குது.. அடிக்கிறதை விட அன்போடு வருடிக் கொடுப்பதும், கெட்ட வார்த்தையால திட்டுவதை விட, அன்பாய் முத்தமிடுவதும் உண்மையிலே நல்லதுதான் இல்லையா? இந்த ஒரு சின்ன உண்மை கூட தெரியாம இருந்திருக்கேன்.. சரி.. உன் Boy Friend யாருன்னு சொல்லுவியா?'

எல்லா நாமத்துக்கும் மேலான அந்த நாமத்தைக் குறித்து Annie Mary அவனுக்குச் சொல்லச் சொல்ல..
'நானும் அவரை என் நண்பராக்கிக் கொள்ள விரும்புகிறேன்.. என்ன செய்யணும் சொல்லேன்…' அவள் சொன்னாள்.. 'நீ மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுக்கணும்..'

'அப்படின்னா இப்பவே எனக்கு ஞானஸ்நானம் கொடு…'

'ஐயோ என்னால கொடுக்க முடியாது..'

அவன் தன் ரிவால்வரை அவளுக்கு நேராக நீட்டி…'ஏய் இப்பவே எனக்கு நீ ஞானஸ்நானம் கொடு.. இல்லன்னா உன்னை சுட்ருவேன்.. ' என்று கத்தினான்.

நமக்கு வேண்டுமானால் இது விநோதமாகத் தெரியலாம். ஆனால் 'பரலோக இராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது.. பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்.. (மத் 11:12) என்ற வார்த்தை இந்த சந்தர்ப்பத்திலும் நிச்சயமாகவே பொருந்தும்..

அவளை இழுத்துக் கொண்டு சென்ற அவன், ஒரு குளத்தில் அவளைத் தள்ளிவிட்டான். அங்கே Anne Mary அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தாள்.

*சில நாட்கள் சென்று, மனம் திரும்பிய அந்த சித்ரவதைக்காரன், தான் விடுதலையாகும் நாளன்று இறந்து போன வேறொரு பெண் கைதியின் பெயரில், தன் உயிரைப் பணையம் வைத்து, பேப்பரில் அவளது பெயரை மாற்றி Anne Maryக்கு விடுதலை ஆவணங்களைக் கொடுத்து இரகசியமாய் வெளியேற வைத்தான்!*

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

# அத்தியாயம் 03



**விசுவாசத்தில் பெலவீனமானவர்களிடமும், பாடுகளில் அலசடிப் படுகிறவர்களிடமும் பொறுமையைக் காண்பியுங்கள் !**




விசுவாசத்தில் பெலவீனமானவர்களிடமும்,
பாடுகளில் அலசடிப் படுகிறவர்களிடமும் பொறுமையைக் காண்பியுங்கள் !

# அலெக்ஸாண்டர் ஓகோரோட்னிக்கோவ்

தங்கள் விசுவாசத்துக்காக உபத்திரவப் படுத்தப்பட்டவர்கள் எல்லோருமே தங்கள் விசுவாசத்தில் மிகுந்த பெலமுள்ளவர்களாய், தங்கள் சிலுவையை மிகுந்த கனத்துக்குரியதாய்க் கருதி, சோதனைகளை எதிர்த்து நிற்கக்கூடியவர்களால் இருந்ததில்லை. அப்படியானால் நாம் அவர்களோடு எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு 700 ஆண்டுகளுக்கு முன்பாகவே, புறஜாதிகள் நம்பிக்கை வைக்கும் கர்த்தருடைய தாசன் ஒருவர் வெளிப்படுவதைக் குறித்து, ’அவர் நியாயத்திற்கு ஜெயங்கிடைக்கப் பண்ணுகிற வரைக்கும், நெரிந்த நாணலை முறியாமலும் மங்கியெரிகிற திரியை அணையாமலும் இருப்பார்’ (ஏசா 42:3) என்று இப்படியாகத் தீர்க்கதரிசனம் உரைத்தார் ஏசாயா.

இப்படி மங்கியெரிகிற திரிகளாய் இருக்கும் விசுவாசிகளுக்குள் காணப்படும் மின்னி மின்னி எரியும் நெருப்புப்பொறியை அணையாமல் ஊதி ஊதி எரியவைப்பதில் இயேசு கிறிஸ்துவின் உண்மையான சீஷர்கள் பலர் தீவிரமாய் உழைக்கின்றனர். என்பது உண்மையே!

ரஷ்யாவிலே அலெக்ஸாண்டர் ஓகோரோட் நிக்கோவ் கிறிஸ்தவ செமினார் ஒன்றை ஒழுங்குபடுத்தியதற்காக மிகக் குறைவான தண்டனையாக ஒரு வருட சிறைவாசம் அனுபவித்தார். அது முடிந்ததும், சிறையிலே அவர் சுவிசேஷம் அறிவித்தார் என்பதற்காகக் கோர்ட்டில் நிறுத்தப்பட்டபோது, கோர்ட் வாசலில் பொது ஜனம் கூடியது. அங்கிருந்த ஜன்னல் ஒன்றைத் திறந்து, இயேசுவின் கதையை அவர்களுக்கு உரக்கக் கூறினார் அலெக்ஸாண்டார். இதற்காக இன்னொரு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை. அதை நிறைவேற்றியதும் இன்னும் மூன்று ஆண்டுகள் தண்டனை கூட்டி வழங்கப்பட்டது.

அப்போது உடைந்த நிலையில் தனது தாயாருக்கு அவர் ஒரு கடிதம் எழுதினார். எல்லாவற்றையும் இழந்து துறந்து நிற்கும் நிலையில் தங்களைக் காணும்போது, ஜாம்பவான்களும் கதிகலங்கித்தான் போகிறார்கள். 'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று இயேசுவே கூட சிலுவையில் தொங்கும்போது உரத்த சத்தமிடத்தான் செய்தார் அல்லவோ? தான், 30 டிகிரி வெப்பநிலையில் தண்டனைச் சிறை அறைகளில் வைக்கப்பட்டிருந்ததாகச் சொன்னார் ஓகோரோட் நிக்கோவ். தாங்கமுடியாத வலி வேதனையின் நிரந்தர முடிவாக சாவு வராதோ என்று தன் நரம்புகளைக்கூட அறுத்துக்கொள்ள முயற்சித்தார் அவர். ஆனால் அதுவும் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அப்படிப்பட்டவர்களை நாம் நியாயந்தீர்க்கக் கூடுமோ? ஆவி உற்சாகமுள்ளது தான், ஆனால் மாம்சமோ பெலவீனமானதல்லவோ?

அவரைச் சுற்றிக் காணப்பட்ட மயான மரண அமைதியே அப்படி ஒரு தவிப்புக்கும் படபடப்புக்கும் அவரை ஆளாக்கிற்று.

அவர் தன் தாயாருக்கு எழுதிய கடிதம் இது:

'தங்கள் மரணத்தை மனதார விரும்பும் அளவுக்கு மனிதர்கள் கொடுமையிலும் கொடுமையாய்ச் சித்ரவதைப்படுத்தப்படுகின்றனர், ஆனால் யாரும் அதைப் பற்றிக் கவலைப்படுவதுமில்லை. இதற்கு மேல் இவர்கள் வாழ வழியில்லை எனும் அளவுக்குக் காயப்பட்ட நிலையில் குற்றுயிராய்க் கிடக்கும் இராணுவ வீரர்கள், வலியிலிருந்து விடுவிக்கப்படும்படியாக சுட்டுக்கொல்லப்பட்டு விடுகின்றனர். ஆனால் நானோ என் வாழ்நாளெல்லாம் இதைத் தாங்கி சகித்தே ஆக வேண்டியுள்ளது. தற்கொலை என்பது கொடூரமும், மன்னிக்கப்படாத பாவமுமாய் இருக்கிறது.

*ஆனால் அதையும் நான் முயற்சித்து விட்டேன். என் பாடுகளிலிருந்து நான் நிரந்தரமாய் விடுதலை பெறும்படியாய், என்னைச் சித்ரவதை செய்பவர்கள் என்னைக் கொன்றுவிட்டால் நலமாயிருக்கும். எனக்கு இப்படியெல்லாம் சம்பவிக்கிறது என்று வெளியுலகுக்குத் தெரியப்படுத்தப்படாதவரை நான் விடுதலையடைய வழியில்லை..அது உன் மூலமாக மாத்திரமே நடக்கும் மம்மி..'*

*'என் மகன் டிமா ஆலயத்துக்குச் செல்கிறானா, ஜெபத்தில் பங்கெடுக்கிறானா என்று சொல்வதற்காகவாவது நீ எனக்குக் கடிதம் எழுதமாட்டாயா? ஐயோ! அவன் கம்யூனிச சிறுவர்கள் பள்ளியில் சேர்ந்துவிடக் கூடாதே! நீ எனக்குக் கடிதம் எழுதாவிட்டால், என்னை அணு அணுவாய் வதைப்பவர்கள் கையிலே, எவ்வித மறுப்புமின்றி என்னையே நான் கையளித்து விடுவேன். என்னோடு உனக்கு எந்தத் தொடர்புமின்றி நீ காட்டும் அமைதியே என்னை முதுகில் குத்திக் கொல்லுகிறது..'*

*'ஒன்று சொல்லட்டுமா மம்மி? பசி பட்டினியோடு, கொல்லும் குளிரில், எல்லாவித உரிமைகளும் பறிக்கப்பட்டு, யாருடைய அனுதாபமும் இன்றி, யாருக்கும் உன்னால் எந்த லாபமுமில்லை என்று அவசியமற்ற ஒரு ஜெந்துவாக எல்லாராலும் மறக்கப்பட்டு, தேவனுடைய பரிசுத்தப் பரிசாகிய வாழ்க்கையே காலியாகிப்போவது என்ற ஒரு நிலையை ஜீரணிப்பது இயலாத ஒரு காரியம்..'*

*'கர்த்தர் தாமே உன்னைக் காப்பாராக!'*

**- அலெக்ஸாண்டர்**

# அத்தியாயம் 04



**‘ மரியாளுக்கு தூதன் நற்செய்தி சொன்ன நாள் போன்ற ஓர் நன்னாள்..’**




‘ மரியாளுக்கு தூதன் நற்செய்தி சொன்ன
நாள் போன்ற ஓர் நன்னாள்..’

## ஜோன் லுகாஜனு

*நான் சிறையில் இருந்த நாட்களில் என்னோடிருந்த ஜோன் லுகாஜனு என்ற வாலிபன் ஒருவன் ஒரு நாள் கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டான்..*

*அவன் திரும்பி வந்த போது அவனது முகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ‘என்ன நடந்தது ?’ என்று மற்ற கைதிகள் கேட்டனர்.*

*அவன் சொன்னான்.. ‘ஓ ! காபிரியல் தூதன் மரியாளுக்கு இயேசுவின் பிறப்பை நற்செய்தியாய்ச் சொன்ன நாள் போலிருந்தது இன்று எனக்கு ! என்ன ஒரு அழகான நாள் இது !!’ என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு பேச ஆரம்பித்தான்..*

*ஒரு களங்கமற்ற கன்னிப்பெண் தேவனுக்கு முன் ஜெப தியானத்தில் அமர்ந்திருக்கிறாள்..அங்கே திடீரென்று வெட்டிப் பிரகாசிக்கும் ஒளியில் தேவதூதன் அவள் முன் வந்து நிற்கிறான்.. ‘சிருஷ்டியாகிய நீ உனது சிருஷ்டிகரையே குழந்தையாக உன் கரங்களில் ஏந்தியிருப்பாய்..ஒரு நாளில் உலகத்தின் பாவங்களைக் கழுவி சுத்திகரிக்கிற அவரை உன் கரங்கள் கழுவி எடுக்கும்..*

அவரே உன் வீட்டின் சூரியனும் மகிழ்ச்சியுமானவர்..ஆனால் சில கடின நாட்களும் உனக்கு உண்டு..அநேகருடைய மீட்புக்காக உனது மகனும் தேவ குமாரனுமான அவர் சிலுவையில் தொங்கும் நாளில் நீ அங்கே சிலுவை அடியில் அழுது கொண்டு நிற்பாய்.. ஆனால் உன் துக்கம் சந்தோஷமாய் மாறும்.' 'அவர் உயிரோடு எழுந்து பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்..அவரது தாயாகிய உன்னையும் தன்னோடு இருக்கும்படியாக பரலோகத்தில் அழைத்து சேர்த்துக் கொள்வார்..அங்கே எல்லையில்லா மகிழ்ச்சியும் சந்தோஷமும் எப்போதும் எப்போதுமே !!' ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து முடித்து விட்டிருந்த ஜோனுக்கு நன்றி சொல்லிவிட்டு, 'சரி ஜோன்..இன்னைக்கு கோர்ட்ல என்ன நடந்தது ? அதையும் சொல்லு..' என்றனர் உடன் கைதிகள்..

அவன் சொன்னான்..'அதான் நான் சொன்னேனே.. இன்னைக்கு நாள் எனக்கு மரியாளுக்கு தேவதூதன் நற்செய்தி சொன்ன நாள் போல இருந்தது என்று..' 'எனக்கு மரண தண்டனை என்று இன்று கோர்ட்டில் அறிவிக்கப்பட்டது..இது எவ்வளவு பெரிய நற்செய்தி இல்லையா ? இன்றைய நாள் எவ்வளவு அழகான நாள்.. !

'பன்னிரண்டு முத்துக்களாலான பரலோக வாசல்கள் ! பொற்தள வீதிகள் ! வீணைகள் மீட்டும் தூதர்கள் ! பரிசுத்தவான்களின் இனிமையான ஐக்கியம் ! கிறிஸ்துவுக்காக பாடுபட்டவர்களின் சாட்சிகள் !எல்லாவற்றுக்கும் மேலாக இயேசுவின் மார்பில் சாய்ந்து இளைப்பாறுதல்.. !'

'இப்போ சொல்லுங்க.. இன்றைக்கு நாள் எனக்கு, தூதன் மரியாளுக்கு நற்செய்தி சொன்ன நாள் போன்றதா இல்லையா ?'

கம்யூனிச நாடுகளில் கிறிஸ்தவர்கள் பாடுகளையும் உபத்திரவங்களையும் மரணத்தையும் ஆவலாய் அள்ளி அணைத்துக் கொண்டது இப்படித் தான் ! நாம் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவைகள் தான் எத்தனை எத்தனை !!

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

# அத்தியாயம் 05



**‘ சொந்த வாழ்க்கை என்று சொல்லிக் கொள்வதற்கு
எங்களுக்கென்று ஒன்று இல்லை...
அதை இழப்பதற்கு..’**




‘ சொந்த வாழ்க்கை என்று சொல்லிக் கொள்வதற்கு எங்களுக்கென்று ஒன்று இல்லை...அதை இழுப்பதற்கு..’

## ட்ரோஃபிம் டிமிட்ரோவ்

பல்கேரியாவின் பெலின் சிறைச்சாலையிலே, பட்டினி போடப்பட்ட நாய்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் ஒரு பெரிய குழி உண்டு. சிறை விதிகளை மீறும் கைதிகள் ஆடைகள் உரியப்பட்டு அதிலே தள்ளி விடப்படுவார்கள். அங்கேயும் சில சமயங்களில் தேவன் அற்புதங்களைச் செய்ததுண்டு.

ட்ரோஃபிம் டிமிட்ரோவ் என்ற கிறிஸ்தவ சகோதரர் ஒருவர் வெறி நாய்கள் அடைக்கப்பட்ட குழியில் வீசியெறியப்பட்டார். குழிக்கு நடத்திக் கொண்டு போகப்படும்போது, தன்னை வதைப்பவர்களுக்காக ஜெபித்துக் கொண்டே சென்றார் அந்த சகோதரர்..

அவரைக் குழிக்குள் தள்ளி விடப்பட்டது தான் தாமதம்.. குழிக்குள்ளிருந்து நாய்கள் பயங்கரமாக அலறும் சத்தம் கேட்டது.. சிறை அதிகாரிகள் குழிக்குள் எட்டிப்பார்த்தபோது, சகோதரர் டிமிட்ரோவ் குழிக்குள் முழங்காலில் நின்று ஜெபிப்பதையும், நாய்கள் அவரிடமிருந்து வெளிப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு சக்தியைக் கண்டு, பயந்து அலறிக் குலைத்துக் கொண்டு குழியின் சுவர் ஏறி தலைதெறித்து ஓட முயல்வதையும் கண்டனர்.

தேவன் சிலருக்கு இப்படிப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களைச் செய்வதும், சிலரை கடைசி வரை தங்களுக்குத் தரப்பட்ட கசப்பான பான பாத்திரத்திலேயே பருகும்படி செய்ய அனுமதித்து விடுவதும் நாம் புரிந்துகொள்ளவே முடியாத தேவ இரகசியமாகவே இருக்கிறது.

க்யூபாவிலே தங்கள் விசுவாசத்துக்காக சிறைப்பட்டிருந்தவர்களோடு அரசியல் கைதிகளுமாகச் சேர்த்து கிட்டத்தட்ட 30,000 பேர் இருந்தனர். க்யூப சிறைச்சாலைகளிலிருந்து இரகசியமாய்க் கடத்தப்பட்ட ஒரு ஆவணத்தின்படி, மற்றவர்களோடு இருந்த நமது விசுவாச சகோதரர்கள், அடுத்தடுத்து ஐஸ் தண்ணீரிலும் உடனேயே கொதிக்கும் சுடுதண்ணீரிலும் குளிக்க வைக்கப்பட்டு குளித்து வெளிவந்தவுடனே, அவர்கள் உடலின் மேல் கந்தகம் வீசப்பட்டு, அவர்கள் சரீரத்தின் தோல் நெருப்பாய் எரிய வைக்கப்பட்டன. அநேகர் புல்டோசர் ஏற்றி நசுக்கிக் கொல்லப்பட்டனர்..

ஹங்கேரியில் என்னோடு சிறை அறையிலிருந்த 'ரோமன் பிரகா' என்ற மடாதிபதி ஒருவர் தன்னோடு இருந்த ஒரு கிறிஸ்தவருக்கு நேர்ந்ததைச் சொன்னார்..

கையில் துப்பாக்கியுடன் நின்ற கம்யூனிஸ்ட்டுகள், அந்தக் கிறிஸ்தவருக்கு முன்னால் இரண்டு காரியங்களை வைத்தனர்... 'உன் சொந்த மகளை நீயே கற்பழிக்க வேண்டும்.. அல்லது சுட்டுக்கொல்லப்படுவாய்..' - அவர் பிந்தியதைத் தெரிந்து கொண்டார்.

கம்யூனிசச் சிறை நரகத்தில் நடக்கும் கொடுமைகளை மிகவும் மிகைப்படுத்தி ரூபாகரமாய் பயங்கரமாக்கிக் காட்டுவதாக என் மேல் குற்றஞ்சாட்டுபவர்கள் உண்டு. ஆனால் ஏற்கனவே பயங்கரமாய் அரங்கேறிக் கொண்டிருக்கும் ஒன்றை இன்னும் பயங்கரமாய் ரூபாகரப்படுத்திக் காட்ட இந்த உலகில் யாரால் முடியும் ?

'கிறிஸ்தவர்களே கிறிஸ்தவர்களைக் கொத்துக் கொத்தாய்க் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள்..' என்று பொய்யான வதந்தியை சோவியத் தினசரிகள் அடிக்கடி வெளியிடுவதுண்டு.

கிறிஸ்தவர்கள் தங்களுடையவர்களையும் தங்களுக்கு அடுத்தவர்களையும் நேசிக்கவும் அவர்களது ஜீவனை இரட்சிக்கவுமே வேண்டும் என்று இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்ததை உலகமே அறியும். ஆனால் கம்யூனிசக் கூடங்களில் மட்டும் 'கிறிஸ்தவர்கள் தங்கள் ஜெபக் கூடுகைகளில் ஒருவரை ஒருவர் சாகடிக்கிறார்கள்' என்று திட்டமிட்டு பொய் பரப்பப்பட்டது.

கத்தோலிக்க கன்னியாஸ்திரீகள் தங்கள் மருத்துவமனைகளில் ஈவுஇரக்கமின்றி குழந்தைகளைக் கொல்லுகிறார்கள் என்ற செய்தியும் தீயாய்ப் பரவியிருந்தது.

மொத்தத்தில் சோவியத் கிறிஸ்தவர்களுக்கு சொந்த வாழ்க்கை என்று சொல்லிக் கொள்ள ஒன்று இருந்ததில்லை..அதை இழப்பதற்கு.. இந்தப் புத்தகம் எழுதப்பட்டதன் நோக்கமே, தங்கள் வாழ்க்கையில் சித்ரவதையின் சிறைக்கூடங்களில் நடந்தவர்கள் கிறிஸ்துவுக்காக சகித்த சொல்லமுடியாத இரணங்களின் மத்தியிலும்,
'தான் அடிக்கப்பட்டபோது சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போல வாய் திறவாதிருந்த ஆண்டவரைப் போல வாய்திறவாதிருந்த அவர்களின் மாதிரியை மற்றவர்களுக்குக் காண்பிக்கவே !'

அப்படிப்பட்ட ஒரு வாய்திறவா தேவ அமைதியும் மௌனமும் அந்தந்த நேரத்தில் அருளப்படும் ஒரு கிருபை வரமேயன்றி வேறல்ல.. ஆனால் அது பயிற்சியும் முயற்சியுமின்றி தானாகவே வருவதுமல்ல..

- ரிச்சர்ட் உம்பிராண்ட்

# அத்தியாயம் 06



# பரலோக பாஸ்போர்ட்




## பரலோக பாஸ்போர்ட்

# 'பாப்திஸ்து விசுவாச வீரர்கள் '

சோவியத் யூனியனின் கிறிஸ்தவக் கைதிகளின் உறவினர்கள் ஐக்கியத்தின் பத்திரிக்கை ஒன்று நீதிமன்ற விசாரணை வாதபிரதிவாதச் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

புதிய ஏற்பாடுகளையும், ஆவிக்குரிய கைப்பிரதிகளையும், பரிசுத்த வேதாகமங்களையும் விநியோகித்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டு நிக்கோலேவ் நீதிமன்றத்தில் சகோ. ஜார்ஜ் ஜெல்ட்டனோஷ்கோவும் சகோதரி. நடேஜா ட்ரோஷென்கோவும் ஆஜர்படுத்தப்பட்டனர்..

ஜெல்ட்டனோஷ்கோ தைரியமாய்ச் சொன்னார்.. 'எனக்காக வழக்காட ஒரு வக்கீல் வேண்டியதில்லை.. நான் செய்ததில் எந்தத் தவறும் இல்லை..நான் செய்தது சரி என்றே நான் திட்டமாய்ச் சொல்வேன்..தன்னைத் தானே காத்துக்கொள்வதற்கு நீதிக்கு எந்த அவசியமுமில்லை..'

'நீ செய்தது குற்றம் என்று நீ ஒத்துக் கொள்கிறாயா ?' - கம்யூனிஸ்ட் நீதிபதி..

'இல்லை.. கிறிஸ்தவ பிரசுரங்களை விநியோகிப்பது ஒரு கிறிஸ்தவனின் கடமை..' - ஜெல்ட்டனோஷ்கோ

'கம்யூனிச சட்டதிட்டங்களை மதித்து கிறிஸ்தவ மதம் பரப்பும் வேலைகளைச் செய்யாத ஸ்தாபன சபைகளைப் ( உளவு சொல்லி காட்டிக் கொடுக்கும் சபைகள்) பார் ! - ஜட்ஜ்

'உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளையே நான் பின்பற்றுவேன்..வேறு யாரையும் அல்ல..' என்று ஜெல்ட்டனோஷ்கோ திட்டமாய் பதில் சொன்னார்.

அந்த கம்யூனிஸ்ட் நீதிபதி தொடர்ந்தார்..'ஸ்தாபன சபைகளைப் பார்..அவர்கள் கம்யூனிசத்தோடு ஒத்துப்போகவில்லையா ? உங்களைப் போன்ற இரகசிய சபைகளும் அவர்களோடு சேர்ந்து விடலாம் அல்லவா ? அவர்களும் கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் தானே ?'

ஜெல்ட்டனோஷ்கோ சொன்னார்..'தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசித்து பிசாசுகளும் நடுங்குகிறதில்லையோ ?'

'சரி..நீங்கள் ஆராதிக்க எங்கே கூடுகிறீர்கள் ?'

'உண்மையாய் ஆராதிப்பவர்கள் எங்கேயும் ஆராதிப்பார்கள்..'

இருவரின் பேச்சுவார்த்தையில் சகோதரி. ஸினைடா என்பரின் பெயரும் அடிபட்டது. அவரது குற்றம் செம்படையினர் நடுவில் 'பரலோக பாஸ்போர்ட்..' என்ற கைப்பிரதி விநியோகித்தார் என்பதே..

அந்தக் கைப்பிரதியில் காணப்பட்டது இது தான் !

பெயர் : கிறிஸ்தவன்.

தகப்பனார் பெயர் : சர்வ வல்ல தேவன்.

கடைசி பெயர் : ஆசீர்வதிக்கப்பட்டவன்.

பிறந்த தேதி : இப்பொழுதே அனுக்கிரக காலம்.. இன்றே இரட்சண்ய நாள்.

பூர்வ தேசம் : பரிசுத்த பூமி.

கரம் : எருசலேம்.

சொந்த நாடு : புது சிருஷ்டி

தொழில் : தேவனின் உடன் ஊழியர்

இராணுவ சேவை : கிறிஸ்துவின் நல்ல போர்ச்சேவகன்.

பாஸ்போர்ட் வழங்கியவர் : விசுவாசம்.

பாஸ்போர்ட் வழங்கப்பட அடிப்படை ஆதாரம் : அன்பு சகலத்தையும் நம்பும்.

சமுதாயத்தில் உங்கள் வர்க்கம் (பணக்காரர் / ஏழை / நடுத்தரவர்க்கம் ) கிறிஸ்துவுக்குள் சகலத்திலும் மனரம்மியமானவர்கள்.

சொத்து : இம்மையிலும் மறுமையிலும் சகலத்துக்கும் சொந்தக்காரர்.

குடும்பம் : எண்ணிமுடியா மிகப்பெரிய குடும்பம்.

படிப்பு : சகலத்தையும் அறிந்தவர் (1 யோ 2:20).

வேலை : ஜெபமும் தேவ வசன ஊழியமும்.

இப்படி தேவ வசனத்தை உண்மையாய்ப் போதித்ததின் விலைக்கிரயம் என்ன ? ஜெல்ட்டனோஷ்கோ மூன்று வருட சிறைத்தண்டனைக்கும் ட்ரோஷென்கோ ஆறு மாத தண்டனைக்கும் உள்ளாக்கப்பட்டனர். எவ்வளவு நீண்டகால சிறைவாசம் என்பதல்ல, ஆனால் இரும்புத்திரைக்குப் பின் அவர்கள் மேலிருந்த இரும்புக்கரம் எவ்வளவு பாரமும் பலமுமாய் இருந்தது என்பதே !

கம்யூனிசச் சிறைகளில் ஒருவரும் மற்றவரோடு தங்கள் விசுவாசத்தையோ நற்செய்தியையோ பகிர முடியாது. அப்படிச் செய்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த தண்டனையின் பயங்கரம்... எப்படி இருந்ததென்றால், ஒரு டிட்டென்ஷன் கேம்ப்பில் அந்தத் தண்னையை எதிர்த்து 15 விசுவாசக் கைதிகள் தங்கள் உதடுகள் இரண்டையும் சேர்த்துத் தைத்துக் கொண்டார்களாம் !!

- ரிச்சர்ட் உம்பிராண்ட்

## அத்தியாயம் 07




**சகல பரிசுத்தவான்களோடு**
**இவர்களுக்கும்**
**இளைப்பாறுதல் அருள்வீராக!**




சகல பரிசுத்தவான்களோடு இவர்களுக்கும்
இளைப்பாறுதல் அருள்வீராக!

# ஆர்த்தடாக்ஸ் சபை இரத்தசாட்சிகள்

*சோவியத் யூனியனின் உண்மையான ஆர்த்தடாக்ஸ் சபை இரகசியமாய் வெளியிட்ட 'பரிசுத்தவான்களோடு இவர்களுக்கு இளைப்பாறுதல் தருவீராக!' என்ற புத்தகம் கீழ்க்காணும் விபரங்களை நமக்குத் தருகிறது.*

- *கம்யூனிஸ்ட்டுகளால் முதல் முதலாய்க் கொல்லப்பட்ட ஆர்த்தடாக்ஸ் போதகர் ஜான் கோட்ச்சுரோவ்.*

- *எஸ்ஸன்ட்டுக்கேயில் அநேகருடன், தன் கை கால்கள் தறிக்கப்பட்டவராக உயிரோடு குழியில் புதைக்கப்பட்டார் போதகர் ஜான் ரியாபுகின்.*

- *கப்பலில் உபயோகப்படுத்தப்படும் மிகப்பெரிய கொப்பரை ஒன்றில் உயிரோடு கொதி நீரில் அவித்துக் கொல்லப்பட்டார் ஜான் க்ரஸ்னோவ்.*

- *போதகர் அலெக்ஸாண்டர் போடோல்ஸ்க்கி அடித்தே கொல்லப்பட்டார். அவரை அடக்கம் செய்ய முற்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.*

- செம்படை வீரர்களால் கட்டாயப்படுத்தப்பட்டு மூப்பர் டிக்கான் தனது அடக்க ஆராதனையின் பாடலைத் தானே பாட, அவரது பத்து வயது மகன் அவருக்குக் குழிவெட்ட நிர்ப்பந்திக்கப்பட்டு இப்படியாய் உயிரோடு புதைக்கப்பட்டார் டிக்கான்.

- போதகர் கிரகோரி டிமிட்ரேவஸ்க்கியின் மூக்கும் காதும் நறுக்கப்பட்டு, பிறகு தலையும் வெட்டப்பட்டது.

- கர்த்தருடைய பந்திக்கான ஜெபம் செய்ய வைக்கப்பட்டு, ‘இப்போது நாங்கள் உனக்கு பரிசுத்த அப்பம் தருகிறோம்’ என்று அவரது வாய்க்குள் துப்பாக்கியைச் செலுத்திக் சுட்டுக்கொல்லப்பட்டார் போதகர் கிரிகோரி நிக்கோல்ஸ்க்கி.

- ஆர்த்தடாக்ஸ் பிஷப்பான அர்க்கன்கெல்ஸ்கின் வீட்டிற்குள் புயலாய் நுழைந்தது இரகசிய போலீஸ். கர்த்தருடைய பந்தியின் பாத்திரத்தைத் தரையில் வீசியெறிந்து காலால் மிதிக்க முயற்சித்தபோது, தானே கீழே விழுந்து அதைத் தன் நெஞ்சோடு அணைத்துக்கொள்ள முற்பட்ட பிஷப்பை அடித்த அடியில் அவர் மூர்ச்சையானார். கண்விழித்தபோது தான் தெரிந்தது, தான் ஜெயிலில் கிடக்கிறேன் என்று..

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

# அத்தியாயம் 08



## கொடும் பயங்கரங்களின் மத்தியிலும் உயர்ந்து நின்றவர்கள்




கொடும் பயங்கரங்களின் மத்தியிலும்
உயர்ந்து நின்றவர்கள்

# Edward Buca

கம்யூனிசத்தின் முழு பயங்கரங்களையும் ஒருவராலும் விவரிக்கவே இயலாது. சோவியத் கான்சென்ட்ரேஷன் கேம்ப் ஒன்றில் கைதியாயிருந்த எட்வர்ட் புக்கா (Edward Buca) தனது புத்தகமான 'வோர்க்குட்டா'வில் கைதிகளுக்கு நேர்ந்த வார்த்தைகளால் விவரிக்கக்கூடாத பல பயங்கரங்களை எழுதுகிறார்.

சிறையிலிருந்து தப்பிக்க முயற்சித்த கைதிகள் காட்டுத்தனமாய் அடிக்கப்பட்டு, பாய்ச்சலாய்ப் பாய்ந்தோடும் கலைமானின் பின்புறம் கட்டப்பட்டு, உடல் நார் நாறாய்க் கிழியுமிட்டும் இழுக்க வைக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். பொது ஜனங்களுக்கு முன்பாக ஒரு கைதி உயிரற்ற சடலங்கள் முன் நின்று பியானோ வாசிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். இன்னும் அங்கு அரங்கேற்றப்பட்ட பல பயங்கரங்கள் கற்பனைக்கு அப்பாற்பட்டவை.

ஆனால் இது கதையின் ஒரு பக்கம் மட்டுமே. ஆனால் இதின் கோர முகத்தைத் தாண்டிய, இதனோடு ஒப்பிடவே முடியாத இன்னொரு தலைசிறந்த பக்கம் ஒன்றும் இதிலே இல்லாதிருக்குமானால், நான் இந்த அகோரங்களைப் பதிவு செய்திருக்க மாட்டேன் என்கிறார் எட்வர்ட் புக்கா.

தனது மூன்றாம் பதிப்பான ‘குலாக் ஆர்ச்சிபேலகோ’ (Gulgg Archipelago) என்னும் புத்தகத்தில் சோல்செனிட்ஸின் (Solzhenitsyn) அலெக்ஸாண்டர் ஸிஸோயீவ் என்னும் பெயர் அறியப்படாத சுவிசேஷகர் ஒருவரைப்பற்றி எழுதுகிறார். கெங்கிர் டிட்டென்ஷன் கேம்ப்பில் பல வருடங்கள் செலவழித்த நாட்களில் அப்படியொரு பாதாளக்குழி அனுபவத்துக்கு மத்தியிலும் தன் ஆண்டவரோடு தனிமையின் ஐக்கியத்தில் நடந்த ஸிஸோயீவ் அங்கே ஒரு நாள் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்த நாட்களில் குற்றமற்றவர்களைச் சுட்டுக்கொல்வது அவர்களுக்கு ஒரு விளையாட்டைப் போல அன்றாடம் நடந்தது. ஆனால் இந்த மனிதன் மிக வித்தியாசமான ஒரு மனிதராய் இருந்தார். பேதைமையும் படிப்பறியாதவருமான இவரைக் கண்ட சக கைதிகள், இவர் இயேசுவோடு இருந்தார் என்று மட்டும் அறிந்திருந்தனர்.

யாரோ ஒருவர் அடிக்கப்படும்போதோ கொல்லப்படும்போதோ, அதைக் காண மற்றவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்க, இவர் சுட்டுக்கொல்லப்பட்டதை அந்தச் சிறைச்சாலை அறிய வந்தபோது, அங் இருந்த கொலைகாரர்களும், கொள்ளையர்களும், திருடர்களும், அரசியல் கைதிகளுமான 2500 பேர் போராட்டத்தில் ஈடுபட்டு வேலை செய்ய மறுத்து, அங்கிருந்த காவலாளர்களையும் அடிக்க முற்பட்டனர். இப்படிப்பட்ட பாவமறியாத ஒரு தேவ மனிதனின் மரணத்துக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களது கோரிக்கை.

பொதுச் சிறைச்சாலையில் பல வகையான கைதிகளோடு அடைக்கப்பட்டிருந்த அந்த அறைகளிலும் கூட தன் தேவனோடு ஐக்கியம் கொண்டு அவரோடு தன் நாட்களை மிக மிக அமைதியாய்க் கழித்து நடமாடும் கிறிஸ்துவாகவே வாழ்ந்து வந்த அந்தப் பெயரறியாத மனிதர் ஒருவருக்காகத் தங்கள் அன்பையும், உறுதியையும் ஒற்றுமையையும் காட்டிய, அவர்களிலிருந்த 700 கைதிகள் கொல்லப்பட்டுக் கடைசியாக அந்தப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

நவீன சுவிசேஷ மாநாடுகள் கூடும் இந்த நாட்களில் இப்படிப்பட்ட மாநாடுகளின் செயலாக்கங்களைக் காட்டிலும் இப்படியொரு அலெக்ஸாண்டரைப் போல வாழ்ந்து காட்டுவது நல்லதல்லவா ?

நாங்கள் கேட்டிருந்த இதைப் போன்ற பல சம்பவங்களிலிருந்து ஒரு சிலவற்றையே பொறுக்கியெடுத்து இங்கு தந்திருக்கிறேன். கம்யூனிச்சிறையில் கொடுமையாய் அடிக்கப்பட்ட டோரோ வெட்ஸைப்பற்றி நான் சொல்லியிருக்கலாம், அல்லது சிறையில் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்ட டுபிட்ஸக்கியைப் பற்றியோ, அல்லது கைதிகளில் அநேகரைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினார் என்பதால் 'மனதில் விஷத்தைக் கலக்குபவன்' என்று கம்யூனிஸ்ட் பத்திரிகைகளால் சித்தரிக்கப்பட்டு மூன்று வருடம் கடுங்காவல் அனுபவித்த பீட்டர் சைமன்ஸைப் பற்றியோ சொல்லலாம்.

தாங்கள் எழுதிய இலக்கியங்களினாலோ, பிரசங்கித்த பிரசங்கத்தினாலோ இவர்களது பெயர்கள் பிரபலமாகவில்லை. ஆனால் தாங்கள் அடைக்கப்பட்டிருந்த மிகக் கொடுமையும் பயங்கரமுமான நரகக்குழி போன்ற நிலையிலும் அவர்கள் ஆண்டவரோடு மிக நீண்ட நேரங்கள் செலவழித்ததால் அவர்கள் முகங்கள் நட்சத்திரங்களைப் போலப் பிரகாசித்தது என்பதே அவர்களைக் குறித்த மற்ற கைதிகளின் சாட்சி.

இரத்தசாட்சிகளின் இரத்தத்தினால் நீர் பாய்ச்சப்படும்போது சபையானது அதீத வேகம் பெற்று வளருகிறது.

கிறிஸ்தவர்கள் எல்லாருமே எதிர்ப்பையும் தனிப்பட்ட, பாடு வேதனைகளையும் எதிர்கொள்ளத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டே ஆக வேண்டும். தேவன் நம்மைப் பாதுகாத்து, மகிழ்ச்சியான நாட்களைத் தருவார். ஆனாலும் ஒரு கிறிஸ்தவரும் உபத்திரவங்களுக்கு விதிவிலக்கானவரல்ல. அவைகளை அமைதியாய் எதிர்பார்த்து எதிர்கொள்ளுவோம்.

# அத்தியாயம் 09




## கண்ணாடியாய்க் காணப்படும் தேவதூதர்கள் - 1




## கண்ணாடியாய்க் காணப்படும் தேவதூதர்கள் – 1

# வன்யா

முன்னாள் சோவியத் யூனியனில் 1973 ல் ருமேனிய வாலிபனான வன்யா மோய்சீவ் இரத்த சாட்சியாய்க் கொல்லப்பட்டான். அவனது வாழ்வு நமக்கு முன்னுதாரணமாய் இருக்கிறது.

சோவியத் இராணுவத்தில் பணிபுரிந்த வன்யா நம்மைப் போன்ற விசுவாசம் கொண்ட ஒரு விசுவாசி தான் - ஆனால் ஒரு வித்தியாசம் - அவனது விசுவாசம் தொற்றுநோய் போன்றதாயிருந்தது. ஒருவருக்கு ஜுரம் இருக்குமானால் அடுத்தவருக்கும் அது தொற்றிக்கொள்ள வாய்ப்பு உள்ளது போலவே விசுவாசமும் ஒவ்வொருவரையும் பற்றிப் பிடித்துப் பரவும் தன்மையுள்ளது.

வன்யா தன் இரட்சிப்பையும், சாட்சியையும், விசுவாசத்தையும், உடனிருந்த கம்யூனிஸத் தோழர்களோடும், அதிகாரிகளோடும் பகிர்ந்துகொண்டே இருப்பான். இராணுவத்தில் அது கடுமையாய்த் தடைசெய்யப்பட்ட ஒன்றாயிருந்தாலும், தான் தங்கியிருந்த இராணுவ முகாமிலே கிறிஸ்துவின் மகிமையைப் பாடிக்கொண்டேயிருப்பான் அவன். இதைக் குறித்து அவனை மிரட்டுபவர்களிடம், ‘பாடினால் உன்னைக் கொன்றுவிடுவேன் என்று ஒரு வானம்பாடியைப் பயமுறுத்தினால், அது தான் பாடுவதை நிறுத்திவிடுமோ? அது தன் இயற்கை குணத்தை மாற்றிக்கொள்ளுமோ? அதைப் போலத்தான் கிறிஸ்தவர்களாகிய நாங்களும்’என்று பதில் கொடுப்பான் வன்யா.

அவனது பாடும் பழக்கம் அநேக இராணுவ வீரர்களைக் கிறிஸ்துவிடம் கொண்டு வந்தது. இதற்காக அவனுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை, கொட்டும் பனிக்காலத்தில் கோடைகாலத்து சீருடையில் திறந்த வெளி மைதானத்தில் கழுத்தளவு பனியில் இரவு முழுவதும் நிற்க வைக்கப்படுவான். கசையால் அடிக்கப்பட்டு, கடைசியாக இருதயத்தில் கத்தியால் குத்தப்பட்டு இரத்த சாட்சியானான் அவன்.

ஒரு தேவதூதன் பரம எருசலேமைத் தனக்குக் காட்டியதாகத் தனது பாடுகளை ஜெயகெம்பீரத்தோடு எதிர்கொண்டு வந்த வன்யா, அதிகம் நாகரீகமும் முதிர்ச்சியும் அடையாத ஒருவனாயிருந்தும், தேர்ச்சி பெற்ற இறையியலாளர்கள் கூட விவரிக்க இயலாத அளவு தேவதூதர்களைக் குறித்து விலாவாரியாக இப்படியாய் விவரிப்பான் அவன். ‘தேவதூதர்கள் கண்ணாடி போன்று காட்சியளிப்பவர்கள். ஒரு தூதன் உங்களுக்கு முன்பாக நிற்கும்போது, அதே நேரத்தில் அந்தத் தூதனுக்குப் பின்பாக ஒரு மனிதன் நிற்பானேயானால் தூதன் அந்த மனிதனை மறைத்து நிற்க மாட்டான். மாறாக தூதனின் ஊடாகவே அந்த மனிதன் காணப்படுவான். மாறாக, தூதன் வழியாக அந்த மனிதனைப் பார்க்கும்போது அவன் இன்னும் அழகாகவும், பிரகாசித்து ஜொலிப்பவனாகவும் காணப்படுவான்.

அதைப் போலவே என்னை அடித்து நொறுக்கி சித்ரவதைப்படுத்துவர்களை நான் ஒரு தேவதூதன் வழியாகவே பார்க்கிறேன். அப்படிப்பார்க்கும் போது அவர்களை இன்னும் அதிகமாய் என்னால் நேசிக்க முடிகிறது.

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

# அத்தியாயம் 10



## கண்ணாடியாய்க் காணப்படும் தேவதூதர்கள் - 2




## கண்ணாடியாய்க் காணப்படும் தேவதூதர்கள் – 2

# லியூபா

*ரஷ்ய கம்யூனிஸ்ட்டுகளால் தனது விசுவாசத்துக்காகக் கைது செய்யப்பட்டிருந்த லியூபா கனேவ்ஸ்க்யா ஒரு தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டு பட்டினியாய் வைக்கப்பட்டு அடிக்கப்பட்டாள். ஒரு நாள் இரவு அவள் தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள், 'இதுக்கு மேல தாங்க முடியாது, இன்றைக்கும் அவன் என்னை அடித்தால், 'நீ ஒரு கிரிமினல்டா' என்று முகத்துக்கு முகம் சொல்லத்தான் போகிறேன்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள் அவள். ஆனால் அன்றிரவு நடந்ததே வேறு. அவள் எந்த வகையிலும் தன்னுடையவர்களைக் காட்டிக்கொடுக்காத அவளது பிடிவாதத்தை உடைக்க அவன் என்னென்னவோ செய்தும், அவளோ அவனை வேறு வகையில் பார்த்துக் கொண்டிருந்தாள்.*

*ஒரு குரல் அவளிடம் பேசியது. 'இவனும் உன்னைப் போன்றவன் தான். நீங்கள் இருவருமே வாழ்க்கையின் ஒரே கோணத்தில் தான் இருக்கிறீர்கள். கம்யூனிசக் காம்ரேட் ஸ்டாலின் ஆயிரமாயிரம் தேவ ஜனத்தைக் கொன்றது போலவே, அவன் தன்னுடைய சொந்த இரகசிய போலீசின் பத்தாயிரம் பேரையும் இது வரை கொன்றிருக்கிறான்.*

தன்னுடைய மூன்று மூத்த போலீஸ் தலைவர்களான யகோடா, யெஸோப் மற்றும் பெரியாவையும் கிறிஸ்தவர்களைக் கொன்றது போலவே அடுத்தடுத்து சுட்டுக் கொன்றிருக்கிறன் அவன். ஒரு வகையில் நீயும் உன்னைச் சித்ரவதைப்படுத்துகிறவனும் கூட ஒரே கண்ணீரின் பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறீர்கள்' என்று அது அவளிடம் பேசியது. தன்னை அடிக்க இப்போது சாட்டையை எடுத்தவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள் லியூபா. அவளைக் கண்டு திடுக்கிட்டவன், 'ஏன் சிரிக்கிறாய்?' என்று கேட்டான்.

'கண்ணாடியில் நீ இப்போது உன்னைப் பார்ப்பது போல நான் உன்னைப் பார்க்கவில்லை, ஆனால் சிறு வயதில் நீ எவ்வளவு அழகாகவும் மாசற்றவனாகவும் இருந்திருப்பாய் என்ற அந்த முகரூபத்திலேயே இப்பொழுது உன்னைப் பார்க்கிறேன். பார், நீயும் நானும் ஒரே வயதுள்ளவர்கள் தான். சிறு வயதில் நாம் ஒன்றாக ஓடி விளையாடியவர்களாகக்கூட இருந்திருக்கலாம். இயேசு தன்னை சிலுவையில் அறைந்தவர்களை அப்படித்தான் பார்த்தார். நீயும் ஒரு காலத்தில் எப்படி அவரைப் போல மாற முடியும் என்று உன்னை அப்படியாய் நினைத்துப் பார்க்கிறேன். உன்னை விட பயங்கரமான கொடுமைக்காரனான தர்சுவின் சவுல் என்ற வாலிபன் ஒருவன் இருந்தான். ஆனால் மிகச்சீக்கிரமே அவன் ஒரு அப்போஸ்தலனாகவும் பரிசுத்தவானாகவுமே மாறிவிட்டான்' என்று சொல்லிக்கொண்டே போனாள் அவள்.

இந்த லியூபாவும் கூட கண்ணாடியாய்க் காட்சியளித்த ஒரு தேவதூதனைக் கண்டிருந்தாள். தன்னை இப்போது அடிப்பதை நிறுத்திவிட்ட அந்தக் காவலனைப் பார்த்து, 'உனக்கு ஒரு தீங்குமே செய்யாதிருக்கும் ஒருவரை இப்படிக் கண்மூடித்தனமாய் அடிக்கும் அளவுக்கு உன்னைப் பைத்தியமாக்கி நிர்ப்பந்தப்படுத்துவது எது?' என்று கேட்க, அவளது அன்பின் கரிசனை அவனை வேற்று மனிதனாய் மாற்றிவிட்டது. அப்படியொரு தேவனுக்கேற்ற விதமாய்த் தன் நடக்கையில் காணப்பட்டாள் அவள்.

நாமும் நமக்கு எதிராய் உள்ளவர்களை இப்படியொரு கண்ணாடியாய்க் காட்சியளிக்கும் தேவதூதனின் ஊடாகக் காணும்போது நமது கண்ணோட்டமே மாறிவிடும் என்பது உண்மை.

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

## அத்தியாயம் 11



# சபை சரித்திரத்தின் பிரபல பிச்சைக்காரர்




## சபை சரித்திரத்தின் பிரபல பிச்சைக்காரர்

## ட்ரகோட் ஹான்

சீர்திருத்தவாதி மார்ட்டின் லூத்தரால், தனது ஆசிரியர் என்று அழைக்கப்பட்ட பிரபலமான போதகரும் இறையியலாளருமான ஐ. டாலர் (I.Tauler பல வருடங்களாகத் தனக்குள் இருக்க வேண்டிய உண்மையான ஏதோ ஒன்று இல்லாதிருக்கும் வெறுமையை உணர்ந்தார் -அதாவது தேவனோடு உள்ள தனிப்பட்ட மிக மிக நெருக்கமான ஐக்கியம் ஒன்றை - அப்படிப்பட்ட யாராவது ஒருவரது ஐக்கியத்தைத் தர மாட்டீரோ ஆண்டவரே என்று பல வருடங்களாக ஜெபித்து வந்தார். அவருடைய நண்பர்கள் வட்டத்தில் அப்படி ஒருவரும் அவருக்குக் கிடைக்கவில்லை.

‘அந்த ஆலயத்துக்குப் போ, நீ தேடுகிற மனிதனை அங்கே காண்பாய்ப என்ற ஒரு சத்தத்தை ஒரு நாள் கேட்டார் அவர்.

அங்கு சென்ற போது, தன் கந்தை ஆடையுடன் அங்கே பலி பீடத்தில் நின்று கொண்டிருந்த பிச்சையெடுக்கும் மனிதன் ஒருவனைக் கண்டார். மிகவும் மகிழ்ச்சியாய்க் காணப்பட்ட அவனோடு பேசிக்கொண்டிருக்கும்போது அவன் சொன்னான், நான் ஒரு நாளும் மகிழ்ச்சியின்றி இருந்ததேயில்லை. என் நாட்களெல்லாம் நன்மையும் கிருபையும் நிறைந்ததாகவே இருக்கிறது.

நான் பசியாயிருக்கும் போதும், வெயிலோ, மழையோ, பனியோ எந்நிலையிலும் நான் தேவனைத் துதிக்கிறேன். நான் துரத்தப்பட்டாலோ, துப்பப்பட்டாலோ, எல்லாவற்றுக்காகவும் நன்றி சொல்லத் தவறுவதில்லை. அவரிடத்திலிருந்து நன்மையோ தீமையோ, இனிமையோ, கசப்போ எதைப் பெற்றுக்கொண்டாலும், அதை சந்தேஷமாய் ஏற்றுக்கொண்டு, எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் அவரைத் துதிப்பதால் நான் எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன்' என்றான் அவன்.

உபத்திரவத்தின் மத்தியில் கடந்து போன சபைகளில் இப்பப்பட்ட பரிசுத்தவான்களும் இருந்திருக்கின்றனர். 1919 ம் ஆண்டு, லட்வியாவில் கம்யூனிஸ்ட்டுகளால் கொல்லப்பட்ட லூத்தரன் போதகர் ட்ரகோட் ஹான் அப்படிப்பட்டவர்களில் ஒருவர்.

அவர் ஒரு முறை இப்படி எழுதினார்:

'தியாகமும் இரத்த சாட்சி மரணமும் எங்கே துவங்குகிறதோ, அங்கு மாத்திரமே உயர்ந்து நிற்கும் கிறிஸ்தவம் ஒன்று தொடங்குகிறது. தியாகமும் அர்ப்பணிப்புமின்றி, இரட்சிப்பு இல்லை. பூமியில் சகல சந்தோஷத்தையும் அனுபவித்து மகிழ வாஞ்சிப்பது மதியீனம். வாழ்க்கையென்பதே சுயத்தை வெறுப்பது தான். தேவனுக்காகவும், அவரது சபைக்காகவும் சகலத்தையும் கடைசிவரை பலிபீடத்தில் அர்ப்பணித்து அவருக்குப் பின் செல்வதே எல்லா மகிழ்ச்சிக்கும் மேலான மகிழ்ச்சி. அதுவே ஆனந்தத்திலும் ஆனந்தம், பேரானந்தம்.

- ரிச்சர்ட் உம்பிராண்ட்

# அத்தியாயம் 12



## வெவ்வேறு தரங்களிலும், வெவ்வேறு தளங்களிலும் மரித்த இரத்தசாட்சிகள்




**வெவ்வேறு தரங்களிலும், வெவ்வேறு தளங்களிலும்**
**மரித்த இரத்தசாட்சிகள்**

# Van Horev & Others

*ஐவன் ஹோரேவ் கிறிஸ்துவுக்காக சிறையில் மரித்தார். அவரது மகன் நிக்கோலாய் இருபது வருடங்கள் ஜெயிலிலேயே கழித்தார்.*

*சிறை அறைக்குள் அதிகாரி ஒருவர் வரும்போது அதிலிருப்பவர்கள் ஒவ்வொருவரும் உடனே எழுந்து நேராக நிற்க வேண்டும் என்னும் சிறைச்சாலைச் சட்டமொன்று உண்டு. எழுந்து நிற்க முடியாமலிருந்த நிக்கோலாய் எழுந்திருக்கத் தாமதித்த காரணத்தால் தனிமைச் சிறையில் 100 நாள் அடைக்கப்பட்டார். அங்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தான் உணவு தரப்பட்டது. அதன் பின் 'ஆஃப்ரிக்கானா' என்ற சித்ரவதைக்குள் உள்ளாக்கப்பட்டார் அவர். ஒரு ஆள் மாத்திரமே நிற்கக்கூடிய ஒரு பெட்டி அது. அதின் அடிப்பகுதியில் கூர்மையான கூம்புகள். அதின் மேல் வெறுங்காலோடு நாள் முழுவதும் காலை மாற்றி மாற்றி நின்று கொண்டே இருக்க வேண்டும். தாங்க முடியாத வேதனையின் ஒரு கட்டத்தில் மயங்கி விடுகிறார் நிக்கோலாய்.*

*அவர் மயக்கம் தெளிந்தபோது, மிக அழகான ஒரு இடத்தில், 'உன்னை வதைக்கிறவர்களைக் கோபமும் எரிச்சலுமாய்ப் பார்க்காதே! ஆண்டவர் இயேசு துப்பப்படும்போது தன் முகத்தை மறைக்கவில்லையே, அடிக்கப்படும்படி தன் கன்னத்தைக் காட்டினாரே!*

ஒரு மணப்பெண் தன் மணவாளனை எப்படி நேசிப்பாளோ அப்படியே உன் பகைவர்களையும் நீ நேசிக்க வேண்டும்!' என்று தனக்குச் சுற்றுத்தரப்பட்டதை நினைவுகூர்ந்தார் அவர்.

உன்னதமும் உயரமுமாய் ஆவிக்குரிய தரத்திலும் தளத்திலும் உயர்த்தப்பட்டவர்களின் வரிசையில் ஒருவராய் நிற்கிறார் ஐவன் ஹோரேவ். அதன் பின் அவருடைய மகனாகிய பெஞ்சமின் ஹோரேவும் அதே செல்லில் அடைக்கப்பட, அந்த அறையின் சுவரில் அவரது தகப்பனார் எழுதி வைத்துவிட்டுப்போன 'உன்னை விரோதிக்கிறவர்களையும் நேசமாய் நேசி' என்னும் வார்த்தைகள் அவரது விசுவாசத்தை பெலப்படுத்தியது.

ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும், தான் சுமக்க வேண்டிய ஒரு சிலுவை உண்டு. ஆனால் சிலரே தங்கள் மேல் வைக்கப்பட்ட அதை மிகவும் அன்போடு சுமக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் தங்களை வதையாய் வதைப்பவர்களைப் பார்த்து அன்போடு புன்முறுவல் செய்கின்றனர். ஆனால் ஒவ்வொருவரும் வெவ்வேறு ஆவிக்குரிய நிலையில் இருப்பவர்களானதால், எல்லா இரத்த சாட்சிகளும் அப்படி இருப்பதில்லை.

பதினான்காம் நூற்றாண்டின் சியென்னாவின் புனிதர் கேத்ரீன், ஒரு முறை சிறைச்சாலையில் உள்ளவர்களைச் சந்திக்கும்படியாக அங்கு சென்றிருந்தபோது, மரண தண்டனைக்கு நியமிக்கப்பட்டிருந்த மனிதன் ஒருவனை இரட்சிப்புக்குள் நடத்தினார். அடுத்த நாள் தன் தலைவெட்டப்படப்போகும்போது அவர் தன்னோடிருக்கும்படியாக வேண்டிக்கொண்டான் அவன். அடுத்த நாள் அதிகாலையில் தண்டனை நிறைவேற்றப்படும் இடத்திற்குச் சென்ற அவர், தலை வெட்டப்படும் மரக்கட்டையில் தன் தலையை வைத்து, 'ஆண்டவரே, வெட்டப்படும் அந்த விநாடியில் இந்த மனிதனுக்கு வெளிச்சத்தையும் சமாதானத்தையும் தருவீராக!' என்று ஜெபித்தார். யாருக்காக ஜெபிக்கிறீர்களோ, அவர்களது அந்த இக்கட்டான சூழ்நிலையில் உங்களையே நிறுத்தி ஜெபிப்பதை விட மேலான ஜெபம் வேறெதுவுமில்லை. 'இயேசு: கேத்ரீன்...' என்ற கடைசி வார்த்தைகளுடன் தன் பாவங்களெல்லாம் கழுவப்பட்டவனாக, ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பங்கெடுக்க உலகத்தை விட்டுக் கடந்து சென்றான் அந்தக் குற்றவாளி.

இரத்தசாட்சிகளோடு, முக்கியமாக பெலவீனமுள்ளவர்களாய், கடைசி வரையில் தங்கள் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைத்து நிற்கக்கூடாதவர்களோடு, நம்மையும் அவர்களோடு அவர்களாய் நம்மையும் அடையாளப்படுத்திக்கொண்டு ஜெபிப்பது மிகவும் அவசியம். அவர்களும் மனிதர்கள் தானே! எல்லா சூழ்நிலையிலும் எல்லாரும் ஆவிக்குரிய உயரத்திலேயே நின்று கொண்டிருப்பதில்லை. இருபத்து நான்கு மணி நேரமும் எல்லாரும் பரிசுத்தமாகவே இருப்பதுமில்லை. கிறிஸ்துவுக்காக மிகவும் உண்மையாய் இருப்பவர்களுக்கும் கூட வேளாவேளைகளில் ஆறுதலும் தேறுதலும் உற்சாகமூட்டுதலும் அவசியமாகவே இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்டவர்களோடு நம்மையும் இணைத்துக்கொண்டு அவர்களுக்காக ஜெபிப்பது மிகவும் அவசியம்.

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

## அத்தியாயம் 13




# விசுவாசத்தினால் மாத்திரமே மேற்கொள்ளமுடியும்




விசுவாசத்தினால் மாத்திரமே
மேற்கொள்ளமுடியும்

# Vohtassak & Others

- ஆண் உறுப்பில் கம்பால் அடிப்பதில் கைதேர்ந்த விடால் நெடிட்ச் என்னும் ஒரு செர்பிய பெண் அதிகாரி. (பின்னாட்களில் சிறையிலடைக்கப்பட்டு, தன் சொந்த கம்யூனிசத் தோழர்களாலேயே சித்ரவதைப்படுத்தப்பட்டாள்).

- உப்பு அள்ளிப்போடப்பட்ட உணவு கொடுக்கப்பட்டு, தண்ணீர் தரப்படாமல் கொடுமைப்படுத்தப்பட்டனர் கைதிகள்.

- தங்கள் செல்களில் இரவும் பகலும் இடைவிடாமல் ஓடி ஓடி வட்டமடிக்க அவர்கள் வற்புறுத்தப்பட்டதோடு, ஒரு நிமிடம் நின்றுவிட்டாலும், நன்கு பழக்குவிக்கப்பட்ட நாய்களை அவர்கள் மேல் பாய விட்டு, அவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அந்த வாக்குமூலத்தை வைத்தே அடுத்தடுத்த தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர் கைதிகள்.

- ‘கம்யூனிசத்தின் அழகைப் பாருங்கள்!’ என்று மணிக்கணக்காகக் கைதிகளை உட்கார வைத்து லெக்ச்சர் வைப்பது ஒரு கொடுமை. இப்படி ஒரு டார்ச்சர் தாங்காத கைதி ஒருவர், தன் காதுகள் இரண்டையும் தானே வெட்டியெடுத்து கம்யூனிஸ்ட் கட்சியின் சென்ட்ரல் கமிட்டிக்கு கூரியர் அனுப்பி வைத்தார்.

‘கம்யூனிஸ்ட்டுகளின் அடிமை’ என்று தன் நெஞ்சில் பச்சை குத்திக்கொண்ட ருமேனிய கைதி ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

- ஒரு செக்கோஸ்லேவேக்கிய நாளிதழ் இப்படி எழுதியது : ‘1950 லிருந்தே முழு திருச்சபையும் சிறையிலிருக்கிறது. சபையிலிருந்து வரும் கடிதங்கள் ஜெயிலிலிருந்து வருபவை போலவே இருக்கிறது...

- ‘சிறையின் நாலாபக்கக் காவல் கோபுரங்களிலிருந்து செல் அறைகளுக்குள் உள்ளவர்கள் சுட்டுக்கொல்லப்படுகின்றனர்; சிறைச்சாலை ஆஸ்பத்திரிகளுக்குள் நாய்கள் அவிழ்த்து விடப்படுகின்றன; கைதிகள் தலையில் சாட்டையால் அடிக்கப்பட்டு, அதன் பின் தண்ணீர் பீச்சியடிக்கப்பட்டு, ‘மனித உரிமை கேட்கிறீர்களோ? நாங்கள் மனித உரிமைகளையெல்லாம் மதிப்பதே இல்லை’ என்று கத்துவான் அந்த அதிகாரி.

- கைது செய்யப்பட்டவர்களில் பலருக்கு உட்காயம் இருந்தது. வாலிபப் பையனான ஹெர்னோவ்ஸ்க்கி போன்ற சிலர், சித்ரவதையினால் பைத்தியமாகவே ஆகிப்போயினர்.

- வோட்டாஸக் என்ற 75 வயது பிஷப் ஒருவர். முழுவதும் ஆடைகள் உரியப்பட்டவராய், கல் தரையிலே பல மணி நேரங்கள் நிற்க வைக்கப்பட்டது மட்டுமல்லாமல், தோப்புக்கரணம் போட வைப்பதும், அறைக்குள்ளே ஓட வைப்பதுமாய் அவர் அடைந்த கொடுமை சொல்லி மாளாது.

- கைதிகளின் வேலை நேரம் பதினைந்து மணி நேரம். இதிலே சுகவீனப்பட்ட கைதிகளும் அடக்கம். அவர்கள் தங்கள் இயலாமையால் மூர்ச்சித்துப்போய் செத்து விழும்வரை வேலை செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர். சாப்பிட அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதெல்லாம் தினம் இருவேளை சூப்பும் கொஞ்சம் ரொட்டியும் மட்டுமே. அனுதின வேலை அளவை முடிக்காதவர்களுக்கு மாலையில் உணவு கிடையாது. வேலைப் பளுவினால் தொய்ந்து சோர்ந்து அதற்கு மேல் வேலை செய்ய இயலாமல் போனவர்கள் தலைகீழாய்ப் பல மணி நேரங்கள் தொங்கவிடப்படுவதும் உண்டு. கடுமையான வெயில் நேரங்களில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

- *போதகர் ஃபவுஸ்ட்டி மற்றும் டஜனி இருவரும் மனிதக் கழிவுகள் நிறைந்து வழியும் பழங்காலக் கழிவறைகளில் இரண்டு மாதங்கள் அடைத்து வைக்கப்பட்டு, அதன் பின் மரண தண்டனை பெற்றனர். அவர்களோடு இருந்த பலர் ஆயுள்தண்டனை பெற்றனர். இந்த இரு போதகர்களும் கொலைக்களத்துக்குக் கொண்டு போகப்படும்போது, 'கர்த்தருடைய வீட்டுக்குப் போவோம் வாருங்கள்' என்று சொல்லிக்கொண்டே சென்றார், பாஸ்டர் ஃபவுஸ்ட்டி.*

*கம்யூனிசக் கொள்கைகளாலும் உபதேசங்களாலும் தங்களைக் கறைப்படுத்திக் கொள்ளாதவர்கள் இவர்களே ; கிறிஸ்துவானவர் தங்களை எப்படிப்பட்ட பாதையில் நடத்தினாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; எப்படிப்பட்ட நிர்ப்பாக்கியமான, நிர்ப்பந்தமான, நிராதரவான நிலையிலும் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொண்டவர்கள் இவர்களே! இவர்களல்லவோ மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள் ! (வெளி 14:4)*

*விசுவாசத்தினால் மாத்திரமே இவர்கள் இவைகள் யாவற்றையும் மேற்கொண்டார்கள்.*

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

## அத்தியாயம் 14



# சொல்லிமுடியாத சித்ரவதைகள்




## சொல்லிமுடியாத சித்ரவதைகள்

# Dr.Bacu

★ இரண்டு மூன்று கைதிகள் எங்கள் முதுகில் ஏறி சவாரி செய்ய, அந்த நிலையில் நாங்கள் சிறையின் தரையைக் கழுவுவோம். புறங்கைகள் விலங்கிடப்பட்டிருக்க, முழங்காலில் குனிந்த நிலையில், தரையில் வீசியெறியப்பட்டிருக்கும் ஒரே வேளை ஆகாரமான ரொட்டிகளைப் பன்றிகளைப் போலத் தின்று, சுடச்சுட சூடான சூப்பை அதே நிலையில் குடிக்க நிரப்பந்திக்கப்பட்டு, கடைசித் துண்டு ரொட்டியைக்கூட நாவால் நக்கி நக்கி எடுத்து, எங்கள் பாத்திரங்களையும் எங்கள் வாயாலேயே சுத்தம் செய்ய வேண்டிய அந்த நிர்ப்பாக்கிய நிலையில் இருந்தோம்.

★ நாள் முழுவதும் கால் நீட்டிய நிலையில்,கைகள் முழங்காலைத் தொட, தலை மேல் நோக்கி, இங்குமங்கும் அசைய உத்தரவின்றி, இப்படியே தொடர்ந்து 16 மணி நேர வதைக்குப் பின் தூங்க அனுமதிக்கப்பட்டாலும், தலை மேல் நோக்கி, கால் நீட்டி, கைகள் முழங்காலைத் தொடும்படி நீட்டப்பட்ட நிலையிலேயே இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டு, சில முடியாத வேளைகளில் உட்கார்ந்திருக்கும் நிலையை சற்று மாற்றினால், அங்கே எங்களையே கண்கொத்திப் பாம்பாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் ஜெயிலரால் பலமாய்த் தாக்கப்பட்டோம்.

★ நெற்றிப்பொட்டிலோ, நெஞ்சுப் பகுதியிலோ, கழுத்திலோ கைதிகளை அடிக்கக்கூடாது என்பது உத்தரவு. சித்ரவதையினால் உண்டாகும் சரீர மரணத்தை கம்யூனிஸ்ட்டுகள் விரும்புவதில்லை. ஆகவே பேய்த்தனமான ஒரு பரிசோதனையை அவர்கள் கிறிஸ்தவர்கள் மேல் பரீட்சித்துப் பார்த்தனர் - அது சரீர மரணத்தை அல்ல - ஆவிக்குரிய மரணத்தை உண்டாக்குவது. அவ்வப்போது அவர்கள் கிறிஸ்தவர்கள் மீது நிகழ்த்திய மிக விபரீதமான ஆய்வு அது..

சகோதரரில் சிலர் ஓரினச் சேர்க்கையாளர்களுடன் ஒரே செல்லில் அடைக்கப்பட்டு, அவர்கள் அப்படிப்பட்ட பாவத்துக்கு உள்ளாகும்படி கட்டாயப்படுத்தப்பட்டு அதை அவர்களுக்குத் தெரியாமலே வீடியோ எடுத்து அதை வைத்தே அவர்களை மிரட்டி மிரட்டி தங்கள் இஷ்டத்துக்கு பணிய வைக்கப்பட்டனர்.

★ 16 கைதிகள் (ஊழியர்களும் விசுவாசிகளும்) ஒருவர் மேல் ஒருவர் படுக்க வைக்கப்பட்டு, சரீர அழுத்தம் தாங்காமல், எல்லாருக்கும் கீழே கிடத்தப்பட்டவரின் அடிவயிறு அழுத்தப்பட்டு, கழிவறையிலே நடக்க வேண்டியது சிறையறையிலேயே நடந்துவிட, அதையும், தன் உள்ளாடையையும் தன் வாயாலேயே சுத்தம் செய்ய பலவந்தப்படுத்தப்பட்டு, அந்த மனிதன் அதை மறுக்க, அவனது கை விரல்கள் கட்டைகளுக்கு இடையே செலுத்தப்பட்டு, நொறுக்கப்பட்டன..

★ ஒரு ஈஸ்டர் நாளன்று, ஒரு பைபிள் கல்லூரி மாணவனை துணிகளால் சுற்றி இயேசு கிறிஸ்துவைப் போல நடிக்க வைத்தனர். கிறிஸ்து சிலுவை சுமந்து கொல்கொதாவுக்கு நடந்து செல்வது போலவே சிறை அறையிலே நடக்க வைக்கப்பட்ட அவனது கழுத்திலே சோப்பினால் (soap) செய்யப்பட்ட ஒரு ஆணுறுப்பு தொங்க விடப்பட்டிருந்தது. மற்ற கிறிஸ்தவ கைதிகள் அந்த மாணவனுக்கு முன் வணங்கி அந்த உறுப்பை முத்தம் செய்து, 'எங்கள் சர்வ வல்லவரே, உமக்கு முன் நாங்கள் தெண்டனிட்டு வணங்கிப் பணிகிறோம்..' என்று கட்டாயப்படுத்தி செய்ய வைக்கப்பட்டனர். அவர்களது கேலிக்கும் நிந்தை அவமானத்துக்கும் தலைவணங்கிக் குனியாத ஒரே ஒருவர் இருந்தார். அவர் அதன் பிறகு மணிக்கணக்காய்ப் பட்ட சித்ரவதை சொல்லிமுடியாது.

★ சில வருடங்களுக்கு முன் அன்ட்டோனியோ போரோ என்னும் கிறிஸ்தவ ஆசிரியர் ஒருவர் க்யூபாவிலிருந்து அற்புத விதமாய்த் தப்பினார். சிறையிலிருந்த தானும், தன்னோடிருந்தவர்களும் எப்படிப்பட்ட சித்ரவதைகளுக்கு ஊடாகக் கடந்து சென்றோம் என்று எழுதுகிறார் அவர். கூண்டு ஒன்றில் அடைக்கப்பட்ட அவரது கால்களைக் கட்டியிழுத்து விசாரணைக்கு அழைத்துச் சென்று விசாரணையின்போது கயிற்றினால் முகத்திலும் கம்பால் பின்புறத்திலும் அடிக்கப்பட்டார் அவர்.

★ க்யூபாவின் கைதிகளின் நிலையை அவர் எழுதுகிறார்: 'நம் சகோதரர்கள் அமிலத்தில் குளிப்பாட்டப்பட்டனர் ; பழுக்கக் காய்ச்சிய கம்பியினால் அவர்கள் உடம்பில் கம்யூனிச் சின்னமான 'அரிவாள்-சுத்தியல்' பச்சை குத்தப்பட்டது. தேனீக்கள் நிறைந்த பெட்டிக்குள் அவர்கள் தலையை வைத்து பூட்டிவிடுவது. கைதிகளைப் படுக்க வைத்து உயிரோடு உடலைக் கிழித்து மருத்துவ மாணவர்கள் ஆராய்ச்சி செய்வதற்காகக் கைதிகள் மிரட்டப்பட்டு, அதைப் பார்க்கும்படி மற்றவர்கள் வற்புறுத்தப்பட்டது போன்ற கொடுமைகளும் நடந்தன. மற்றவர்கள், தாங்கள் தகாத உறவுகளில் ஈடுபட்டதாகவோ, அமெரிக்காவுக்கு உளவு பார்த்ததாகவோ வாக்குமூலம் அளிக்கும்படியாக மிரட்டப்பட்டு அவர்களிடமிருந்து, தாங்கள் செய்யாத குற்றங்களுக்காகவும் வாக்குமூலம் பெறப்பட்டது.

★ சீனாவிலே மா சே துங் படத்துக்கு முன் கிறிஸ்தவ சகோதரர்கள் இரண்டு மணி நேரம் அட்டென்ஷனில் நிற்க வைக்கப்பட்டு, ஒவ்வொரு தோளிலும் மூன்று மூன்று செங்கல்கள் அடுக்கி வைக்கப்படும். அடுத்து வரும் ஒவ்வொரு இருபது நிமிடங்களிலும் ஒவ்வொரு செங்கலாகக் கூட்டப்பட்டு மொத்தம் பதினெட்டு செங்கல்களை அவர்கள் சுமக்க வேண்டும். அவர்கள் முழங்கால்கள் சற்று தள்ளாடினாலும், அந்தச் சித்ரவதை மறுபடி மறுபடி தொடரும். இன்னும் சில கிறிஸ்தவர்களின் தலைகள் மொட்டையடிக்கப்பட்டு, சுடச்சுட சாம்பல் தலையில் வைக்கப்பட்டு, அவர்கள் மாவோவின் படத்துக்கு முன்னால் அட்டென்ஷனில் நிற்க வைக்கப்பட்டனர்.

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

## அத்தியாயம் 15




# மனதை மயக்கும் மயக்க மருந்துகள்




# மனதை மயக்கும் மயக்க மருந்துகள்

*வியட்நாமின் பெருநகர்களிலே எண்ணற்ற புத்த மடாலயங்களும் கிறிஸ்தவ ஆலயங்களும் வெளிநாட்டவர்களின் பார்வைக்கு, 'இங்கே மதச்சுதந்திரம் உண்டு' என்று எண்ணிக்கொள்ளும்படியாகத் திறந்து வைக்கப்பட்டாலும், அந்நாட்டின் பெருவாரியான போதகர்கள் அடைக்கப்பட்டிருந்தது கான்ஸெண்ட்ரேஷன் கேம்ப் எனப்படும் வதைக் கொட்டடிகளில்.*

- *1985 ல் போதகர் திக் வாங் தோ கைது செய்யப்பட்டார். அவரைத் தங்கள் வழக்குக் கொண்டுவந்து அவர் வாயிலிருந்து பல காரியங்களை வெளிக்கொண்டு வர 85 வயதான அவரது தாயாரையும் கைது செய்தனர். ஒரு கோப்பையைப் பிடிக்கும் அளவுக்கோ, தன்னையே பராமரித்துக் கொள்ளும் அளவுக்கோ கூட அவரது கைகளில் பெலனின்றி கைகள் இரண்டும் மரக்கட்டையைப் போல மடக்க முடியாத நிலையிலிருந்தது. அவருக்கு முன்பாக இரண்டு காரியங்கள் வைக்கப்பட்டன - ஒன்று உன்னுடைய விசுவாசத்தை மறுதலி அல்லது உன்னுடைய தாய் இப்படிப்பட்ட ஒரு அழுக்கும் நாற்றமும் எடுத்த நிலையில் மரித்துப்போக விட்டுவிடுவோம்! ஓ! இது என்ன ஒரு எமோஷனல் டார்ச்சர்!*

உலக மனிதர்கள், ‘உன் விசுவாசத்தை மறுதலித்து உன் தாயைக் காப்பாற்ற மாட்டாயோ?’ என்பார்கள். ஆனால் கிறிஸ்தவர்களுக்கு இருப்பதோ ’வேறொரு சட்டம்’ அல்லவா? போதகர் திக்குவாங் ‘பிந்தினதையே’ தெரிந்துகொண்டார். தன் தாயின் உபத்திரவம் நித்தியத்தின் நன்மைக்காகவே என்று கண்டார் அவர்.

- கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் ஆண் மற்றும் பெண் இரகசிய போலீஸ் அதிகாரிகளைக் கைதேர்ந்த, ’மனதை மயக்குபவர்களாய்ப்’ பயிற்சி கொடுத்து வைத்திருந்தனர். ஏற்கனவே சரீர இச்சைகளைத் தூண்டும் மருந்துகளால் போதையூட்டப்பட்ட கிறிஸ்தவக் கைதிகளிடம் இப்படிப்பட்ட கை தேர்ந்த இரகசிய அதிகாரிகளை, ஆண்களிடம் பெண்களையும், பெண்களிடம் ஆண்களையும் அனுப்பி, அவர்களைப் பாவத்தில் விழவைத்து, அதை போட்டோவும் வீடியோவும் எடுத்து அதை வைத்தே போதகர்களை மிரட்டி, அவர்களைக் குற்ற உணர்ச்சிக்குள்ளாக்கி மனநிலை பாதிக்கச் செய்வது மட்டுமல்லாமல், கிறிஸ்துவை மறுதலித்து நாளிதழ்களில் அதை வெளியிடுவதோடு, அவர்களையே மற்ற விசுவாசிகளையும் போதகர்களையும் காட்டிக்கொடுப்பவர்களாகவும் மாற்றிவிட்டனர். தாங்கள் வஞ்சிக்கப்பட்டவர்களாய்ப் பாவத்தில் விழுந்த குற்றவுணர்வுணர்களோடு மட்டுமல்லாது, கிறிஸ்துவை மறுதலித்த குற்றவுணர்வோடும், தங்கள் சகோதரர்களைக் காட்டிக்கொடுத்த வேதனைகளோடும் வாழ்நாளைக் கழிக்கும் எத்தனையோ விசுவாசிகளும் போதகர்களும் உண்டு.

- நாங்கள் சந்தித்த அநேக இரகசிய சபைப் போதகர்கள் இப்படியாய்ச் சொல்லக் கேட்டிருக்கிறேன் : ‘எங்கள் சித்தவதைகளையும் கம்யூனிசக் கொள்கைகளையும் எப்படி எதிர்நிற்க வேண்டுமென்று நாங்கள் அறிந்திருந்தாலும், வலுக்கட்டாயமாய்ப் போதையூட்டி இப்படி எங்களைக்கொண்டு செய்பவைகளைக் கையாளுவது எப்படியென்று அறியாதிருந்தோமே!’ என்று அழுததைக் கேட்டிருக்கிறேன்.

● இதற்கும் ஒரு தீர்வு உண்டு : ஒருவர் தனது சக்திக்கும் மிஞ்சிக் கைமீறிப் போகும் நிலையில் ஒன்றை எதிர்த்து நிற்கத் திராணியற்ற நிலையில், அதையும் வித்தியாசமாய் வடிவமைக்கப்பட்டுத் தனக்களிக்கப்பட்ட ஒரு சிலுவையாகவே தனது விசுவாசத்தால் தாங்கிக்கொள்ள வேண்டியதாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. அன்பு சகலத்தையும் தாங்கும் - ஆம் விதிவிலக்கின்றி சகலத்தையும் அது தாங்கும். சில வேளைகளில் தப்பிக்க வழியே இல்லாத பாவங்களைக் கூட, அ அதையும் ஒரு சிலுவையாய் எண்ணி சுமந்து சகித்துக் கொள்ளத்தான் வேண்டியுள்ளது. யாரையும் எந்த சூழ்நிலையிலும் நாம் நியாயந்தீர்க்க இயலாது.

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

# அத்தியாயம் 16



# கள்ளப் போதகர்களின் பொய்ப் புகழ்ச்சி




# கள்ளப் போதகர்களின் பொய்ப் புகழ்ச்சி

முன்னாள் சோவியத் ரஷ்யாவின் எல்லா ஸ்தாபன சபைகளின் தலைவர்களுக்காகவும் என் இருதயம் வலிக்கிறது. மத சுதந்திரம் என்ற இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லி, மேற்கத்தியவர்களில் சிலரோடு இவர்களும் கம்யூனிசத்தைப் புகழ்ந்து தள்ளிக்கொண்டிருந்தனர். இவர்கள் எதைப் புகழுகிறார்கள் என்பதை ரஷ்யக் கம்யூனிஸ்ட்டான 'ராய் மெட்வடேவ்' என்பவர் எழுதிய 'Let History Judge' என்ற புத்தகத்திலிருந்தே எடுத்துக் காட்டுகிறேன். அவைகள் மறுக்க முடியாதவை.

- அதிலே சோவியத் யூனியனின் லெனினிய சிறைகளில் கைதிகளுக்கு நடந்த சித்ரவதைகளில் சிலவற்றை விவரிக்கிறார் அவர். சிறைகளில் எண்ணிக்கைக்கு அடங்காத கிறிஸ்தவர்கள் இருந்தனர். செய்யாத குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படியாகத் தாய்மார்களின் கண்களுக்கு முன்பாக அவர்களது பிள்ளைகள் கொல்லப்பட்டனர். குற்றமற்றவர்களைக் காட்டிக்கொடுக்கும்படியாக நிர்ப்பந்தப்படுத்தப்பட்டவர்கள் முன்பாக முன்பின் தெரியாதவர்களைக் கொண்டு நிறுத்தி, 'நீ காட்டிக் கொடுக்காவிட்டால் இவர்களைக் கொன்றுவிடுவேன்' என்று சொல்லி, சிலர் சுட்டுக்கொல்லப்படவும் செய்தனர்.

தன் னிமித்தமாய் யாரோ ஒருவர் கொல்லப்படுகிறாரே என்று கடைசியில் தனக்குத் தெரிந்தவர்களின் விபரங்களையெல்லாம் ஒருவர் சொல்ல, எல்லா விபரங்களையும் அவர்கள் வாயிலிருந்தே வாங்கி அவர்கள் எல்லாரையும் சுட்டுக் கொன்றனர். தன்னால் இத்தனை பேர் கொல்லப்பட்டனரே என்ற குற்றவுணர்விலிருந்தும் வேதனையிலிருந்தும் அப்படிப்பட்டவர்கள் மீண்டு வருவதேயில்லை.

● கம்யூனிஸ்ட்டுகள் கைதிகளின் கண்களைப் பிடுங்குவதும், செவிப்பறையைக் கிழித்துவிடுவதும் சாதாரணம். ஆடைகள் உரியப்பட்ட வெற்று உடம்பிலே தங்கள் சிகரட்டுகளை அழுத்தி அணைப்பதும், வயிற்றைக் குத்திக் கிழித்துவிடுவதும், சிறுநீரைக் குடிக்க வைப்பதும் அன்றாடக்காட்சி.

ஆனால் ஸ்தாபனக் கிறிஸ்தவத் தலைவர்களோ, இந்தக் கொடுமைகளைத் துவங்கினவனை வாயாரப் புகழ்ந்ததோடு, இரகசிய சபைகளின் சகோதரர்களை 'பிசாசின் கைக்கூலிகள்' என்று எழுதினர்.

எங்கோ ஓரிடத்தில் ஆலயம் ஒன்றைத் தீவைத்துக் கொளுத்தியபோது, தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த அதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களில் பிரபல நாத்திகனும் ஒருவன். 'சபை நன்றாயிருக்கும் போது நீ வந்ததேயில்லை. இப்போது அது எரிந்து சாம்பலாகிக் கொண்டிருக்கும் போது நீ வந்திருக்கிறாயே! ' என்று கேட்டார் அந்தப் போதகர்.

அதற்கு அந்த நாத்திகன், 'உமது சபை எப்போதும் அக்கினியாய்ப் பற்றியெரிந்து கொண்டே இருந்திருக்குமானால் நான் தொடர்ந்து வந்து கொண்டிருந்திருப்பேன்!' என்று பதில் சொன்னான்

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

## அத்தியாயம் 17



# சமரசமும் குற்றவுணர்வும்




# சமரசமும் குற்றவுணர்வும்

- ருமேனியாவிலே கம்யூனிசக் கண்களுக்குத் தன்னை ஒளித்துக் கொண்டிருந்த கத்தோலிக்க கன்னியாஸ்திரி ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணையின் சித்ரவதையிலே தனக்குத் தெரிந்தவர்களையும், தன்னை ஒளித்து வைத்திருந்தவர்களையும், தனக்குத் தெரிந்த எல்லாருடைய பெயர் விபரங்களையும் சொல்லிவிட்டார். சம்பந்தப்பட்டவர்களில் சிறியவர்கள், பெரியவர்கள், வயதானவர்கள், குழந்தைகள் என்று எல்லாரும் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட, அவர்களில் அநேகர் மரித்தும் போயினர். அந்தக் கன்னியாஸ்திரியின் எஞ்சிய வாழ்நாள், தான் செய்த காரியத்திற்காகக் குற்றவுணர்வில் அழுது அழுதே கரைந்துபோனது.

- 'நான் தூக்குப் போட்டுக்கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழிதெரியவில்லை' என்று விசாரணை முடிந்து தன் செல்லுக்குத் திரும்பிய ஒரு பிஷப்பின் கதையை இத்தாலிய நாளிதழ் ஒன்று எழுதியது. மிகவும் தைரியமும், சுறுசுறுப்பும் நிறைந்த அவருக்கு வயது 50.

- *டோக்கியோவில் நடந்த சர்வதேச பாப்திஸ்த்து மாநாட்டிலே, பல நாடுகளின் பிரதிநிதிகளாய்த் தங்கள் தங்கள் நாடுகளின் கொடிகளை ஏந்தி வந்தவர்களின் மத்தியில் தங்கள் கம்யூனிசக் கொடியை இரத்தத்தில் தோய்த்து ஏந்தி நடந்து வந்தனர் சோவியத் ரஷ்யாவினர். 10,000 பேர் கூடியிருந்த அந்த மாநாட்டில் நான் மட்டும் தனியனாக எழுந்து நின்று, 'இதுவல்ல ரஷ்யக் கொடி, இது கடவுள் வெறுப்பின் கொள்கை கொண்ட கம்யூனிசவாதிகளால் கொல்லப்பட்ட இரத்த சாட்சிகளின் இரத்தத்தினாலான சிவப்புக் கொடி' என்று உரக்கச் சத்தமிட்டேன். அப்போது சில பாப்ட்டிஸ்ட்டுகள் என்னைப் பலவந்தமாய்ப் பிடித்து வெளியேற்றினர். ஒருவரும் என் பட்சத்தில் நிற்கவில்லை.*

- *ஆனால் இந்தக் கதை இதோடு முடியவில்லை. என்னுடைய விடுதலைக்குப்பின், 1991 ல் மாஸ்கோவில் பாப்ட்டிஸ்ட் சபைக்கு நான் சென்றிருந்தபோது, அச்சபையின் பொதுக் காரியதரிசி என்னை முழு சபை நடுவே கட்டியணைத்து முத்தமிட்டு, 'பாசிசவாதிகளும் கம்யூனிஸ்ட்டுகளும் உங்களை அடித்து மிதித்தனர், அவர்கள் மட்டுமல்ல, பாப்ட்டிஸ்ட்டுகளாகிய நாங்களும் சேர்ந்தல்லவோ உங்களை அடித்தோம்?' என்று அழுது மன்னிப்புக் கேட்டார். ஆனால் இதைப் போல உண்மையிலே வருந்துபவர்கள் எத்தனை பேர்? ஒரு காரியம் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாலாபக்கமும் சூழ்ந்த கடுமையான அழுத்தத்தினாலே மதியீனமான காரியங்களைச் செய்துவிடுபவர்கள் மற்றும் பாவத்தில் விழுந்துவிடுகிறவர்களை நாம் அவ்வளவு எளிதில் நியாயந்தீர்த்துவிடக்கூடாது.*

- *செக்கோஸ்லேவேக்கியாவிலே ஒரு கைதியின் தலையிலே காலி தண்ணீர் வாளி ஒன்றைத் தலைகீழாய்க் கவிழ்த்து அதை சுத்தியலால் அடி அடியென்று அடித்து, 'இப்படி அடித்து அடித்தே நாங்கள் இயேசுவைக்கூட, தான் ஒரு இரட்சகர் அல்ல' என்று சொல்ல வைத்திருப்போம் என்று எகத்தாளமாய்ப் பரிகசித்தனர். ஆனால் இயேசுவைப்பற்றி அவர்கள் அறிந்து வைத்திருந்தது அவ்வளவு தான். யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்த பிறகும், எந்தக் கட்டாயத்தினாலும் அன்றி, உள்ளான உண்மையான அன்போடு கூடவே அவனை, 'சிநேகிதனே' என்று அழைத்தார் இயேசு. இந்தக் கன்னியாஸ்திரீக்கும், பிஷப்புக்கும், ஏன், நம்மேல் விழுந்து நம்மை அழுத்தும் கடுமையான அழுத்தங்களினால் ஏதோ ஒரு வகையில் இடம் கொடுத்துவிடும் நமக்கும் கூட அப்படி ஒரு அன்பை அவர் காட்டமாட்டாரோ?*

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

## அத்தியாயம் 18



# மூன்று விருட்சங்களின் உவமானம்




# மூன்று விருட்சங்களின் உவமானம்

இரகசிய அந்தரங்க சபைகளில் மூன்று விருட்சங்களின் உவமானம் அடிக்கடி உபயோகப்படுத்தப்படும் ஒன்று. தங்கள் விசுவாசத்துக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் அதினால் அதிகமாய் ஆறுதல் அடைவதுண்டு. அது மற்றவர்களுக்கும் உபயோகமானதே.

ஒரு காட்டிலே மூன்று இளம் மரங்கள் தங்களுக்குள்ளே நண்பர்களாய் இருந்து வந்தன. தாங்கள் வயதாகி மக்கி மண்ணோடு மண்ணாகிப் போகாமல், தாங்கள் பெரிய மரத்துண்டுகளாய், கட்டைகளாய், பலகைகளாய் வெட்டப்பட்டு மனிதர்களுக்கு உபயோகப்பட வேண்டுமென்று சேர்ந்து ஜெபிக்க வேண்டுமென்று தங்களுக்குள் தீர்மானம் செய்து கொண்டன அவைகள்.

'நாள் முழுவதும் வேலைசெய்து களைத்து வரும் கால்நடைகள் இளைப்பாறும் மாட்டுக் கொட்டகையாய் ஆவேன்' என்று முதல் மரம் விரும்பியது. அதின் தாழ்மைக்கும் பணிவுக்கும் ஆண்டவர் பதிலளித்தார். தேவகுமாரனே வந்து பிறக்கும் ஒரு விசேஷித்த கொட்டகையாய் அது மாறியது. குழந்தையைச் சுற்றி நின்ற தேவதூதர்களை அது பார்த்தது. கன்னிமரியாளின் தாலாட்டுகளை அது கேட்டது. அதின் முன் ஞானிகளும் மேய்ப்பர்களும் குனிந்து வணங்கி உள்நுழைந்தனர். இதை விட மேன்மை எந்த மரத்துக்குக் கிடைத்திருக்கும் ?

கீழே அங்கே ஏரியிலே நின்றுகொண்டிருந்த படகுகளைக் கண்ட இரண்டாவது மரம், தான் ஒரு படகு செய்யப் பயன்பட வேண்டும் என்று ஜெபித்தது. அதின் ஜெபமும் கேட்கப்பட்டு, அநேகப் பயணிகள் தங்கள் வேலைகளினிமித்தம் அதை பயன்படுத்தினர். ஒரு நாள் விசேஷித்த பயணி ஒருவர் அதிலே பயணிக்க வந்தார் - அவர் தேவகுமாரன். இதுவரை தான் கேட்டிராத அன்பும் ஞானமும் நிறைந்த வார்த்தைகளை இயேசுவாகிய அவர் பேசக் கேட்டது அது. தான் அவரை ஏற்றிக்கொண்டு அக்கரை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட காற்றிலும் புயலிலும், தான் உடைந்து நொறுங்கிவிடுவோம் என்ற நிலையில், 'இரையாதே, அமைதலாயிரு' என்ற அவரது சத்தத்தைக் கேட்டுக் காற்றும் கடலும் உடனே அமர்ந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டுப்போனது அது. அப்படி ஒரு காட்சியைக் காண்பதற்காகவே, ஒரு படகாய்ச் செய்யப்பட, தான் வெட்டப்பட்டது உண்மையிலே பாக்கியமானது தான் என்று நினைத்து மகிழ்ந்தது.

மூன்றாவது மரம், தான் எதற்காக உபயோகப்படுத்தப்பட வேண்டுமென்று தனக்கே தெரியாததால் அதற்கானதை மற்றவர்களே தீர்மானிக்க வேண்டியதானது. அந்த மரத்திலிருந்து பெரிய தடி ஒன்றை வெட்டி கழுமரம் ஏற்றும் பெரிய சிலுவையாய்ச் செய்தனர் அவர்கள். இந்த மரத்தைக் காட்டிலும் வேதனை நிறைந்தது எதுவாக இருக்க முடியும்? ஒரு நாள் தேவகுமாரனே அதிலே ஆணியடிக்கப்பட்டார். ஆனால் தனக்கருகில் சிலுவையாய் நின்ற மற்ற மரங்களிலிருந்து கேட்கப்பட்ட அழுகுரலையோ, வேதனையையோ, அசுத்தமான சாபச் சொற்களையோ தன் சிலுவையில் அது கேட்கவில்லை. மாறாக, தெய்வீக மன்னிப்பின் வார்த்தைகளின் சத்தத்தையும், மனந்திரும்பிய திருடன் ஒருவனை பரலோகம் வரவேற்கும் சத்தத்தையும், தன் தாய் மேலுள்ள தேவகுமாரனின் கரிசனையின் சத்தத்தையும், தன் பிதாவின் மேல், தான் வைத்த அவரது நம்பிக்கையினால் அவர் ஏறெடுத்த ஜெபத்தின் சத்தத்தையுமே அது கேட்டது. மரத்திலே தூக்கப்பட்ட இயேசுவின் மூலமாய் மனுக்குலத்துக்காக ஆயத்தமாக்கப்பட்ட இரட்சிப்பில் அவரது சிலுவையாய் மாற தனக்கும் ஒரு பங்கு கிடைத்ததே என்று புரிந்து அது தன்னை சாந்தப்படுத்திக்கொண்டது.

*நாமும் கூட நமது சிலுவை, பாடு, உபத்திரவங்களிலே மகிழ்ந்து களிகூருகிறோம். சாதாரணமாய் ஒருவரும் வலி வேதனையை விரும்புவதில்லை. தங்களேயே தரித்திரத்துக்கும், மனப்பூர்வமும் தியாகமுமான ஆழமான துறவறத்துக்கும், கீழ்ப்படிதலுக்கும், மரணத்துக்காகவுமே கூட அழைக்கப்படுபவர்கள் வெகு சிலரே. மற்றவர்களாகிய நாமோ பாடுகளில் களிகூறுவதில்லை.*

*ஆனால் பாடுகளும் வேதனைகளும் கூட மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் பெருக்கெடுத்தோடச் செய்யும் வாய்க்கால்களே!*

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

# அத்தியாயம் 19



## பாடுகள், ஒரு வெற்றி கொள்ளமுடியாத தடை அல்ல




## பாடுகள், ஒரு வெற்றி கொள்ளமுடியாத தடை அல்ல

● ருமேனியாவின் ஜிலாவா ஜெயிலில் கிறிஸ்துவுக்காக மரித்தார் பிஷப் விளாட்மீர் கிகா. நானும் கூட அதிலே ஒரு முறை அடைக்கப்பட்டிருக்கிறேன். 'கர்த்தாவே, என் இருதயத்தை உமக்கென்று எடுத்துக்கொள்ளும், ஒருபோதும் அதை என்னிடம் திருப்பித் தந்துவிடாதிரும்! உம்மை நான் வாஞ்சையாய் நேசிக்காதவரை நான் பிறந்தென்ன லாபம்?' என்று தன்னுடைய ஊழிய நியமன நாளின்போது ஜெபித்தார் அவர். மரணப்படுக்கையில் அவரது கடைசி வார்த்தைகள் இவை: 'என் மேல் இழைக்கப்பட்ட கொடுமைகள் உம் வலி, வேதனைகளோடு ஐக்கியப்படுவதாக! கர்த்தாவே, சாகுமளவு என்னைச் சித்ரவதைப்படுத்தி உருக்குலைத்தவர்களை தேவரீர், மன்னித்து அவர்கள் ஆத்துமாக்களை குணமாக்கி ஆசீர்வதிப்பீராக!'

நாம் நம்மைப் பாடாய்ப்படுத்துபவர்கள் நம்மைப் படுத்தும் பாடுகளின் அனுபவங்களையே அவர்களுக்கு நாம் செய்யும் அன்பின் ஊழியங்களாய் மாற்றிக்கொள்வதிற்குப் பதிலாக, அடிக்கடி அவர்களுக்கு எதிராக வெறுப்பை உமிழ்பவர்களாகவும், கசப்பை நெஞ்சில் சுமந்து திரிபவர்களாகவுமே காணப்படுகிறோம்.

நம்மை துன்புறுத்துபவர்களுக்காக நம்மையே தியாகமாய் செலுத்தும் ஆவியின் அன்பினாலே நம் ஒவ்வொரு துளி கண்ணீரையும், ஒவ்வொரு பெருமூச்சையும் அவர்களுக்காகவே சிந்திச் செலுத்த இந்த பிஷப் போன்ற பரிசுத்தவான்களிடம் நாம் கற்றுக்கொள்வோம். இப்படிப்பட்ட வாழ்க்கைகளை உங்களுடையதாக்கிக் கொள்ளும்படி உங்கள் மனம் விசாலமாகட்டும்.

உபயோகப்பட விரும்பும் கிறிஸ்தவ வாழ்வுக்கு சிறைச்சாலை ஒரு தடையே இல்லை.

● சீனாவில் தனிமைச் சிறையில் இருபது வருடங்கள் கழித்த அமெரிக்கன் பிஷப் வால்ஷ் இப்படியாய் எழுதினார். 'ஒரு நாள் காலை நான் கண்விழித்துப் பார்த்தால், ஓ! இங்கே சிறையில் வந்து கிடக்கிறேன். 'ஐயோ! இன்னும் இன்னும் ஜெபித்துக்கொண்டே இருக்க எனக்கு நேரம் கிடைக்காதோ என்று இப்படி ஒரு நேரத்துக்காக அல்லவோ நீ கனவு கண்டு கொண்டிருந்தாய் ?' என்று அப்போது கர்த்தருடைய வார்த்தை எனக்கு வந்தது. நான் ஊழியத்தில் ஓடிக்கொண்டே இருந்ததால் போதிய அளவு ஜெபிக்க முடியவில்லை. ஆனால் இப்பொழுதோ என் குடும்பத்துக்காகவும், நண்பர்களுக்காகவும், உலகத்திலுள்ள பல தரப்பட்டவர்களுக்காகவும் ஜெபிக்க எனக்கு சிறையிலே போதிய அளவு நேரம் கிடைத்தது. ஜெபம் மிக மிக வல்லமையுள்ளது. நீங்கள் உடைந்து சோர்ந்துபோய், கைவிடப்பட்ட நிலையில் தனியனாய் இருக்கும்போது பிஷப் வால்ஷ் செய்ததைப் போலவே செய்யுங்கள். இயேசு தாமே தம்முடைய இயலாத நிராதரவின் நிலையிலே 'பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்' விண்ணப்பம் பண்ணினாரே! (எபி 5:7). ஆகவே தான் 'என் சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன்' என்று அப்படிப்பட்ட ஜெபத்துக்குப் பின் அவரால் சொல்ல முடிந்தது.

● சீனாவின் பீஜிங்கிலே, தியானென்மென் சதுக்கத்தில் மிகப்பெரிய படுகொலையிலும் இரத்தக்களறியிலும் முடிந்த போராட்டத்தின் தலைவராயிருந்தவர் லியு ஜியாபோ. அவரும் கைது செய்யப்பட்டார். ஜெயிலில் இன்னொரு சக தோழர் ஒருவர் மூலம் கர்த்தருடைய வார்த்தை அவருக்கு வந்தபோது கம்யூனிச ஒடுக்குதலாளர்களின் கொடுமைகளையும், பாவங்களையுமே நினைத்து நினைத்து யோசித்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டார் அவர்.

’பாவிகள் மேலிருந்த அன்பினால் அல்லவோ இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட தன்னை ஒப்புக்கொடுத்தார்? ஆனால் சீனாவிலோ மேற்கத்திய நாடுகளிலோ, மற்றவர்களின் பாவங்களுக்காகத் தன்னைத்தானே தியாகமாய் ஒப்புக்கொடுக்க முன்வருபவர்கள் இல்லையே, கிறிஸ்தவம் என்பது அநேகருக்கு இன்னொரு வகைப் பொழுதுபோக்காய்ப் போனதே’ என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டார் அவர்.

கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராகப் போராடுவதைக் கைவிட்டுவிட்டு, என் மரணபரியந்தம் அவர்களுடைய இரட்சிப்புக்காகவே என்னை அர்ப்பணிப்பேன்’ என்று தன் கண்ணோட்டத்தை மாற்றிக்கொண்டார் அவர்.

மற்றவர்களோடு நமக்குள்ள வித்தியாசங்களையும் விருப்பு வெறுப்புகளையும் கையாளுவதில் இவரது தீர்மானம் நமக்கும் உதவியாயிருக்கும். நாமும் ஆவிக்குரிய சிகரங்களை எட்டிப்பிடிக்க அவைகள் நமக்கு பயனுள்ளதாயிருக்கும்.

- ரிச்சர்ட் உம்பிராண்ட்

## அத்தியாயம் 20



# தைரியம் நிறைந்த கன்னிகாஸ்திரீகள்




# தைரியம் நிறைந்த கன்னியாஸ்திரீகள்

- சோவியத் யூனியனிலே இரகசியமாய்ப் பரவிய ஆவணம் ஒன்று அங்குள்ள லேபர் கேம்ப்பிலே இருந்த கத்தோலிக்கக் கன்னியாஸ்திரீகள் கம்யூனிச அந்திக்கிறிஸ்துவுக்காக வேலை செய்ய மறுத்து நின்ற செய்தியைத் தாங்கிப் பரவியது. அவர்கள் விலங்கிடப்பட்டு பட்டினியாய்ப் போடப்பட்டாலும், அதினால் எவ்வகையிலும் அவர்களது நெஞ்சுறுதியை உடைக்க முடியவில்லை. அவர்களின் சாட்சியால் மற்ற கைதிகள் கிறிஸ்துவிடம் திரும்பினர். உண்மையிலே அந்தக் கேம்ப்பிலேயே அது ஒரு கான்வென்ட் போலவே நடந்து வந்தது. அந்த டிட்டென்ஷன் கேம்ப் டைரக்டரின் மகள் ஐரின் மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் போது, அந்த மனிதனுக்கு அந்த சிறுமலர் சகோதரிகளிடம் அவர்களது ஜெபத்துக்காகக் கெஞ்சுவதைத் தவிர வேறு வழியில்லை. கடைசியில் மகள் குணமடைந்தாள்.

- செரச்செங்க்கோ என்ற கம்யூனிஸ்ட் அதிகாரியின் மனைவிக்குப் பிரசவ வேதனை. தாயும் பிள்ளையும் செத்துப் போகும் என்ற நிலையில், கன்னியாஸ்திரிகளில் ஒருவர் சொன்னார், 'தாயும் பிள்ளையும் சுகமாகிவிட்டால் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுப்பேன் என்று நர்ஸிடம் வாக்குக் கொடும்..' என்று சொல்ல, அந்த அதிகாரியோ, அப்படியானால் நான் எல்லாவற்றையும் இழக்க வேண்டியிருக்கும்' என்று சொன்னார்.

*'நல்லது, அப்படியானால் 'எல்லாம்' என்று நீர் சொல்லுபவற்றை ஒரு புறமும், உமது மனைவியையும் பிள்ளையையும் மறுபுறமும் வைத்து, என்ன செய்ய வேண்டும் என்பதை நீரே தெரிந்து கொள்ளும் என்று சொன்னார்.*

*சுகப்பிரவசமாகி தாயும் சேயும் பிழைக்க, பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் அந்த அதிகாரி. அதனால் அவரது வேலை பறிபோனது. புதிய அதிகாரி அந்த சிஸ்டர்களின் உடைகளைக் களைந்து, கைதிகளின் உடையை உடுத்தும்படியாய்க் கட்டாயப்படுத்தின போது அவர்கள், அந்திக்கிறிஸ்துவின் அடையாள ஆடையை நாங்கள் அணிவதில்லை என்று மறுத்துவிட்டனர். அதற்காக அவர்கள் ஆடைகள் உரியப்பட்டு, ஆடையின்றி கொல்லும் குளிரில் நடக்க வைக்கப்பட்டனர். 'எங்கள் பரலோகப் பிதாவே ' என்று பாடிக்கொண்டே நடந்த அவர்களில் ஒருவராவது வியாதிப்படவே இல்லை. திருமதி ப்ரேவர்மன் என்ற நாத்திக சிறை மருத்துவரிடம் கம்யூனிஸ்ட் அதிகாரி ஒருவர், மருத்துவரீதியாக இப்படி நடக்க வாய்ப்புண்டா என்று கேட்டதற்கு, 'பரலோகப் பிதாவை இவர்கள் பாடிக்கொண்டிருந்ததை நீர் கேட்கவில்லையா?' என்று திருப்பிக்கேட்டார். நல்ல அறிவியல் விளக்கம் தான்.*

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

# அத்தியாயம் 21



## அடுத்தவரின் குற்றத்தைத் தானே சுமந்து பாடுபடுதல்




அடுத்தவரின் குற்றத்தைத் தானே சுமந்து பாடுபடுதல்

# போதகர் நிக்கிஃபோரோவ்

தன்னோடு சிறையிலிருந்த விசுவாசி ஒருவர் தனக்குச் சொன்ன கீழ்க்காணும் தன் அனுபவத்தை '*Dust on the Road*' என்னும் தனது புத்தகத்தில் எழுதுகிறார், போதகர் நிக்கிஃபோரோவ் :

'ஒரு நாள் நான் என் வீட்டுக்குத் திரும்பியபோது வீட்டில் ஒரு கதறல் கேட்டது. வீட்டுக்குள் நுழைந்த ஒருவன் என் மனைவியை நெஞ்சில் குத்திக் கொன்றிருந்தான். என்னைக் கண்டதும் என் காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி கேட்டவனிடம், 'நீ போ, இனி இப்படிச் செய்யாதே!' என்று சொல்லிவிட்டு நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று நான் தான் என் மனைவியைக் கொன்றதாகச் சொல்லி, அவனுடைய தண்டனையை என் மேல் ஏற்றுக்கொண்டேன்.'

'நான் அடைபட்டிருந்த க்ரஸ்னோயர்ஸ்க் ஜெயிலே ஒரு கைதி இன்னொருவனைக் கொல்ல, அவனுக்காக அந்தக் குற்றத்தையும் என் மேல் ஏற்றுக்கொண்டு அதற்காக ஆயுள் தண்டனையும் பெற்றேன். நீர் ஒரு போதகராய் இருப்பதாலும், நீ ஏன் இங்கே கைதாகி வந்தாய் என்று நீர் கேட்டதாலுமே உண்மையைச் சொன்னேன், அல்லது சொல்லியிருக்க மாட்டேன். 'அன்பின் தேவனே, தேவதூதர்களாகவே ஒவ்வொரு மனிதனையும் இங்கே காண்கிறேன். கர்த்தாவே, 'நீர் என்னுடையவர், நான் உம்முடையவன் ; என் மீது மனமிரங்கும் '

நிக்கிஃபோரோவ் தொடர்கிறார்.. ‘அந்தக் கைதி மரிக்கும் போது நான் அங்கே இருந்தேன். அந்த நேரத்தில் பரலோகமே திறந்தது போலிருந்தது. ‘கர்த்தாவே, நான் இன்னும் மற்றவர்களுக்காகப் பாடனுபவிக்கவே விரும்புகிறேன். ஆனாலும் உம் சித்தமே நிறைவேறுவதாக !’ என்ற ஜெபமே அவனது கடைசி வார்த்தைகளாய் இருந்தது.

மற்றவர்கள் செய்த குற்றத்துக்காக ஒருவர் பாடனுபவிப்பது என்பது எத்தனை மேன்மையான ஒரு அழைப்பு ! அதுவே அல்லவோ இயேசுவை அப்படியே அச்சு அசலாய்ப் பிரதிபலிப்பது ?

- கம்யூனிஸ லேபர் கேம்ப் ஒன்றிலே வாலிபப்பிள்ளை ஒன்றைக் கல்லால் எறிந்து கொன்றதைத் தன் கண்ணால் கண்ட சாட்சி ஒருவரின் அறிக்கை ஒன்று எங்கள் கைக்கு வந்தது. கை கால்கள் கட்டப்பட்டவளாய் வட்டமாய் நிற்க வைக்கப்பட்டிருந்த கைதிகளின் நடுவில் முழங்காலில் நிற்க வைக்கப்பட்டிருந்தாள் அவள். அவளைக் கல்லெறியும்படியாக சுற்றி நின்றவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. மறுத்தவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். உயிர் பிரியும்போது அவளது முகம் ஸ்தேவானின் முகம் போன்று பிரகாசித்துக்கொண்டிருந்தது. தன் இரத்தத்தினால் தன் சாட்சியை முத்திரையிட்ட அவளது ஜீவனுள்ள சாட்சி மூலம், அவளைக் கண்ட அந்தக் கூட்டத்தில் குறைந்தபட்சம் ஒருவராவது கிறிஸ்துவிடம் மனந்திரும்பினர்.

- சிலுவையில் ஆறு நாட்கள் குற்றுயிரும் குலையுயிருமாய் தொங்கிக் கொண்டிருந்த வாலிபன் ஒருவன் தன்னை அணு அணுவாய்க் கொன்றவர்களுக்காக ஜெபித்துக் கொண்டே ஜீவனை விட்டான்.

- ஐந்து மாணவர்கள் தங்கள் ஆழமான சவக்குழிகளைத் தாங்களே வெட்டி, அதிலே அவர்கள் உயிரோடு புதைக்கப்பட்டபோது, கிறிஸ்தவப் பாடல்களைப் பாடி ஆராதித்துக்கொண்டே மண்ணோடு மண்ணாய்ப் புதைந்தனர்.

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

## அத்தியாயம் 22



# புனித வாழ்வைத் தெரிந்தெடுக்க ஒரு வாய்ப்பு




## புனித வாழ்வைத் தெரிந்தெடுக்க ஒரு வாய்ப்பு

சீனாவிலும், வியட்நாமிலும், மியன்மார் மற்றும் இஸ்லாமிய நாடுகளிலும் இன்னும் உலகின் பல பகுதிகளிலும் எண்ணிக்கைக்கு அடங்காத கிறிஸ்தவக் கைதிகள் எத்தனையோ பேர் உண்டு. ஆவிக்குரிய வகையில் அவர்களுக்கு சம்பவிப்பது என்ன?

நீண்ட முள்கம்பி வேலிகள், உயர்ந்த காவல் கோபுரங்கள், இரவில் சுற்றிச்சுற்றி வெளிச்சத்தைப் பீச்சியடிக்கும் மெகா லைட்கள், நீண்ட வரிசை மரக்கட்டை பங்க்குகளில் கிழிந்த உடையோடு எலும்பும் தோலுமாய்க் காணப்படும் கைதிகளின் வரிசைகள், இரவும் பகலும் ரோந்து வரும் போலீசின் விசில் சத்தங்கள் என்று சிறைச்சாலை வளாகத்துக்குள் நுழைந்த நாள் முதல் இதையே பார்த்துப் பார்த்து ஒரு நல்ல ஆவிக்குரிய மனிதன் கூட தன் ஆவியில் மூச்சடைத்து மூர்ச்சித்துப் போகிறான்.

தன்னுடைய விடுதலைக்குப் பின் வேலன்ட்டைன் சவேலிவா எழுதுகிறார் :

'நாங்கள் அடிக்கடி முழங்கால் ஆழமான சேற்றிலேயே தான் நிற்க வேண்டியிருந்தது. குளிருக்கு நாங்கள் அணிந்திருந்த எங்கள் கோட்டுகளும் சப்பாத்துகளும் எப்போதும் நனைந்து ஈரமாகவே

கழிவறைகளே கிடையாது. முழுவதும் உப்பாய் இருந்ததால், தண்ணீர், குடிக்கக் கூடாததாகவே இருந்தது. அழுக்குத்தரையில் தான் அநேகர் தூங்க வேண்டியிருந்தது. போர்த்திக்கொள்ள தேவையான அளவு கம்பளி கிடையாது. காலையில் எழுந்திருக்கும்போது தலைமயிர் தரையோடு தரையாக பனியில்  உறைந்து விடுவதால் தரையிலிருந்து எழும்பும்போது மிகக் கவனமாய் எழுந்திருக்க வேண்டியதாயிருந்தது. பேன் இல்லாத தலையே இல்லை எனும் அளவுக்கு எல்லாருடைய தலையும் பேன் நிறைந்து முழுவதும் அடைபற்றியதாயிருந்தது. காச நோயினால் அநேகர் மரித்துக் கொண்டேயிருந்தனர். உணவுத் தட்டுப்பாடு ஒரு புறமிருக்க, கொடுக்கப்பட்ட உணவும் சாப்பிடக்கூடாததாகவே இருந்தது. வெயிலும் வெப்பமும் கொல்லுவதாக இருந்தது. இரவும் பகலும் கத்திக் கூப்பாடு போட்டு சபித்துக் கொண்டிருந்த பேய் பிடித்த கிரிமினல்களால் நிறைந்திருந்தது சிறைச்சாலை. மொத்தத்தில் அவர்கள் என் விசுவாசத்தையே அழித்துச் சிதைக்கத் தீர்மானித்திருந்தனர்.' இப்படிப்பட்ட சூழ்நிலையில் வருட காலங்களைக் கழிப்பவர்களுக்கு அன்பு ஒன்றே திருச்சட்டமாக இருக்க முடியுமா அல்லது இப்படிப்பட்ட நிலையில் தங்களைக் கொடுமைப்படுத்துபவர்களை என்ன வேண்டுமானாலும் செய்தாலும் தகும் என்று தங்கள் செய்கைகளை அவர்கள் நியாயப்படுத்தலாமோ?

நான் பதினான்கு வருடங்கள் கம்யூனிசச் சிறைகளிலே இருந்திருக்கிறேன். பசியென்றால் என்னவென்று அறிவேன். மற்ற வலி வருத்தங்களைப் போல, பசி ஒரே விதமான விளைவுகளை ஏற்படுத்துவதில்லை. பசியின் கொடுமை தாங்க முடியாமல் அநேகப் பரிசுத்தவான்களும், மற்றும் பலரும் கூட பன்றிகளைப் போல மாறிவிட்டிருந்ததைப் பார்த்திருக்கிறேன். சக கைதியின் சின்னத்துண்டு ரொட்டியைக் கூட பிடுங்கித் தின்பவர்கள் உண்டு. இன்னும் சிலர் மற்றவர்கருடைய உயிரைக் காப்பாற்ற தங்களுடைய ஒரே ஒரு துண்டு ப்ரெட்டையும் மருந்ததையும் கூட அவர்களுக்குக் கொடுத்துவிடுவதும் உண்டு.  வருங்காலத்தில் எனக்கொரு நித்திய ஜீவன் உண்டு என்ற நிச்சயமான நம்பிக்கையில் நான் கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவோடு ஒவ்வொரு நாளும் உயிர்வாழவும் முடியும், அல்லது மன அழுத்தங்களுக்கு இடம் கொடுத்து உணர்ச்சிபூர்வமாய்ச் செத்த ஒரு வாழ்க்கையே ஒவ்வொரு நாளும் இந்த உலகத்தில் வாழ்ந்து மரிக்கவும் முடியும்.

பவுல் தன் நிருபங்களில் நான்கை சிறையில் தான் எழுதினார். அதில் அதிகபட்ச ஜெபங்கள் உண்டு. ஆனால் ஒன்றிலாவது தான் விடுதலை பெற வேண்டுமென்று அவர் ஜெபிக்கவுமில்லை, மற்றவர்களை ஜெபிக்கக் கேட்கவுமில்லை. கிறிஸ்துவுக்காகச் சிறையிலிருக்கும் அநேகருடைய கடிதங்களை நான் வாசித்திருக்கிறேன். அவைகளில் ஒன்றிலாவது அவர்கள், தங்களுக்கு விடுதலை கிடைக்கும்படி ஜெபிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டதே இல்லை.

வழக்கமாக நம்முடைய அதிகப்படியான ஜெபங்களும் விண்ணப்பங்களும் நமது கடினமான சூழ்நிலைகளிலிருந்து கர்த்தர் நம்மை விடுவிக்கும்படியாகக் கேட்பதாகவே இருக்கிறது. நரமாமிசப்பட்சிணிகளுக்குக் கிறிஸ்துவின் அன்பைக் காண்பிக்கும்படியாகத் தங்கள் ஜீவனையும் பணயம் வைத்து சந்தோஷமாய் அவர்களுக்கு ஊழியம் செய்யச் சென்ற மிஷினரிகள் அநேகருண்டு. ஜான் வில்லியம்ஸ் மற்றும் பிஷப் ஹேனிங்ட்டன் போன்றவர்கள் அப்படிப்பட்டவர்களுக்கு உணவானதும் உண்டு. ‘உங்கள் சத்துருக்களைச் சிநேசியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்’ என்ற ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே அவர்கள் தங்கள் ஜீவனை விட்டனர்.

தாங்கவே முடியாத தலைசுற்றும் நிலைமையிலும் நாம் பொறுமையைக் கடைப்பிடித்தே ஆக வேண்டியுள்ளது. பாடுகளையும் வேதனைகளையும் நமக்குள்ளே அடக்கிக் கொள்ளவும் அவரது கிருபை நமக்குப் போதுமானதாகவே இருக்கிறது. மற்றவர்களுக்காக அவர்களது அடியைத் தாங்களே முன்வந்து அவர்களுக்காக வாங்கிக்கொள்ளும் சகோதர சகோதரிகளும் ஜெயில்களில் உண்டு. ஹிட்லர் காலத்தில் மேரி ஸ்கோப்சேவா மற்றும் மேக்ஸ்மிலியன் கோல்பே போன்றவர்கள் தாங்களே முன்வந்து மற்றவர்களுக்காகக் கொல்லப்படத் தங்களை ஒப்புக்கொடுத்தனர். அவர்கள் மரித்தது ஒரு இரத்தசாட்சி மரணம். கடுங்குளிரில் தங்களுடைய குளிர் ஆடைகளை, மற்றவர்களின் நடுங்கும் நிலை கண்டு கழற்றிக் கொடுத்து விடுபவர்களையும் நான் என் கண்ணால் பார்த்திருக்கிறேன். மற்றவர்களைக் குறித்த கரிசனை, உங்கள் கவலைகளை மறக்கச் செய்கிறது. கிறிஸ்துவுக்காகச் சிறையில் பாடனுபவிக்கும் பரிசுத்தவான்களைப் போல எல்லா சூழ்நிலையிலும் தேவனையே நோக்கிப்பாருங்கள்,

பொறுமையோடு உங்கள் சிலுவையை சுமக்கும்போது பரலோக சமாதானம் உங்களை மூடிக்கொள்வதைக் காண்பீர்கள். எந்த விதிமுறைகளையும் மீறிய, மனிதனைப் பைத்தியமாக்கிவிடும் சூழ்நிலையிலிருந்து வெளிவர வேண்டுமானால், குறைந்தபட்சம் சின்னச்சின்னக் காரியங்களிலாவது அன்பின் விதிமுறையை உங்களுக்குள்ளேயே அமலாக்கி, அப்பியாசிக்கத் தொடங்குங்கள்.

கிறிஸ்துவுக்காகச் சிறைச்சாலைகளிலே கிடந்து, நாம் முகர்ந்து பார்க்கக்கூட அருவருக்கும் உணவுகளையும் உண்பவர்களை நினைவுகூர்ந்து, நீங்கள் அதிகமாய் விரும்பி உண்ணும் உணவு வகைகளைக் குறிப்பிட்ட சில நாட்களுக்குத் தியாகமாய் ஒதுக்கிவைத்து, அங்கே கடுங்குளிரில் கந்தைத் துணிகளோடு நாட்களைக் கழிப்பவர்களை நினைத்து, உங்கள் சுகமான வசதி வாழ்க்கையிலும், சுற்றுலாக்களிலும் சிலவற்றை சில காலம் அவர்களுக்காகத் தியாகம் செய்வீர்களோ?

அங்கே சிறையிலே நள்ளிரவு நேரங்களில் விசாரணை என்ற பெயரில் தலைகீழாய்த் தொங்கவிடப்பட்டு அடித்து நொறுக்கப்படும் விசுவாச சக உதிரங்களை நினைத்து, உங்கள் இரவு நேரத் தூக்கத்தில் சில மணி நேரங்களை தியாகம் செய்து அப்படிப்பட்டவர்களுக்காக ஜெபிப்பீர்களோ ? பல நாட்களாக, மாதங்களாகக் குளித்தே அறிந்திராத அவர்களை எண்ணிப் பார்த்து, அழகு சாதனங்களுக்கும், பியூட்டி பார்லர்களுக்கும் நீங்கள் செய்யும் செலவுகளைக் குறைத்துக்கொள்வீர்களோ ? வெளியுலக மனிதர்களைப் பார்க்கவோ பேசவோ வாய்ப்பே இல்லாமல் வருடக்கணக்காய் பூமிக்கடியிலுள்ள இருண்ட பாதாள டஞ்சன் சதுப்பு அறைகளில் அடைந்து கிடக்கும் சகோதர சகோதரிகளுக்காய், நீங்கள் உங்கள் டிவியிலும் இன்ட்டர்நெட்டிலும் பொழுதுபோக்கிற்காய் செலவழிக்கும் நேரத்தில் ஒரே ஒரு மணி நேரத்தைவிட்டுக் கொடுத்து, அவர்களது நிலைமையை நீங்களும் கொஞ்சமாவது புரிந்துகொள்ள முயற்சித்து உங்கள் நாட்களில் ஏதாவது ஒரு நாள் முழுவதும் மௌன விரதம் காத்துத் தியாகம்செய்ய முன்வருவீர்களோ? சிற்சில அற்பசொற்ப காரியங்களுக்காய் சலித்துச் சிடுசிடுப்பதையும், முறுமுறுப்பதையும் விட்டுவிடுவீர்களோ?

உங்கள் அதிகப்படியான வேலைகளுக்கு மத்தியிலும் கிறிஸ்துவுக்காக ஒடுக்கப்பட்டு நசுக்கப்படுபவர்களுக்காக ஜெபிக்க சற்று நேரம் ஒதுக்குவீர்களோ ?

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

# அத்தியாயம் 23



# இயேசுவின் தோட்டத்தில் ஒரு சிறுமலர்




## இயேசுவின் தோட்டத்தில் ஒரு சிறுமலர்

# அர்மன்டோ & ஜெரால்டோ

அர்மன்டோ வல்லாடரஸ் க்யூபாவின் சிறைச்சாலைகளில் 22 வருடம் சிறை வைக்கப்பட்டிருந்த ஒரு க்யூப கிறிஸ்தவக் கவிஞர். விடுதலையானபின் தன் சிறை அனுபவங்களை எழுதி வெளியிட்டார் அவர். மத சம்பந்தப்பட்ட மற்றும் அரசியல் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்ட 15,000 கைதிகள் கொண்ட க்யூபாவின் ஜெயில்களில் நடந்த பயங்கரங்களை அவர் அதிலே விவரிக்கிறார். 12 வயதே நிரம்பிய சிறுவன் ஒருவன் குப்புறப் படுக்க வைக்கப்பட்டு வல்லுறவு செய்யப்பட்டான். க்யூபாவின் சிறைகளிலே கைதிகள் ஒன்றுமில்லாமல் போகுமட்டும் அடித்து நொறுக்கப்படுவதும், மனிதக்கழிவுகளும் சிறுநீரும் நிரம்பி வழியும் பெரிய பெரிய தொட்டிகளில் கழுத்தளவு நிற்கும்படி அவர்கள் கட்டாயப்படுத்தி மணிக்கணக்காக நிறுத்தி வைக்கப்படுவதும் அன்றாடக் காட்சி.

'தன்னைக் காத்துக்கொள்வதா அல்லது தன் விசுவாசத்தைக் காத்துக்கொள்வதா?' என்ற ஒரே ஒரு விதி தான் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கிரியை செய்ய முடியும். ஆனால் கிறிஸ்தவர்களிடமோ மற்ற எல்லாரையும் விட வித்தியாசமான விதி ஒன்றே உண்டு.

ஜெரால்டோ என்ற விசுவாசி ஒருவர், தான் அடிக்கப்படத் துவங்கும்போதெல்லாம், 'பிதாவே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்' என்று இடைவிடாமல் சத்தமாய்ச் சொல்லிக்கொண்டே இருப்பார். இப்படி ஒரு நாள் சத்தமாய் ஜெபித்துக்கொண்டிருக்கும்போதே சுட்டுக்கொல்லப்பட்டார் அவர்.

ஒரு முறை சிறை வளாகத்தில் நின்று கொண்டிருந்தார் வல்லாடரஸ். 'இத்தனை அடிகளையும் உபத்திரவத்தையும் எதிர்த்து நிற்கும் பெலன் உனக்கு எங்கிருந்து கிடைக்கிறது? விட்டுக்கொடுத்துவிட்டுப் போகிறதற்குப் பதிலாக இவ்வளவையும் தாங்க வேண்டிய அவசியம் என்ன?' என்று ஒரு அதிகாரி அவரிடம் கேட்டார். அப்பொழுது அங்கிருந்த ஒரு பூவைப் பறித்து அவர் அந்த அதிகாரியிடம் காட்டி, 'உலகத்தில் மனிதர்கள் தோன்று முன்னே மலர்கள் இருந்தன. முதலாளித்துவமும் கம்யூனிசமும் செத்து, ஆண்டுகள் பல ஆன பிறகும் கூட இந்த மலர்கள் நிலைத்து நிற்கும். எங்கள் பரிசுத்த வேதாகமம் உண்மையுள்ள மனிதர்களை மலர்களுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறது.

'முள்ளுகளுக்குள்ளே லீலி புஷ்பம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரத்திகளுக்குள்ளே எனக்குப் பிரியமானவளும் இருக்கிறாள்' (உன் 2 : 2) என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுவின் பூந்தோட்டத்தில் ஒரு மலராய் வாழ முயற்சியுங்கள், நீங்களும் என்றென்றுமாய் நிலைத்து வாழ்வீர்கள்' என்று சொல்லி முடிக்க, அது முதற்கொண்டு வேறொரு மனிதனாகவே மாறிப்போன அந்த அதிகாரி, அதன்பின் விசுவாசிகளைத் துன்புறுத்தவே இல்லை.

இப்படிப்பட்ட சகோதரர்களிடமிருந்து நமது சொந்த வாழ்க்கைகளின் துக்கத்தை மேற்கொள்ள நாம் கற்றுக்கொள்கிறோம்.

- ரிச்சர்ட் உம்பிராண்ட்

# அத்தியாயம் 24




## ஆகச்சிறந்த முன்னுதாரணமான சீனப் பெண்பிள்ளைகள்




### ஆகச்சிறந்த முன்னுதாரணமான சீனப் பெண்பிள்ளைகள்

## இருதயம் கல்லாகிப்போன போதகர்

செஞ்சீனாவின் கியாங்ஸியிலே ஒரு போதகரும், அவரது சபையின் இரண்டு வாலிபப்பிள்ளைகளும் மரண தண்டனை விதிக்கப்பட்டனர். சபை சரித்திரத்தில் பல சந்தர்ப்பங்களைப் போலவே, வதைப்பவர்கள் இவர்களையும் பரியாசம் பண்ணி ஆகடியம் பண்ணிக்கொண்டிருந்தனர். ‘உம்முடைய சபையின் இந்தப் பிள்ளைகளை உம்முடைய கையாலேயே சுட்டுக்கொல்லும், நாங்கள் உம்மை விட்டுவிடுவோம்’ என்று சொல்லி எகத்தாளமாய்ச் சிரித்தனர். அவரும் ஒத்துக் கொண்டார். தாங்கள் கொல்லப்படப்போகும் குறிப்பிட்ட நேரத்தில் அந்த வாலிபப் பிள்ளைகள் இருவரும் சிறை வளாகத்தில் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் இருவரது முகங்களும் அவ்வளவு சோகம் நிறைந்ததாய் இருந்தும், அந்த முகங்களில் காணப்பட்ட அமைதியையும் அழகையும் விவரிக்கிறார், இந்தக் காட்சியைத் தன் செல் அறையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த சக கைதி ஒருவர். மனித வழக்கத்தின்படி சொன்னால், அவர்கள் முகங்களில் ஒரு வித பீதி காணப்பட்டாலும், மரணமே நேரிட்டாலும் தங்கள் விசுவாசத்தை மட்டும் விட்டுக்கொடுக்காத ஒரு தீர்க்கமான வைராக்கியம் அவர்கள் முகங்களிலே காணப்பட்டது. காவலர்கள் கையசைத்தவுடன் அவர்களைக் கொல்லும்படி தன் கையில் துப்பாக்கியுடன் முன்னால் வந்தார் அவர்களுடைய சொந்தப் போதகர்.

தான் அந்தக் கம்யூனிசக் காவலர்களோடு செய்த ஒப்பந்தத்தை அவர்களிடம் அவர் சொன்னபோது, அதில் ஒரு பெண்பிள்ளை சொன்னாள்:

‘எங்கள் போதகராகிய நீர் எங்களை சுட்டுக்கொல்லுமுன், நீர் எங்கள் இருதயத்துக்கு எவ்வளவு பிரியமானவர் என்பதை நன்றியோடு நாங்கள் தெரிவிக்க விரும்புகிறோம். நீர் எங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தீர், நித்திய ஜீவனை அடையும் வழியைக் கற்றுக்கொடுத்தீர், இப்பொழுது துப்பாக்கியைப் பிடித்திருக்கும் இதே கையால் எங்களுக்கு இராப்போஜனமும் கொடுத்தீர். நீர் எங்களுக்குச் செய்த எல்லா நன்மைகளுக்கும் பதிலாகக் கர்த்தர் உமக்குப் பலனளிப்பாராக! கிறிஸ்தவ விசுவாசிகளேயானாலும் அவர்களும் பெலவீனமானவர்களே என்றும், அவர்களும் சில வேளைகளில் பயங்கரமான பாவங்களில் விழக்கூடியவர்களே என்றும், ஆனாலும் அப்படிப்பட்டவர்களும் கூட மன்னிப்புப் பெற்று மீண்டு எழ முடியும் என்றும் நீர் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறீர். நீர் இப்பொழுது எங்களுக்குச் செய்யப்போவதைக் குறித்து நீர் மனம் வருந்தும்போது, யூதாஸைப் போல நம்பிக்கையற்றவராய்ப் போய்விடாமல் பேதுருவைப் போல மனந்திரும்பிவிடுவீராக ! தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக! எங்களது கடைசி நினைவு உமது தோல்வியைக் குறித்துக் கோபமும் கசப்பும் கொண்டதல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம். எல்லாரும் இருளான ஒரு சூழலைக் கடந்துபோகத்தான் வேண்டியுள்ளது. இதோ, நாங்கள் நன்றியுள்ள இருதயத்தோடேயே மரிக்கிறோம்..’ என்று சொல்லித் தன் தலையைத் தாழ்த்தினாள். எவ்வித மனந்திரும்புதலின் எல்லையையும் கடந்த அளவுக்கு இருதயம் கல்லாகிப்போன அந்தப் போதகர் அந்த வாலிபப் பிள்ளைகளைத் தன் கையாலேயே சுட்டுக்கொல்ல, அடுத்த குண்டு அதே கம்யூனிஸ்ட்டுகளின் கைகளால் அவரது தலைக்குள் பாய்ந்தது.

இப்போது சொல்லப்பட்ட சம்பவத்தின்படி இல்லாவிட்டாலும், வாழ்க்கையில் நமது உறவுகளில் இப்படிப்பட்ட விரிசல்களும் உரசல்களும் ஏற்படத்தான் செய்கிறது. நாம் நம்பியிருந்தவர்களால் கூட கைவிடப்பட்டுப் போவதையும், நெருங்கிய நண்பர்களால் கூட காட்டிக்கொடுக்கப்படுவதையும் எப்படி எதிர்கொள்ள வேண்டுமென்று இந்த இரத்த சாட்சிகளிடம் கற்றுக்கொள்வோம்.

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

# அத்தியாயம் 25



# கிறிஸ்துவோடு அடையாளம் காணப்படுதல்




# கிறிஸ்துவோடு அடையாளம் காணப்படுதல்

## ராடு ஜின்

சீனாவிலே இரகசிய சபைக் கிறிஸ்தவர்கள், தங்கள் ஆத்தும மணவாளனைத் தாங்கள் சந்தித்து அவரது மார்பில் சாய்ந்து சுகித்து, அவரது பரிசுத்த முத்தத்தைப் பெற்றுக்கொள்வதற்காகச் செல்லும் வழியின் வாசலாகவே தங்கள் மரணத்தைக் கருதுகிறார்கள்.

ஹூனன் மாநிலத்திலிருந்து வந்த ஒரு விநோதமான அறிக்கை இது:

ஒரு ஊழியரைத் தூக்கிலிட்டுவிட்டு மிகச்சீக்கிரமாய்க் கடந்து சென்றுவிட்டனர் கம்யூனிஸ்ட் காவலர்கள். ஆனால் இன்னும் உயிரோடு தொங்கிக் கொண்டிருந்த அவரை விசுவாச சகோதரர்கள் மீட்டனர். தன் கழுத்தில் கயிற்றோடு தொங்கிக்கொண்டிருந்த அந்த நேரத்தில் தன் நினைவுக்கு வந்ததெல்லாம் சிலுவையில் உயர்த்தப்பட்டிருந்த ஆண்டவர் மட்டுமே என்றார் அவர்.

ராடு ஜின் என்பவரால் எழுதப்பட்டு ருமேனிய சிறையிலிருந்து வெளியே கடத்தப்பட்டு வந்த இந்தக் கிறிஸ்தவக் கவிதை இரகசிய சபைகளின் மனநிலையையும் நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது.

இதோ அதின் சாராம்சம்:

'நேற்றிரவு இயேசு என் சிறை அறைக்குள் வந்தார். ஓ! என்ன ஒரு உயரம் அவர்! என்ன ஒரு சோகம் அந்த முகத்திலே!

என் படுக்கை அருகே நின்ற அவர், 'உன் கையை நீட்டி என் காயங்களைத் தொட்டுப்பார்!' என்றார்.

ஒரு காலத்தில் அவரது கைகளிலே விலங்கு மாட்டப்பட்டிருந்தது போல அவரது மணிக்கட்டுகளிலே துருவும் வடுவுமாய் இருந்தது. என் கம்பளிக்குள்ளிருந்து எழுந்து, 'ஆண்டவரே, எத்தனை காலமாய் நீர் இப்படி இருக்கிறீர்? என்று கேட்க, தன் விரலை, மூடிய தன் வாயில் வைத்து, அமைதியாயிரு என்று சைகை காட்டினார். நான் என் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்தபோது, என் வைக்கோல் படுக்கை ரோஜாக்களின் நறுமணத்தால் நிறைந்திருந்தது. ஆனால் இயேசுவோ அங்கே இல்லை. 'ஆண்டவரே, நீர் எங்கே போனீர்?' என்று இரும்புக் கம்பிகளினூடே சத்தமிட்டுக் கூப்பிட்டேன். அப்போது தான் என் கைகளிலே அவருடைய ஆணிகளால் உண்டான காயத்தைக் கண்டேன்.

கிறிஸ்துவின் அச்சடையாளங்களை அந்தரங்க சபைகள் தங்கள் சரீரங்களில் தரித்துள்ளன. இந்த இரகசிய சபைகளை ஆசீர்வதிப்பவர்கள் ஆண்டவரையே ஆசீர்வதிக்கின்றனர். அதற்கு உதவி செய்பவர்கள் அவருக்கு உதவி செய்கிறார்கள். இரகசிய சபைகளிலிருந்து கற்றுக்கொள்பவர்கள் அவரிடமிருந்தே கற்றுக்கொள்கின்றனர். உலகத்தை ஜெயங்கொண்ட இவர்களிடமிருந்து நாமும் கற்றுக்கொள்வோம்!

- ரிச்சர்ட் உம்பிராண்ட்

## அத்தியாயம் 26



# சீன விசுவாச வீரர்கள்




# சீன விசுவாச வீரர்கள்

சீன அந்தரங்க சபை ஒன்றின் போதகர் ஒருவர்..

கம்யூனிஸ்ட் அதிகாரிகளால் கைது செய்யப்படுகிறார்.. அவரை அடித்துத் துவைத்துத் தன் விசுவாசத்தை மறுதலிக்க வைக்க என்னென்னவோ செய்து பார்க்கிறார்கள். ஒன்றும் பலிக்காமல் போகவே, உக்கிரத்தின் உச்சிக்குச் சென்ற அவர்கள் ஒரு சவப்பெட்டியைக் கொண்டு வந்து அவரை தற்குள் படுக்க வைத்துவிட்டுச் சொன்னார்கள், 'கடைசியாய்ச் சொல், இது தான் உன் இறுதி முடிவு. உன் இயேசுவை மறுத்துவிடு. உன்னை விட்டுவிடுகிறோம்..' அவரது ஒரே பதில், 'நான் என் ஆண்டவரை ஒரு போதும் மறுதலிக்கமாட்டேன்..'

அவரை உள்ளே படுக்க வைத்துப் பெட்டியை மூடி ஆணி அடித்துவிட்டுச் சிறிது நேரம் காத்திருந்தார்கள் ஏதாவது சத்தம் வருமென்று.. சத்தமில்லை. இன்னும் கோபம் தலைக்கேற, கத்திக் கொண்டே பெட்டியை உதைத்து மிதித்தனர். ஆனாலும் உள்ளிருந்து மூச்சிழுத்து முனகும் குரல் மட்டுமே வர, கடைசியாய் அவர் மூச்சடைத்துத் துடிதுடித்துச் சாகும்படி அப்படியே உயிரோடு அந்தப் பெட்டியை மண்ணுக்குள் புதைத்தனர்.

சீன அந்தரங்க சபை என்பது எங்கு, எப்போது, எப்படிப்பட்ட சூழல்களில் கூடிவருகிறது என்பது அல்ல, அவர்களது வீட்டு சபை என்பது மக்களால் ஆனது மட்டுமே. ஒரு முறை வருபவர் அடுத்த முறை பங்குபெற வருவாரா என்பதே கேள்வியான சூழல் ஒன்று அங்கே உண்டு.

அப்படி ஒரு வீட்டு சபையிலிருந்து ஒரு இளவயது சைன்ஸ் டீச்சர் ஒருவர் திடீரென்று காணாமல் போனாள். அவள் செய்தது, தன் பள்ளியில் டார்வின் தியரியை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை என்று மறுத்ததே.. சீனக் கலாச்சாரப் புரட்சிக்குப் பின் நல்ல விஞ்ஞான ஆசிரியர்கள் கிடைப்பதே அங்கு அரிதாகிப் போனதால் அவளை எப்படியாவது தங்கள் கொள்கைளுக்கு இணங்க வைக்கக் கம்யூனிஸ்ட்டுகள் படாதபாடுபட்டனர். 'டார்வின் தியரி என்பது தேவனுக்கு விரோதமானது மட்டுமல்ல, அது பொய்யான ஒன்று.. நாம் ஒன்றும் குரங்குகள் அல்ல, தேவனின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்கள்..' என்பதை மட்டும், தான் சித்ரவதைப்பட்டு உடைந்த பற்களோடும் திரும்பிச் சரிந்த தாடையோடும், இரத்தம் வழிய வழிய திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.

இன்று அந்தப் பள்ளியில் அவள் ஒரு ஆசிரியையாய் அல்ல, ஒரு வேலைக்காரியாய் வெளியில் போக முடியாதபடி சிறை வைக்கப்பட்டிருக்கிறாள்.

அருமையான டாக்டர் ஒருவர். 'கிறிஸ்துவை விட சேர்மன் மாவோ சேதுங் தான் பெரியவர்' என்று சொல்லும்படியாய் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு மறுத்துவிட்டவர். செம்படையினர் அவரை அடித்து அவரது ஆஸ்பத்திரித் தரையிலேயே குற்றுயிராய் விட்டுச் சென்றனர். சில நாட்களுக்குப் பின் திரும்பி வந்தவர்களுக்கு அவர் சொன்ன பதில், 'என்னுடைய கிறிஸ்து உண்மையிலே மாவோவை விட மிகப்பெரியவர். அவரே கர்த்தாதி கர்த்தாவும் ராஜாதி ராஜாவுமானவர். வானத்திலும் பூமியிலுமுள்ள எல்லா சிருஷ்டிக்கும் மேலான நாமமுள்ளவர் அவர் ஒருவரே! அவரே கிறிஸ்து !'

இன்னும் அடி, இன்னும் உதை.. கடைசியாக ஆடையெல்லாம் உரியப்பட்ட அந்த வயதான சீனியர் டாக்டரை, அவரது ஆஸ்பத்திரியிலேயே எல்லாருக்கும் முன்பாக ஆறு இஞ்ச் அகலமுள்ள

மாலை 7 மணி முதல் அடுத்த நாள் காலை 10 மணி வரை நிற்க வைத்திருந்தனர். 'இப்பொழுது சொல், உன்னைக் காப்பாற்றும் அதிகாரம் மாவோவின் மக்களான எங்கள் கையிலிருக்கிறதா அல்லது உன் இயேசுவின் கையிலா? எங்கள் மாவோவை விட உன் இயேசு பெரியவராய் இருந்தால் எங்கள் கையிலிருந்து அவர் உன்னைக் காப்பாற்றட்டும்..' அவர் சொன்னார், 'மூன்று நண்பர்களை அக்கினிச் சூளையில் போட்டபோது அக்கினியின் மணம் கூட அவர்கள் மேல் படாமல் அவர்களோடிருந்து காத்தவர் என்னோடும் இருக்கிறார்..'

நடந்தது என்ன? அந்த நிலையிலும் ஆடாமல் அசையாமல் 15 மணிநேரம் அந்த ஆறு அங்குல பெஞ்ச்சில் நின்று கொண்டிருந்த அவரது உடலில் ஒரு தசை கூட அங்குமிங்கும் அசையாமல் அப்படியே நின்றிருந்தது. நிர்வாணமாய் நிற்க வைக்கப்பட்ட அவரைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு வேதனை ஒரு பக்கம். ஆனால் அவரைச் சித்ரவதை செய்தவர்களுக்கோ, 'இந்த வயசான கிழவனுக்கு எங்கிருந்து வந்தது இத்தனை பெலன் ?' என்று ஏமாற்றமும் கோபமும் கொப்பளிக்க, கடைசியாய் ஆஸ்பத்திரி நோயாளிகளின் முன்னிலையிலேயே அவரைத் தூக்கிலிட்டனர். அவருக்கு இன்னும் உயிர் போகாமலிருக்கும்போது அந்தச் செம்படை வீரர்களுக்குள்ளேயே வாக்குவாதம். ஒருவன் அந்தக் கயிற்றை அறுத்து விட, தரையில் விழுந்த அவர், 'நான் தொங்கிக் கொண்டிருக்கும்போது என் இருதயம் உங்களுக்காக உருகியது..' என்று அவர்களுக்குத் தன் கடைசிப் பிரசங்கத்தைச் செய்துகொண்டே, தன் முன்னோடியான ஸ்தேவானைப் போல உயிர்விட்டார்.

ஒரு வீட்டு சபை எப்படியிருக்கும்? அதில் பங்குபெறுபவர்கள் யார் யார்?

அப்படிப்பட்ட அந்தரங்க சபையிலிருந்து பிடிபட்டு இழுத்துவரப்பட்ட இளம்பெண் ஒருவர்.. 19 வயது தான்.. ஜெயிலின் டஞ்சன் அறை ஒன்றில் அடைத்துப் பூட்டினர். பூமிக்குக் கீழான ஒரு இருட்டறை. தரையெல்லாம் ஈரம். அறையின் வாடையே சொன்னது..அது ஒரு மனிதக் கழிவுகளைக் கொண்டுவந்து கொட்டும் இடமென்று.. பூச்சி புழுக்கள் அவளது உடலில் மேய, எலிகளுக்கும் பஞ்சமில்லாதிருந்தது அங்கு.. உட்காரவோ சாயவோ படுக்கவோ இடமில்லை. அப்படியே உட்கார்ந்தாலும் படுத்தாலும் அது அவளது, அல்லது மற்றவர்களின் கழிவுகள் மேலே தான் என்னும் நிலை.

அப்படியே உட்கார்ந்த அவள் கையில் ஏதோ வெதுவெதுப்பாய் ஓடுவது போலிருந்தது. தொட்டுப்பார்த்தாள். இரத்தம்! அடிபட்ட போது வடிந்த இரத்தம் இன்னும் காயவில்லை. உடலெல்லாம் வீங்கிப் போயிருந்தது.

அப்படியே மூச்சைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தவள், தான் கர்த்தருக்காகப் பாடு அனுபவிக்கப் பாத்திரமாய் எண்ணப்பட்டதற்காக அவரைத் துதிக்க ஆரம்பித்தாள். ஆண்டவரை மறுதலிக்க மறுத்திருந்த அவளுக்குக் கிடைத்த அடியும் வேதனையும் தனிமையும் நிறைந்த அந்த இருட்டறை அவளுக்கு சமாதானத்தின் வீடாய் மாறியது. ஆனாலும் பயங்கரமான அந்த இடத்திலிருந்து தன்னை விடுதலை செய்யும்படியாய் அல்ல, 'இப்படிப்பட்ட இடத்திலும் கர்த்தாவே, உம்முடைய சுவிசேஷத்தை அறிவிக்கவும் உமக்கு சாட்சியாய் நிற்கவும், தேவரீர் எனக்கு வாய்ப்பையும் பெலனையும் ஞானத்தையும் கிருபையும் தாரும்..' என்று ஜெபித்தாள்.

நாட்கள் ஆக ஆக வடிந்து கொண்டிருந்த இரத்தம் காய்ந்து, வீக்கம் வற்றி அவளும் அந்த இடத்துக்குப் பழகிப் போய்விட்டாள். ஒரு நாள் அந்தக் கழிவுகள் மேலேயே உட்கார்ந்திருந்த அவள் பாடலொன்று பாடிக் கொண்டிந்தபோது செய்தி ஒன்றை தேவன் அவளுக்குக் கொடுத்தார். 'இது தான் உன் ஊழியம்!'

'ஆண்டவரே, ஒரு மனித முகமும் பார்க்க முடியாத இந்தத் தனிமைச் சிறையிலே யாருக்குப் போய்ப் பிரசங்கிப்பது ?' என்று கேட்டாள் அவள். ஆனாலும் கர்த்தர் தன்னை உபயோகப்படுத்தும்படியாய் ஜெபித்துக்கொண்டே இருந்தாள். திடீரென்று அவளுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. தனக்குக் காவலுக்கு நின்று கொண்டிருந்த செக்யூரிட்டி கார்டிடம் சொன்னாள், 'சார், எனக்கு ஏதாவது கடினமான வேலை கொடுங்கள், செய்கிறேன்.. என்ன வேலைனாலும் கொடுங்க..' என்று சொல்லிவிட்டு, 'இங்கே உள்ள சிறை அறையெல்லாம் அழுக்கும் குப்பையும் நாற்றமும் மனிதக் கழிவுமாய் நிறைஞ்சு கிடக்குது..நான் போய் ஒவ்வொரு அறையா க்ளீன் பண்ணட்டுமா சார் ? கொஞ்சம் தண்ணியும் ப்ரஷ்ஷும் மட்டும் குடுங்க..' என்றாள்.

அவ்வளவு தான். அவன் சரியென்று சொல்லவே, ஒவ்வொரு செல்லிலும் போய், முழங்காலிலும் கையிலுமாக நின்று துடைத்தெடுத்தாள் -கூடவே அந்தந்த செல்லில் இருந்தவர்களுக்கு சுவிசேஷம் சொல்லிக்கொண்டே சென்றாள். அவர்களில் ஒருவராவது, தங்களை யாரும் ஏறெடுத்துப் பார்க்கக்கூட முடியாத அளவு முகமெல்லாம் உருக்குலைந்துபோயிருந்தவர்கள். தங்களையும் நேசிப்பவர் ஒருவர் உண்டு என்றும், தங்களுக்கும் ஒரு நித்திய ஜீவன் உண்டு என்றும் அவர்கள் கேட்டவுடன் அவர்களில் அநேகர் அங்கேயே அப்போதே மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ளத் தொடங்கினர்.

அங்கே அற்புதம் ஒன்று நடந்தது. கைதிகள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டதைக் கண்ட ஜெயிலர்கள், அவர்கள் மனதை மாற்ற எவ்வளவோ முயன்றும் முடியாமல் போகவே, இதற்குக் காரணமான அவளை உட்காரவைத்து, உன் குற்றங்களை ஒப்புக்கொண்டு எழுதிக்கொடு என்று கத்தை கத்தையாய்க் காகிதங்களை அவள் கையில் திணிக்க, தன் ஒப்புதல் வாக்குமூலம் போலவே, தான் அறிவித்த சுவிசேஷத்தைப் பக்கம் பக்கமாய் எழுதிக் கொடுத்தாள் அவள். தன் கீழ் வேலை செய்யும் அதிகாரிகள் யாவரையும் வரவழைத்து, வார்த்தை வார்த்தையாய் ஒவ்வொரு பக்கத்தையும் சத்தமாய் தெளிவாய் வாசித்துக் காட்டினான் அவளது வார்டன். மறைமுகமாய் சுவிசேஷம் அவர்கள் காதுகளுக்குச் சென்றடைய, அதினால் சிலர் தொடப்பட, தமது இரட்சிப்பின் திட்டமொன்றை அமைதியாய் அங்கே செயல்படுத்தினார் தேவன்.

- ரிச்சர்ட் உம்பிராண்ட்

# அத்தியாயம் 27



## இரத்தசாட்சிகளின் குடும்பங்களிலிருந்து வந்த கடிதங்கள்




# இரத்தசாட்சிகளின் குடும்பங்களிலிருந்து வந்த கடிதங்கள்

எல்லாத் துறையிலும் இருக்கிறது போலவே, ஆவிக்குரிய வாழ்க்கையிலும் மூன்று படிகள் உண்டு. முதலாவது ஒருவர் கற்றுக்கொள்பவராய், சீடராய்த் தன் ஆவிக்குரிய வாழ்வைத் தொடங்குகிறார். அடுத்தது அவர் ஒரு ஊழியம் செய்பவராய் மாறுகிறார். கடைசியாக, தேர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்து மற்றவர்களை உருவாக்குகிறவராய் உயருகிறார். புத்தியுள்ள சிற்பாசாரி என்று தன்னையே அழைக்கிறார் பவுல்.

நம்பிக்கைக்குரிய ஊழியர்களாய் மாற வேண்டிய அநேக கிறிஸ்தவர்கள், ஆண்டுகள் பல ஆகியும் பால் குடிக்கும் குழந்தைகளாய் சீஷர்களாகவே இருப்பதைக் கண்டு நான் வருந்துகிறேன். தேறினவர்களாய் மாறி, அநேகரை சீடர்களாய் உருவாக்க வேண்டிய அவர்கள், தாங்கள் இரட்சிக்கப்பட்ட நோக்கமே அறியாமல் வெறுமனே நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர்.

கர்த்தருடைய ஊழியத்திலே அநேக விதமான அழைப்புகள் உண்டு, அதற்கேற்ப அவரவருக்கு அளிக்கப்படும் கிருபை வரங்களும், தாலந்துகளும் உண்டு. 'The voice of the martyts' என்னும் நமது ஊழியத்தில் இணைந்திருக்கும் எல்லோருமே நசுக்கப்படும் சபைக்கு உதவி செய்ய அழைப்புப் பெற்றவர்களே. இரத்தசாட்சிகளின் குடும்பங்களுக்கு உதவி

பாதுகாப்பும் இரகசியமுமான கரங்கள் வழியாக எங்கள் மிஷன் மூலம் உதவி பெற்றவர்களிடமிருந்து பல வருடங்களாக நாங்கள் எண்ணற்ற கடிதங்கள் வரப்பெற்றிருக்கிறோம். எங்கள் பணியை நாங்களே சீர்தூக்கிப் பார்ப்பதற்கு அவைகள் எங்களுக்கு உதவியாய் இருந்திருக்கின்றன.

அவைகளில் சிலவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

★ ஒரு கடிதத்தின் சாராம்சம் இது :

'தங்கள் விசுவாசத்திற்காக எத்தனை பேர் சிறைச்சாலைகளில் இருக்கிறார்களோ, தேவனே அறிவார்..

கர்த்தர் மேல் வைத்துள்ள தங்கள் விசுவாசத்துக்காக அநேகர் தங்கள் பணிகளிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார்கள்..

சபைகளில் நீங்கள் பார்ப்பதெல்லாம் தேய்ந்து மெலிந்து கூடாகிப்போன முகங்களையே! அதிலிருந்தே நீங்கள் தெரிந்துகொள்ளலாம், இவர்கள் சிறையிலிருந்து வந்தவர்களென்று.. குடும்பத்தில் தாய் ஒருவர் மரித்துவிட்டார். அந்தக் குடும்பம் அவரை அடக்கம் பண்ணச் சென்றபோது அங்கே வேதவசனம் வாசிக்கப்பட்டது. ஆனால் அங்கே உளவாளிகள் இருந்தனர். கூடியிருந்த சகோதரர்கள் அங்கு பிரசங்கம் செய்தார்கள் என்று அவர்கள் காட்டிக்கொடுக்கப்பட, அந்த அடக்க ஆராதனைக்கு வந்த சகோதரர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவருக்கு ஐந்து பிள்ளைகளும், இன்னொருவருக்கு ஒன்பது பிள்ளைகளும் உண்டு... நான் இராணுவத்திலே மூன்று வருடம் பணியாற்ற வேண்டியிருந்தது. ஆனால் தேவ வார்த்தையினிமித்தம் கைது செய்யப்பட்டு ஐந்து வருடங்கள் ஜெயிலில் கழித்தேன்... ஆனால் ஒன்று. இவைகளுக்கு மத்தியிலும் நாங்கள் அடைக்கப்பட்டிருந்த கான்சென்ட்ரேஷன் கேம்ப்பிலே துன்மார்க்கமான அநேகர் மனந்திரும்புவதைக் கண்டு தேவனுடைய வார்த்தை வல்லமையாய்க் கிரியை செய்வதற்காக நாங்கள் மகிழ்ந்து களிகூருகிறோம். நாங்கள் அந்த லேபர் கேம்ப்பில் உள்ளவர்களையெல்லாம் கிறிஸ்தவர்களாய் மாற்றிவிட்டோம் என்றும், அதற்கு நானே காரணமென்றும் என்னை வேறொரு இடத்துக்கு மாற்றிவிட்டனர்.

பக்கம் பக்கமாய் பைபிள் வசனங்களை எழுதுபவர் ஒருவரை அங்கு நான் சந்தித்தேன். எப்படி உங்களால் இப்படி எழுத முடிகிறது என்று கேட்டேன். தன் தாயார் சிறுவயது முதல் வேத வசனங்களையே ஊட்டி வளர்த்தார் என்று சொன்னார் அவர். அந்த மனிதருக்கு சிறு பிள்ளைகள் இருக்கின்றனர். அந்த வீட்டின் வேதனையை தேவனே அறிவார். அப்பா எங்கே போனார், ஏன் அப்பா வரவே இல்லை என்று அந்தப் பிள்ளைகள் அரற்றிக்கொண்டே இருக்கின்றன. அவரது மனைவி பிள்ளைகளை விட்டுவிட்டு வயலில் வேலை செய்யப் போகிறார்.

'வாசிலே' என்ற ஒரு வாலிப சகோதரர் வயலிலே வேலை செய்து கொண்டிருந்தார். கம்யூனிஸ்ட்டுகள் வந்து அவரைக் கட்டி இழுத்துக்கொண்டு போனார்கள். அப்படியே ஜார்ஜ் என்பவரைக் கூட கொண்டு போனார்கள்.....' என்று நீண்டு செல்கிறது அந்தக் கடிதம்.

★ தன் ஒன்பது பிள்ளைகளோடு கைவிடப்பட்ட தாய் ஒருவர் எழுதிய கடிதம் இது :

தம்முடைய சிலுவையின் ஒரு சிறு துண்டைச் சுமக்க எங்களுக்குத் தந்திருக்கும் கர்த்தருக்கு மகிமை உண்டாகட்டும். இதைச் சுமக்கும் பெலனையும் கிருபையையும் அவர் எங்களுக்குத் தந்து, தம்மை நேசிக்கும் விசுவாசிகளுக்கு அவர் நியமித்திருக்கும் நேர்வழியான நெருக்கமான வழியிலே ஜீவனுக்குச் சென்று சேர எங்களுக்கு உதவி செய்வாராக! நாங்கள் எங்கள் அப்பத்தைக் கண்ணீரோடே புசித்தாலும், எல்லாவற்றிற்காகவும் கர்த்தரை நாங்கள் துதிக்கிறோம்... இத்தனை தூரமாய் இருக்கும் உங்கள் இருதயத்தை தேவன் எங்களுக்காகத் திறந்ததற்காக நான் கண்ணீரோடு கர்த்தரைத் துதிக்கிறேன். தேவன் உங்களையும் உங்கள் ஊழியத்தையும் ஆசீர்வதித்து உங்கள் கிரியைகளுக்கேற்ற அருமையான பலன்களைத் தருவாராக. அவர் உங்களுக்குத் தீர்க்காயுசையும் நித்திய ஜீவனையும் அருள்வாராக! நாங்கள் தன்னந்தனியாகக் கைவிடப்பட்டபோது, இப்படியே பட்டினியாய்ச் செத்து மடிந்து போவோம் என்று துன்மார்க்கர் சொன்னார்கள். ஆனால் எலியாவைப் பஞ்சகாலத்திலும், தானியேலைச் சிறையிருப்பிலும், அவரைச் சேவித்த யாவரையும் பராமரித்தவர் எங்களையும் பராமரிக்கிறவராய் இருக்கிறபடியால் அவருக்கு ஸ்தோத்திரம்..

தங்கள் தகப்பனார் வீடு திரும்புவார் என்று அவருக்காகக் காத்திருக்கும் ஒன்பது பிள்ளைகளை தேவன் எனக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவர்கள் தகப்பனோ பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்துக்காகத் தன்னுடைய நல்ல போராட்டத்தைப் போராடும்படி தன் ஜீவனைக் கிறிஸ்துவுக்காக பலிபீடத்தில் வைத்துவிட்டு, நானும் பிள்ளைகளும் அந்தப் பாடுகளில் பங்கேற்கும்படி எங்களை விட்டுச்சென்றிருக்கிறார்.

★ கிறிஸ்துவுக்காகப் பெற்றோர் இருவரையும் இரத்தசாட்சியாய் இழந்த ஒரு குடும்பத்திலிருந்து வந்த இன்னொரு கடிதம் இது :

'நாங்கள் அனாதைகளாய் இருக்கிறோம் என்று உங்களுக்கு சொல்லிக்கொள்கிறோம். நீங்கள் எங்கள் மேல் வைத்திருக்கும் கரிசனைக்காக தேவன் உங்களுக்குப் பலனளித்து, எல்லாவித ஆசீர்வாதங்களாலும் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இங்கு எங்கள் வாழ்க்கை எப்படியிருக்கிறது என்று உங்களால் கற்பனை செய்ய இயலாது. படுக்கைக்குச் செல்லும்போது பயத்தோடும், எழுந்திருக்கும்போது பயத்தோடும் நடுக்கத்தோடுமே எழுந்திருக்கிறோம். உபத்திரவம் மிகக் கொடுமையாக இருக்கிறது. கைது செய்யப்படுகிறவர்களுக்கு எண்ணிக்கையில்லை...'

★ இரத்தசாட்சியாய் மரித்த குடும்பத்திலிருந்து வந்த ஒரு கடிதம் இது :

'எங்களுக்கு மரணத்தினின்று ஜீவன் தந்து, தமது சுய சித்தத்தினாலே தமது கரங்களை சிலுவையிலே விரித்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, நீங்கள் எங்களுக்கு அனுப்பித்தந்த உதவிகளுக்காக உங்களுக்கு நித்திய நித்தியமாய்ப் பலனளிப்பாராக! நாம் அவரோடு பாடுபட்டால், அவரோடு மகிமையிலும் ஆனந்திப்போம் என்ற நம்பிக்கையினாலே கிறிஸ்துவின் பாடுகளில் பங்காளிகளாய் எண்ணப்பட்டதற்காக நான் திருப்தியடைகிறேன். அவரது நாமத்திற்காக ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தாலும் அதையும் அவர் மறந்துவிடுகிறவர் அல்லவே! என்னுடைய புதிய ஏற்பாட்டை வாங்கிக்கொண்டு ஒரு மனிதர் எனக்கு 300 ரூபிள் (282/- ரூ) கொடுத்தார். உண்மையிலேயே கர்த்தருடைய வார்த்தைக்காக மனிதர்கள் இங்கே தவியாய்த் தவிக்கத்தான் செய்கின்றனர்.

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

## அத்தியாயம் 28




**எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு..**




# எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு..

கம்யூனிச நாடுகளிலே சுவிசேஷத்தைப் பரப்ப நாங்கள் முடிவுசெய்துவிட்டிருந்தோம். ஆனால் எப்படிப்பட்ட விதத்தில்? வேதத்துக்கு ஏற்ற விதம் ஒன்றே ஒன்று தான். 'எப்படியாகிலும்' சிலரை இரட்சிப்பதே என் நோக்கம் என்று பவுல் எழுதுகிறார் (1 கொரி 9:22). சுவிசேஷம் பரப்புவதிலும் தங்கள் வசதிக்கேற்றபடியே செய்வது என்பது வேதத்துக்கு ஒவ்வாதது.

நாங்கள் கம்யூனிசச் சட்டங்களை மதித்த போதிலும், எங்களுக்கு ஏற்றபடி அதை அர்த்தப்படுத்திக்கொள்கிறோம்.

அடைக்கப்பட்ட இரும்புத்திரை நாடுகளுக்கு நாங்கள் சுவிசேஷப் பிரதிகள் கடத்தின சில முறைகளை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அலாஸ்காவையும் ரஷ்யாவையும் பிரிக்கும் பேரிங் ஜலசந்தியிலும், உக்ரைனுக்கு அருகான கருங்கடலின் கடற்கரைகளிலும், அல்பேனியாவையும் கிரேக்கத் தீவுகளையும் பிரிக்கும் கடலிலும், அந்தந்த நாடுகளின் உள்ளூர் மொழிகளிலுள்ள ஆயிரக்கணக்கான நற்செய்திப் பங்குகளையும், சுவிசேஷப் பிரதிகளையும் காற்றும் நீரும் புகாத பிளாஸ்டிக் பைகளில் அடைத்து, அத்துடன், எப்படிப்பட்ட கம்யூனிஸ்ட் போலீஸையும் கவர்ந்திழுக்கும் சூயிங்கம் பாக்கெட் ஒன்றையும் அடைத்துப் போட்டு விடுவோம்.

பிளாஸ்டிக் பைகள் நீரில் மிதக்கும் வண்ணம் அத்துடன் சிறு மூங்கில் குச்சிகளையும் கட்டிப் போட்டு விடுவோம். அலைகள் அந்தப் பைகளை கரைக்குக் கொண்டு வரும். நாங்கள் திட்டமிட்டபடியே அவைகள் கரைக்கு வந்து சேரும்படி, கடல் காற்றின் தன்மையையும் திசையையும் நன்கு அறிந்து புரிந்தே இவைகளைச் செய்து வந்தோம். எங்கள் செயல்முறை நடைமுறையாகவும் ஆனது.

பின்னாட்களில் அல்பேனியா மதச்சுதந்திரத்துக்குத் தன் கதவுகளைத் திறந்தபோது, இப்படி சுவிசேஷம் தன் கைகளில் கிடைக்கப்பெற்று, அதைப் படித்து மனந்திரும்பிய ஒரு மனிதனைச் சந்தித்தோம். தனக்குக் கிடைக்கப்பெற்ற அதே பாக்கெட்டை மற்றவர்களுக்கும் கொடுக்கும்படியாக கடற்கரையில் அவன் நின்று கொண்டிருந்தபோது, அதை விநியோகித்ததற்காகக் கைது செய்யப்பட்டு ஒன்பது வருடங்கள் சிறையில் கழித்திருந்தான்.

‘இப்படி நாங்கள் செய்ததால் தானே நீ சிறை செல்ல வேண்டியிருந்தது? அதற்காக நீ எங்கள் மேல் கோபமாய் இருக்கிறாயா?’ என்று கேட்டதற்கு, நான் ஜெயிலில் கழித்த வருடங்கள் நான் பெற்றுக்கொண்ட இரட்சிப்புக்கு முன் எம்மாத்திரம் ?’ என்றான். கிறிஸ்துவுக்காக ஒன்பது வருடங்கள் சிறையில் கழித்த பின், முதல் முறையாக ஆலயம் ஒன்றுக்கு அவன் சென்றபோது அங்கே ஒரு முழு வேதாகமம் அவனுக்குக் கிடைத்தது.

மேற்கு ஜெர்மனியிலிருந்து கிழக்கு ஜெர்மனிக்கும், தென் கொரியாவிலிருந்து வட கொரியாவுக்கும் பலூன்கள் மூலம் கிறிஸ்துவின் நற்செய்தி அடங்கிய பாக்கெட்டுகளை அனுப்பியிருக்கிறோம். சுவிசேஷம் அறிவிக்க நாங்கள் பயன்படுத்திய இப்படிப்பட்ட அற்பமான வழிமுறைகளினால் கூட ஜனங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றனர்.

மேலே குறிப்பிட்ட அல்பேனிய மனிதனுக்குத் தேவையாய் இருந்தது இறையியலும் அல்ல, ஒரு முழு வேதாகமும் அல்ல. கிறிஸ்துவினிமித்தம் கட்டப்பட்டவனாக ஒன்பது வருடங்கள் ஜெயிலில் கழிக்க அவனை இரட்சிக்க ஒரே ஒரு சுவிசேஷப் பகுதி போதுமானதாயிருந்தது.

எங்கள் ஊழியங்கள் வளர வளர, சாலை வழியாகவோ, கடல் மார்க்கமாகவோ, டூரிஸ்ட்டுகள் மூலமாகவோ, தூதரக அதிகாரிகள் மூலமாகவோ, எந்த வழியிலும் வேத புத்தகங்களையும், கிறிஸ்தவ நூல்களையும், அடைக்கப்பட்ட நாடுகளுக்குள் கடத்திக் கொண்டிருந்தோம். பிரிண்ட்டிங் மிஷின்களைப் பார்ட் பார்ட்டாகப் பிரித்து அவைகளைக் கடத்தினோம். பின்னர் அவைகள் ஒன்றொரு ஒன்று இணைக்கப்பட்டு இரகசியமான முறையில் சுவிசேஷப் பிரதிகள், வேதப் பகுதிகள் அச்சிடப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள் பயங்கர ஆபத்து நிறைந்தவைகளாய் இருந்தாலும், இதின் மூலம் கிடைத்த பலன்களோ, நாங்கள் பட்ட பிரயாசங்கள், கடந்து சென்ற ஆபத்துகளுக்கு முன்னால் சொற்பமே என்று சொல்லலாம். ருமேனியாவிலும், ஹங்கேரியிலும், ரஷ்யா, எத்தியோப்பியா மற்றும் சீனாவிலும் நூல் நிலையங்களைத் துவங்கினோம். எங்கள் முயற்சிகளில் சற்றும் தளராமல் இரவும் பகலும் ஓடிக்கொண்டே இருந்தோம்.

**- ரிச்சர்ட் உம்பிராண்ட்**

## அத்தியாயம் 29



# ரிச்சர்ட் உம்பிரான்ட் பற்றி..




## ரிச்சர்ட் உம்பிராண்ட் பற்றி..

தனது சொந்த நாடான ருமேனியாவில் கம்யூனிச ஆட்சியில் 14 வருடங்கள் கைது செய்யப்பட்டு, சொல்லமுடியாத சித்ரவதைகளை அனுபவித்தவர் சுவிசேஷ சபைகளின் ஊழியரான போதகர் ரிச்சர்ட் உம்பிராண்ட் அவர்கள் (1909 - 2001). ருமேனியாவில் சிலரே நன்கு அறியப்பட்டவர்கள். அந்த நபர்களில் கிறிஸ்தவத் தலைவர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கல்வியாளர்களில் ஒருவராய்ப் பலரால் பரவலாய் அறியப்பட்டவர் உம்பிராண்ட்.

1945 ல் கம்யூனிசவாதிகள் ருமேனியாவைக் கைப்பற்றி அங்குள்ள சபைகளைத் தங்கள் நோக்கங்களுக்காகத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்த நாட்களில், தங்கள் மீது படையெடுத்த ரஷ்ய இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களிடம் சிக்கிக்கொண்ட தன் ஜனங்களுக்கு மத்தியில் 'அந்தரங்க' ஊழியம் ஒன்றை மிகத்தீவிரமும் வேகமுமாய் மூன்று வருடங்கள் வெவ்வேறு விதத்தில் செய்தார் ரிச்சர்ட். 1948 ல் அவரும், 1951ல் அவரது மனைவி சபீனாவும் கைது செய்யப்பட்டனர்.

அவரது மனைவி டானுபே கால்வாய்ப் பகுதியில் அடிமைத் தொழிலாளியாய் மூன்று ஆண்டுகள் லேபர் கேம்ப்பில் அடைக்கப்பட்டிருந்தார். தனது கம்யூனிசக் கொடுங்கோல் காவலர்களைத் தவிர வேறு எவரையும் பார்க்க முடியாத தனிமைச் சிறையில் மூன்று வருடங்கள் கழித்தார் ரிச்சர்ட் உம் பிராண்ட். அதன் பின் மற்றவர்களோடு செல்லில் அடைக்கப்பட்டவரின் சித்ரவதைகள் அடுத்த ஐந்து ஆண்டுகள் தொடர்ந்தது.

சர்வதேச அளவில் ஒரு கிறிஸ்தவத் தலைவராய் அவருக்கிருந்த மதிப்பினிமித்தம் வெளிநாடுகளின் தூதரக அதிகாரிகள், கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை விசாரித்தபோது அவர்களுக்குக் கிடைத்த ஒரே பதில், அவர் ருமேனியாவை விட்டு ஓடிவிட்டார் என்பதே. அவரது சக கைதிகளைப் போன்ற வேஷத்தில் அவரது மனைவியைச் சந்தித்த இரகசிய போலீசார், அவர் சிறையிலேயே மரித்துவிட்டதாகவும், சிறையின் கல்லறைத் தோட்டத்தில் அவரது அடக்கத்தில் தாங்களும் நின்றிருந்ததாகவும் தகவல் தந்தனர். அவர் மரித்து விட்டதால் அவரை மறந்துவிடும்படியாக ருமேனியாவில் அவரது குடும்பத்தாருக்கும், அவரது வெளிநாட்டு நண்பர்களுக்கும் சொல்லப்பட்டது.

எட்டரை வருட சிறைவாசத்துக்குப்பின் அவர் விடுதலை செய்யப்பட்டவுடனே, அந்தரங்க இரகசிய சபைகளில் தன் ஊழியத்தைத் தொடர்ந்தார் உம்பிராண்ட். இரண்டு வருடங்களுக்குப் பிறகு 1959ம் ஆண்டு, மறுபடியும் கைது செய்யப்பட்டு 25 வருடக் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

1964 ல் பொதுமன்னிப்புப் பெற்று விடுதலையானவர்களில் இவரும் ஒருவர். ஆனால் அவர் மூன்றாவது முறையும் கைதாகிவிடும் ஆபத்தை உணர்ந்த நார்வே சபையினர் அவரது விடுதலைக்காக கம்யூனிச அதிகாரிகளோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அந்நாட்களில் கம்யூனிஸ்ட்டுகள் பொதுமன்னிப்பு என்ற பெயரில் தங்கள் அரசியல் கைதிகளையும், அடைபட்டவர்களையும் 'விற்கத்' தொடங்கியிருந்தனர். அரசியல் கைதிகளின் தலைக்கு 1900 டாலர் நியமித்திருந்த ருமேனிய அரசு, ரிச்சர்ட் உம்பிராண்டின் தலைக்கு வைத்த விலையோ 10,000 டாலர்.

*1966ல் அமெரிக்க செனட்டின் உள்நாட்டு பாதுகாப்புக் கமிட்டிக்கு முன்னால் தன் சட்டையை அவிழ்த்துத் தன் உடலின் மேற்பகுதியிலிருந்த 18 ஆழமான சித்ரவதைக் காயங்களைக் காட்டினர் உம்பிரண்ட். அமெரிக்காவிலும், ஐரோப்பியாவிலும், ஆசியாவிலும், உலகின் பல பகுதிகளிலும் உள்ள நாளிதழ்களில் அவருக்கு நிகழ்ந்தவைகளைக் கம்யூனிச அராஜகங்களின் அடையாளமாகப் படம்பிடித்துக் காட்டின. 1966 செப்டம்பரில் ருமேனிய அரசாங்கம் அவரைக் கொல்லத் திட்டமிட்டிருக்கும் செய்தி அறிந்தும் கூட, எந்தக் கொலை மிரட்டல்களுக்கும் சற்றும் பயப்படாமல் தன் வேலைகளைச் செய்து கொண்டேயிருந்தார் ரிச்சர்ட்.*

*‘இரத்த சாட்சிகளின் குரல்’ என்ற கிறிஸ்தவ நிறுவனத்தை நிறுவிய அவரும் அவரது மனைவியும் உலகமெங்கும் பயணம் செய்து வெவ்வேறு நாடுகளில் முப்பது அலுவலகங்கள் தொடங்கி, இஸ்லாமிய நாடுகளிலும், கம்யூனிஸ்ட் வியட்நாமிலும், சீனாவிலும் இன்னும் பல நாடுகளிலும் தங்கள் விசுவாசத்துக்காக சிறைப்பட்டு ஒடுக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் உதவிசெய்து வந்தனர். ‘தீமை நிறைந்த அமைப்புகளை வெறுத்து ஒதுக்குங்கள்; ஆனால் உங்களை வதைப்பவர்களையோ சிநேகியுங்கள். அவர்கள் ஆத்துமாக்களை நேசியுங்கள், முடிந்தால் அவர்களையும் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்த முயற்சி செய்யுங்கள்’ என்பதே அவரது செய்தியாயிருந்தது.*

*பாஸ்டர் உம்பிராண்ட் எழுதிய எண்ணற்ற புத்தகங்கள், உலகின் பல பகுதிகளில் ஏறக்குறைய அறுபது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ‘இரகசிய சபைகளின் குரல்’ என்றும் ‘இரும்புத்திரை நாடுகளின் பவுல்’ என்றும் கிறிஸ்தவத் தலைவர்கள் இவரை அழைக்கின்றனர்.*

## அத்தியாயம் 30



# சபீனா உம்பிராண்ட் பற்றி..




# சபீனா உம்பிராண்ட் பற்றி..

*போதகர் ரிச்சர்ட் உம்பிராண்டின் மனைவியும், 'இரத்த சாட்சிகளின் குரலின்' உடன் நிறுவனருமானவர் சபீனா உம்பிராண்ட் (1913 - 2000).*

*இன்றைய உக்ரைனில் ஒரு பழமைவாத யூதக்குடும்பத்தில் பிறந்த சபீனா பாரீசில் வேதியியல் படித்தவர். அதன் பின் வேலையினிமித்தமாக ருமேனியாவின் புக்காரெஸ்ட்டுக்குத் திரும்பியவர், அங்கே தனது வருங்காலக் கணவரை சந்தித்து, 1936 ல் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.*

*திருமணமான சில மாதங்களிலேயே தச்சு வேலை செய்யும் ஒரு யூத மனிதனைச் சந்தித்த அவர்கள் கையில், 'இயேசு கிறிஸ்து என்னும் புகழ்பெற்ற யூத மனிதனைக் குறித்துப் படித்து அறிந்துகொள்ளுங்கள்' என்று பைபிள் ஒன்றைப் பரிசாகக் கொடுத்தார் அந்தத் தச்சர். படித்த அவர்கள் மனந்திரும்பி, ஞானஸ்நானமும் பெற்று ருமேனியாவின் புக்காரெஸ்ட்டிலுள்ள யூதர்கள் மத்தியில் ஊழியம் செய்யும் ஆங்கிலிக்கன் மிஷனில் இணைந்தனர். அவர்களது ஒரே மகன் மிகாய்*

*1940 -43 ல் நாஜிக்கள் ருமேனியாவை ஆக்கிரமித்தபோது நாஜி கான்சென்ட்ரேஷன் கேம்ப்புகளில் சபீனாவின் பெற்றோரும், இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரனும் கொல்லப்பட்டனர். பல மொழிகளைச் சரளமாகப் பேசக்கூடிய சபீனாவும் ரிச்சர்டும் 1940 முதல் 1945 வரை சட்டத்துக்கு விரோதமான ஊழியங்களைத் தீவிரமாய்ச் செய்து வந்தனர். போர்க்காலமாயிருந்த அந்த நாட்களில், வாழ முடியாத சேரிப்பகுதிகளிலிருந்து யூதக் குழந்தைகளைத் தப்புவித்துக் கடத்திக் கொண்டுவருவதும், ரஷ்ய வீரர்கள் இருந்த பங்க்குகளில் அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதுமான சட்டத்துக்கு விரோதமான ஊழியங்களில் ஈடுபட்டு பல முறை கைதும் செய்யப்பட்டனர். ஆனாலும் ருமேனியாவின் பிரபல நாளிதழின் முதன்மை ஆசிரியர் மற்றும் பல மதத்தலைவர்களின் தலையீட்டினால் மரண தண்டனையிலிருந்து தப்புவிக்கப்பட்டனர்.*

*இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் உடனடியாக, ஹங்கேரியிலுள்ள அகதிகளுக்குத் தேவையான பொருட்களும் உணவும் கடத்திக் கொண்டுவரும்படிக்கு ரஷ்ய இராணுவ வீரர்களோடு இரயிலின் மேல் கூரையில் கூட்டத்தோடு கூட்டமாய்ப் புடாப்பெஸ்ட்டுக்கு பயணித்து வந்தார் சபீனா. ஒரு இலட்ச ரஷ்ய இராணுவ வீரர்கள் படையெடுத்த ருமேனியாவின் பகுதிகளில் சபீனா மற்றும் உம்பிராண்டின் மிஷினரிப் பணிகள் இரவு பகலாய்த் தொடர்ந்தது. போர்க்காலங்களில் அவர்கள் யூதர்களைத் தங்கள் வீடுகளில் ஒளித்து வைத்தது மட்டுமல்லாமல், இரண்டாம் உலகப் போருக்குப்பின் ரஷ்யப் படைகள் ஜெர்மானியர்களைத் தெருத்தெருவாய் மிருகங்களைப் போல வேட்டையாடியபோது, தங்கள் எதிராளிகளாகிய ஜெர்மானியர்களையும் நேசிக்கும் விதமாக ரஷ்யப் படைகளின் கண்களுக்கு அவர்களைத் தப்புவித்து தங்கள் வீட்டில் ஒளித்து வைத்து, இப்படியாய் அவர்களுக்கும் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தினர்.*

*கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் சுய நோக்கங்களுக்காக ருமேனியாவின் சபைகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபோது, அதில் சிக்கிக் கொண்ட ருமேனியர்களுக்கு மட்டுமல்லாது ரஷ்யப் படைகளுக்கும் இரகசியமாய் இருவரும் ஊழியம் செய்து வந்தனர் . அந்த நாட்களில் பத்து இலட்சம் சுவிசேஷப்பிரதிகளும், ஒரு இலட்சம் புத்தகங்களும் அச்சிடப்பட்டு ரஷ்ய வீரர்கள் காணப்படும், ஹோட்டல்கள், பார்க்குகள், இரயில்வே ஸ்டேஷன்கள் மற்றும் எங்கெல்லாம் அவர்கள் காணப்பட்டார்களோ அங்கெல்லாம் அவைகள் விநியோகிக்கப்பட்டன.*

*1946 மற்றும் 1947 ல் நடத்தப்பட்ட சம்மர் கேம்ப்புகளில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான சபையார் மத்தியில் தேவ செய்திகளைப் பகிர்ந்துகொண்டார் சபீனா. அது தவிர தெருமுனைகளில் கூடிய 5000 பேர் கலந்துகொண்ட கூட்டங்களையும் நடத்தி வந்தார் அவர். முழு அதிகாரத்தோடு பேசும் ஆற்றல் கொண்ட அவர் 1000 பேர் கொண்ட யூத சபை ஒன்றை புக்காரெஸ்ட்டில் தொடங்குவதில் கருவியாய் இருந்தார்.*

*1948 ல் ரிச்சர்ட் கைது செய்யப்படும் அளவுக்கு அவர்களது வேலை அவ்வளவும் தீவிரம் நிறைந்ததாய் இருந்தது. ஆனாலும் அவரது கைதுக்குப் பிறகு, நாடு முழுவதும் இரகசிய அந்தரங்க சபைகளின் ஊழியத்துக்கென்று அநேக இளம் ஊழியர்களை உறசாகப்படுத்தி அதைச் செய்து வந்தார் சபீனா.*

*1951 ல் கைது செய்யப்பட்ட சபீனா ருமேனியா லேபர் கேம்ப்பிலும், சிறையிலும் மூன்று ஆண்டுகள் கழித்தார். அந்த ஆண்டுகளில் சிறையில் அவரது சாட்சியும் ஊழியமும் அநேகரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவந்து சேர்த்தது.*

*1966 ல் ரிச்சர்ட் விடுதலையான பின் ருமேனியாவிலிருந்து அவர்கள் குடும்பம் வெளியேறியது. சபீனாவின் வாழ்க்கையின் அடுத்து வந்த 34 வருடங்கள் உலகமெங்குமுள்ள சுதந்திர நாடுகள் பலவற்றிற்கு பயணம் செய்த அவரும் கணவர் ரிச்சர்டும், தாங்கள் துவங்கிய 'இரத்தசாட்சிகளின் குரல்' நிறுவனத்துக்காக அந்தக் கூட்டங்கள் மூலம், ஒடுக்கப்பட்டு வதைக்கப்பட்டு வந்த சபைகளுக்காகக் குரல் கொடுத்து வந்தனர்.*

# மொழிபெயர்ப்புகள்:




ஒரு கைதியின் டைரி
[ ஹெரலன் பாப்போவ் -
Tortured for his Faith ]




கேட்டகோம்ஸ்
இரத்தசாட்சிகள்
[ Martyrs of Catacombs ]




நீ எனக்கு தண்டாயுதமும்
அஸ்திராயுதமுமானவன்
[ Thou art My battle Axe -
Dr. Paul Enenche ]




கொலையுண்ணப்
போகிறவர்களை விடுவி !
[ He Came To Set The
Captives Free - Dr. Rebecca Brown ]

## புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**MRS. JENIFER ROMILTON**
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

# மொழிபெயர்ப்புகள்:




ரேவன்ஹில்
பேஜஸ்




என்றும் தணியும்
இந்த எழுப்புதல் தாகம்?
[ Rev. லியோனார்ட் ரேவன்ஹில் ]




உடைத்தெறி
[ Breakthrough -
Rudy Lack ]




எழுப்புதல்
எழுத்துக்கள்
[ Assorted Revival Notes ]

## புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**MRS. JENIFER ROMILTON**
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:




என் தகப்பனே என் தகப்பனே !
இஸ்ரவேலுக்கு இரதமும்
குதிரை வீரருமானவரே !




என் மகனாகிய
அப்சலோமே !
என் மகனே ! என் மகனே !




விக்கினத்தின்
மேல் விக்கினம்




சமயம் வாய்த்தாலும்
வாய்க்காவிட்டாலும்...




நீதிமான் மரிப்பதுபோல
நான் மரிப்பேனாக !




முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

# ஆசிரியரின் பிற நூல்கள்




உடைத்தெறி




இரத்தத்தின் சத்தம்




இரத்தத்தின் இரத்தம்




சிவந்த மண்




காத்துக்கொண்டால்
காத்துக் கொள்வேன்




எமர்ஜென்ஸி

# எழுப்புதல் ஏவுகணைகள்

எழுப்புதல் வீரர்களின் என்றும் அழியா எழுத்துக்கள்...






# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:




இனிமேல்
சம்பவிக்கப்போகிறது
என்ன ?




இந்து தேசம்
முதல்
இந்துத்துவா வரை...




மீண்டும்
ஒரு
மிஸா ?




மிஷன் 2024




குருதிப் பிரளயம்




முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்




முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்




இதோ நாட்கள்
வருகிறது !




நாட்கள்
எண்ணப்படுகிறது

# ரிவைவா
ஒரு எழுப்புதல் பயிற்சிப் பாசறை

## வெளியீடுகள்




எழுப்புதலின் அடிப்படைகள், ஆரம்பப் பாடங்கள், ஆணி வேர்கள்.

ரிவைவல் 66 வேத புத்தகத்தின் 66 எழுப்புதல்கள்

ரிவைவல் 66 ( பகுதி 2 ) வேத புத்தகத்தின் 66 எழுப்புதல்கள்

எழுப்புதல் 300 சபை சரித்திரம் கண்ட 300 எழுப்புதல்கள்




எழுப்புதலும் மிஷனரி வரலாறும்

எழுப்புதலும் ( பகுதி 2 ) சுருக்கமான சபை சரித்திரமும்

எழுப்புதலும் வரப்போகும் நாட்களும் ( பகுதி 1 )

எழுப்புதலும் இன்றைய நாட்களும் ( பகுதி 2 )

### புத்தகங்கள் கிடைக்குமிடம்

**அடைபட்ட அக்கினி**

246-B, Pocket-C, Mayur Vihar, Phase-2, Delhi-110091
Cell: 98106 46981 / 99901 03010

# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

- வருகைக்கு முன்னான வசந்தம்
- யோவேல் மறவேல்!
- ஹிட் லைக் ஹிட்லர்
- இதோ நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது !
- நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக !
- ஆத்துமப்பிணைப்பு (Soul Tie)
- விழுந்து நொறுங்கிய விக்ரம் லேண்டர்
- கறுப்பு பெந்தெகோஸ்தே
- ஆரம்பகால இரத்தசாட்சிகள்
- அந்த ஏழை மனிதனை நினைப்பாரில்லை..
- எழுதிவைத்தான் எசேக்கியா!
- எனக்கு உண்டானவைகளில் நான் பெற்றுக்கொள்ளாதது யாது?
- தேவனின் அசையாச் சொத்து
- திரை உலகே ! கலை உலகே !

அடைபட்ட
அக்கினி

**Pastor. Romilton**
Delhi
Mob: +91 98106 46981

LIVING CREATION



# காத்துக்கொண்டால் காத்துக்கொள்வேன் !

கம்யூனிசச் செம்படையின் இரும்புக்கரக் காலங்கள்..ருமேனியாவின் இரும்புத்திரைச் சுவர்களுக்குப் பின்னே.. வெளி உலகால் மறக்கப்பட்ட மனிதர்கள்..ஊழியர்கள்.. கிறிஸ்தவர்கள்.. அங்கே..

புறங்கைகள் விலங்கிடப்பட்டிருக்க, முழங்காலில் குனிந்த நிலையில், தரையில் வீசியெறியப்பட்டிருக்கும் ரொட்டிகளைப் பன்றிகளைப் போலத் தின்று, சுடச்சுட சூடான சூப்பை அதே நிலையில் குடிக்க நிரப்பந்திக்கப்பட்டு, கடைசித் துண்டு ரொட்டியைக்கூட நாவால் நக்கி நக்கி எடுத்து, தங்கள் பாத்திரங்களையும் தங்கள் வாயாலேயே சுத்தம் செய்ய வேண்டிய அந்த நிர்ப்பாக்கிய நிலையையும் தாண்டி ஜெயித்து ஜெயம் கொண்டு நின்ற ஒரு ஜனம் !

நாள் முழுவதும் கால் நீட்டிய நிலையில்,கைகள் முழங்காலைத் தொட, தலை மேல் நோக்கி, இங்குமங்கும் அசைய உத்தரவின்றி, இப்படியே தொடர்ந்து 16 மணி நேர வதைக்குப் பின் தூங்க அனுமதிக்கப்பட்டாலும், தலை மேல் நோக்கி, கால் நீட்டி, கைகள் முழங்காலைத் தொடும்படி நீட்டப்பட்ட நிலையிலேயே இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டும், அதையும் தாண்டி முற்றிலும் ஜெயம் கொண்டு நின்ற ஒரு ஜனம்..

16 கைதிகள் (ஊழியர்களும் விசுவாசிகளும்) ஒருவர் மேல் ஒருவர் படுக்க வைக்கப்பட்டு, சரீர அழுத்தம் தாங்காமல், எல்லாருக்கும் கீழே கிடத்தப்பட்டவரின் அடிவயிறு அழுத்தப்பட்டு, கழிவறையிலே நடக்க வேண்டியது சிறையறையிலேயே நடந்துவிட, அதையும், தன் உள்ளாடையையும் தன் வாயாலேயே சுத்தம் செய்ய பலவந்தப்படுத்தப்பட்டு, அந்த மனிதன் அதை மறுக்க, அவனது கை விரல்கள் கட்டைகளுக்கு இடையே செலுத்தப்பட்டு, நொறுக்கப்படுகின்றன.. அந்நிலையிலும் தன்னை வதைக்கிறவனுக்காக ஜெபித்து, அவனையும் கிறிஸ்துவுக்காக ஜெயித்து ஜெயம் கொண்ட ஒரு ஜனம் !

சிறை வளாகத்தில் ஒரு பெரிய கழிவறைத் தொட்டி.. மலமும் சிறுநீரும் கலந்து நிறைந்து மிதக்க, கழுத்து வரை அதிலே நிற்கும் அளவுக்கு மணிக்கணக்காக அதற்குள்ளேயே நிற்க வைக்கப்படும் ஒரு விசுவாசி..தன்னிலை மறந்து, தன்னிலே அன்புகூறுகிற அவராலே அனைத்தையும் ஜெயம் கொண்டு நின்ற ஒரு ஜனம் !

'வாயைத் திற..!' துப்பாக்கியை வாய்க்குள் செலுத்தி..'இன்று இது தான் உனக்கு இராப்போஜனம்..' என்று சுட, குண்டு வாய் வழியே பின்பக்கமாய்ப் பாய்கிறது.. செத்து விழுந்தாலும், துணிந்து நின்று ஜெயம் கொண்ட ஒரு ஜனம் !

தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொண்டவர்கள் இவர்களே !
தங்கள் நற்சாட்சியின் மூலம் தங்களை வதையாய் வதைத்தவர்களையும் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினவர்கள் இவர்களே !
மரணம் நேரிடுகிறதாய் இருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல்,
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும் சத்துருவை ஜெயித்து நின்றவர்கள் இவர்களே !
மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் இவர்களே !
தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுத்து வெண்ணங்கி தரித்தவர்களாய்,
தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்துக்கு முன்பாக நின்று அவரை சேவிப்பவர்கள் இவர்களே !

'ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ.. ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ.. ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ..' என்று தமது ஏழு சபைகளின் தூதர்களுக்கும் இவர்களைப் பற்றியல்லவோ ஒவ்வொன்றிலும் தெள்ளத் தெளிவாய் எழுதச் சொன்னார் !!
கிறிஸ்துவுக்காகப் பதினான்கு ஆண்டுகள் ருமேனிய சிறைச்சாலைகளின் சித்ரவதை நரகத்துக்குள் இறங்கி, பாதாளத்தை வென்றவரோடு சேர்ந்து தானும் ஜெயித்து வெளிவந்த போதகர் **Richard Wurmbrand** அவர்கள் 1999ல் எழுதிய கடைசிப் புத்தகம் ' **THE OVERCOMERS**.' ரிச்சர்ட் உம்பிராண்டின் **படுவேதனையில் பரமவெற்றி** ஒன்று மட்டுமே தமிழ் கிறிஸ்தவ உலகம் அறிந்தது. ஆனால் அவர் எழுதியுள்ள ஆங்கிலப் புத்தகங்கள் அநேகம் ! கண்ணீரிலும் இரத்தத்திலும் தோய்த்தெடுக்கப்பட்ட பக்கங்கள் ஒவ்வொன்றும் பக்கம் பக்கமாய்க் கதை சொல்லும் ஒரு கதை இது ! நம்மை வெட்கித் தலைகுனியச் செய்யும் நமது தாழ்ந்து போன ஆவிக்குரிய தரங்களைத் தூக்கி உயர்த்தி, நமது திசைமாறிப்போன விசுவாசத்தைத் திசை திருப்பி, 'எனக்காக உன் ஜீவனையும் கொடுப்பாயோ ?' என்று பேதுருவிடம் இயேசு கேட்ட அதே கேள்வியை நம்மிடம் அவர் கேட்கும் கேள்வியாய், நம்மை நாமே கேட்டுக்கொண்டு, நமக்காக ஜீவனைத் தந்த அவருக்காக சகலத்தையும் மறு அர்ப்பணம் செய்ய நம்மை அவருக்கு முன்பாகப் பணிந்து குனிந்து மண்டியிடச் செய்து, நமது ரூபங்களை மறுரூபமடையச் செய்யும் மறக்க முடியாத ஒரு புத்தகம் இது..!

இரும்புத்திரையும் மூங்கில்திரையும் போய், இன்று திரிசூலத்திரைக்குள் தேசமும் சபையும் செல்லப்போகும் நாட்களுக்கு இன்றைய சபையையும் சபையின் இளைய தலைமுறைகளையும் ஆயத்தப்படுத்த எடுக்கப்படும் முயற்சியின் ஒரு சிறு பகுதி இது. வரலாறு திரும்பும் இந்நாட்களிலே இன்றைய இந்தியத் திருச்சபைக்கு இன்றியமையாத ஒரு புத்தகம் இது..!

**'THE OVERCOMERS'** என்ற ஆங்கிலப் பதிப்பின் மொழிபெயர்ப்பாக உங்கள் கைகளில்..

' காத்துக்கொண்டால் காத்துக்கொள்வேன்..! '

அடைபட்ட அக்கினி
246-B, POCKET-C, MAYUR VIHAR,
PHASE-2, DELHI-110 091. MOB: 98106 46981 / 99901 03010

PASTOR. ROMILTON